
பக்கம் 09

பக்கம் 11

பக்கம் 16

பக்கம் 20

20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 32

★

# உதயன்

சுடர் 27
கதிர் 98

வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 20 சனிக்கிழமை (03/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# நேரம் கடந்துகொண்டிருக்கிறது இலங்கைக்கு அமெ. எச்சரிக்கை

## ஜெனிவாவில் நேற்று ஒரேரோ முதல் வேட்டு


மரியா ஒரேரோ

ஜெனிவா, மார்ச் 3

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் இறுதிப் போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்குமான நேரம் கடந்து கொண்டே இருக்கிறது என்று ஜெனிவாவில் எச்சரிக்கை செய்திருக்கிறது அமெரிக்கா.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நேற்று உரையாற்றிய அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்துக்கானதுணைச் செயலாளர்மரியாஒரேரோ இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

"நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறுதல் இன்றி அமைதி நீடித்திருக்காது என்பதை நாம் அனுபவங்கள் வாயிலாக அறிந்துள்ளோம். ஆனால் இலங்கையில் அதற்கான நேரம் கடந்து கொண்டே இருப்பது குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளது" என்றார் ஒரேரோ.

ஜெனிவாவில் நேற்றுமுன் 23

## இலங்கைக்கு சீனா ஆதரவு

பீஜிங், மார்ச் 3

இலங்கையில் இடம்பெற்று வருகின்ற அபிவிருத்தி, சமாதான முயற்சிகள் மற்றும் நாட்டின் இறைமையைப் பாதுகாப்பது போன்றவற்றுக்கு சீன அரசு தனது முழு ஆதரவையும் வழங்குமென உறுதியளித்துள்ளது என 'சின்ஹுவா' செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

சீனாவுக்கு சென்றுள்ள பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை, சீன பாதுகாப்பு அமைச்சர் ஜியாங் குவாங்லி லியாங் சீனத் தலைநகர் பீஜிங்கில் சந்தித்துக் கலந்துரையாடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் என சின்ஹுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின்போது மேலும் கலந்துரையாடப்பட்ட திட்டங்கள் தொடர்பில் அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திகள் வருமாறு:-

இருவருக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சீனப் பாதுகாப்பு அமைச்சர் மேற்கண்ட உறுதிமொழியை 23

## புலம்பெயர் தமிழர்–அரச தரப்பு ஜெனிவாவில் சூடான விவாதம்

ஜெனிவா,மார்ச் 3

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின் பக்க நிகழ்வாக, இலங்கைக்கு ஆதரவு தேடும் நோக்கில் நடத்தப்பட்ட கூட்டத்தில் கடும் வாக்குவாதங்கள் இடம்பெற்றதாக அனைத்துலக ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம்பிற்பகல் 1 மணியளவில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவின் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றுள்ளது. இதில் இலங்கை அரச அதிகாரிகளுக்கும், புலம்பெயர் தமிழர்கள் மற்றும் மனிதஉரிமைகள் அமைப்புகளுக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

சூடான வாக்கு வாதங்கள் நிறைந்த இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் மகிந்த சமரசிங்க, 30 ஆண்டு காலப் போரில் இருந்து 23

## ஜெனிவா விவகாரம்; கூட்டமைப்பு கூடி முடிவு

கொழும்பு, மார்ச் 3

ஜெனிவா தொடர்பில் தமிழ் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நேற்றுக்கூடி இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கூட்டமைப்பு வெளியிட்ட சிறிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இன்று(2/3/12) கூடியது. கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர். அவர்களது கருத்துக்களும் பார்வைகளும் முழுமையாகவும் சுதந்திரமாகவும் பரிமாறப்பட்டன.

ஜெனிவாவில் 23

## வடக்கு, கிழக்கில் படைகள் குறைக்கப்படும்

### இராணுவத் தளபதி அதிரடி அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 3

வடக்கு, கிழக்கில் நிலைகொண்டுள்ள இலங்கைப் படையினரின் எண்ணிக்கையையும், படைத் தலைமையகங்களையும் குறைக்க முடிவு செய்துள்ளதாக இராணுவத் தளபதி அதிரடியாக அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

பாதுகாப்பு, அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கள நிலைமைகளுக்கேற்ப, முழுமையான கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு இலங்கை இராணுவம் தற்போது தயாராகியுள்ளதாகவும் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய கூறியுள்ளார்.

வெள்ளவாயவில் 5ஆவது கெமுனுவோச் பற்றாலியன் தலைமையகத்தில் 23

## ஜெனிவா தீர்மானங்கள் இந்தியா ஆழ்ந்த கவலை

ஜெனிவா, மார்ச் 3

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படும் தீர்மானங்கள் குறித்து இந்தியா கவலை வெளியிட்டுள்ளது.

நாடுகளின் மீது கொண்டு வரப்படும் குறிப்பிட்ட தீர்மானங்கள் ஆக்கபூர்வமான கலந்துரையாடலை பலவீனப்படுத்தும் வகையில் அமைந்து விடலாம், என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தியாவின் பிரதிநிதி கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்தியாவின் இந்தக் கருத்து இலங்கைக்குச் சாதகமானதாக அமையலாம் என்று கருதப்படுகிறது.

சிரியாவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட கண்டனத் தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நடைபெற்ற சிறப்பு விவாதத்தை அடுத்து நிறைவேற்றப்பட்டது.

இந்த வாக்கெடுப்பின் போது, தீர்மானத்துக்கு ஆதரவாக 37 நாடுகள் வாக்களித்தன. சீனா, ரஷ்யா கியூபா ஆகிய நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. இந்தியா இந்த வாக்கெடுப்பில் பங்கேற்காமல் நடுநிலை வகித்தது குறிப்பிடத்தக்கது. 23

## ஐ.நாவுடன் இணைந்து செயற்படுமாறு இலங்கைக்கு நவநீதம்பிள்ளை அழைப்பு

ஜெனிவா, மார்ச் 3

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து வெளியான அறிக்கைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை கவனம் செலுத்தும் என்று சபையின் ஆணையாளர் நவிபிள்ளை (நவநீதம்பிள்ளை) நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை இலங்கை வெளியிட்டமைக்குத் தனது வரவேற்பைத் தெரிவித்த அவர், ஆனால் ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு அதில் பதிலளிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் பல முக்கியமான பரிந்துரைகள் அடங்கியுள்ளன என்றும், இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துடன் 23

## விஜயகாந்த், சரத்குமார் கச்சதீவு வருகின்றனர்



யாழ்ப்பாணம், மார்ச் 3

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவில் கலந்து கொள்வதற்காகத் தமிழக சட்ட சபை உறுப்பினர்களும் நடிகர்களுமான தே.தி.மு.க. தலைவர் விஜயகாந்த், சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார் ஆகியோர் உட்பட அரசியல் பிரமுகர்கள் சிலர் கச்சதீவுக்கு வருகை தரவுள்ளதாக நம்பகரமாக அறியவருகிறது.

இவர்கள் 23

## மீனவர்களுக்கான மானியம் அதிகரிப்பு

எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து, மீனவர்கள் பாதிப்படையாத வண்ணம் வழங்கப்பட்டு வந்த மானியங்களை மேலும் அதிகரிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இதன்படி சிறியரக படகுகளுக்கு மாதாந்தம் வழங்கப்படும் மண்ணெண்ணெய் மானியம் 250 லீற்றரில் இருந்து 375 லீற்றராக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளுக்கான டீசல் மானியம் மேலும் 100 லீற்றரினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## உயர்தரப் பரீட்சை 30ஆம் திகதிவரை விண்ணப்பம்

2012 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் இந்தமாதம் 30 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எச்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார். புதிய பாடத் திட்டம் மற்றும் பழைய பாடத்திட்டம் என்பவற்றுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார். பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர்கள் ஊடாகவும் தனியார் விண்ணப்பதாரிகள் உரிய காலத்திற்குள்ளும் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நெல்லின் விலையை 40 ரூபாவாக அதிகரிக்க கோரிக்கை

நெல் கொள்வனவுக்கான குறைந்தபட்ச உத்தரவாத விலையை 40 ரூபாவாக அதிகரிக்குமாறு அரசிடம் விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். நெல் கொள்வனவுக்கான குறைந்தபட்ச உத்தரவாத விலை இறுதியாக 5 வருடங்களுக்கு முன்னரே மீளாய்வு செய்யப்பட்டதாகவும் வாழ்க்கைச் செலவு மற்றும் உற்பத்திச் செலவு உயர்வடைந்துள்ள நிலையில் குறைந்தபட்ச உத்தரவாத விலையை அதிகரிப்பதற்கான அவசியம் உள்ளதாகவும் அகில இலங்கை விவசாயிகள் சங்கம் தெரிவித்தது.

## மீனவர்கள் கைது

இலங்கை மீனவர்கள் ஐவருடன் பயணித்த படகொன்று இந்திய கரையோரப் பாதுகாப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. திருகோணமலையில் இருந்து தொழிலுக்காக சென்ற மீனவர்களே கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு குறிப்பிடுகிறது. கடல் எல்லையை மீறியதன் காரணமாக கடந்த 28 ஆம் திகதி ஆந்திரப் பிரதேசத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ஆயுள் தண்டனை

ஹெரோயின் வைத்திருந்த நபர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. நேற்றுக் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி லலித் ஜயசூரிய இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். குற்றவாளி பொரளைப் பிரதேசத்தில் 26.5 கிராம் ஹெரோயினைத் தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 2002 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ வைப்பு; திட்டமிட்ட சதியே!

### மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் குற்றச்சாட்டு

**மன்னார் நகர சபைக்கு களங்கத்தை ஏற்படுத்தி, பழியை அவர்கள் மீது போடுவதற்கு குறித்த சில வியாபாரிகள் மேற்கொண்ட சதியே இந்த தீ விபத்து எனத் தெரிய வருகின்றது.**

மன்னார், மார்ச் 3

மன்னார் தினச்சந்தை கடைத் தொகுதியில் ஏற்பட்ட தீ விபத்துச்சம்பவம் தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் வெளி வருகின்றன. எனினும் இந்தச் சம்பவத்துக்கும் குறித்த சந்தையில் உள்ள வர்த்தகர்கள் சிலருக்கும் தொடர்பு இருப்பதாக ஆதாரத்துடன் மக்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் மன்னார் தினச்சந்தை கடைத் தொகுதி இனம் தெரியாத நபர்களினால் தீ வைத்து, எரியூட்டப்பட்டுள்ளது.

இதன் போது குறித்த கடைத் தொகுதியில் இருந்த 55 இற்கும் மேற்பட்ட வியாபார நிலையங்களில் 35 வியாபார நிலையங்கள் எரிந்து சாம்பலாகின.

இதன்போது பல கோடி ரூபா பெறுமதியான வியாபாரப் பொருள்களும் தீயில் எரிந்து நாசமாகின.

ஆனால் சம்பவம் நிகழ்ந்த தினத்தன்று அதிகாலை ஒரு மணியளவில் குறித்த கட்டடத் தொகுதியின் பின் பகுதியில் உள்ள வியாபாரிகள் சிலர் லொறிகளில் இரவோடு இரவாக தமது வியாபாரப் பொருள்களை ஏற்றியுள்ளனர்.

இதனை மன்னார் பிரதேச வாசிகள் பலர் பார்த்துள்ளனர்.

அத்துடன் விபத்தின் போது சுமார் 15 கடைகள் தீ விபத்தில் சேதமடையாது தப்பித்துள்ளன. இந்தக் கடைகளில் சம்பவ தினத்தன்று வியாபாரிகள் இருந்துள்ளனர்.

எனினும் குறித்த சந்தைக் கடைத் தொகுதியில் தீ விபத்து ஏற்பட்டவுடன், இவர்கள் எவரும் இது குறித்து உரியவர்களுக்கு அறிவிக்கவேயில்லை.

பொது மக்களே உரிய அதிகாரிகளுக்கு விபத்து தொடர்பாக அறிவித்தனர். இதன் பின்னரே தீ அணைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

குறித்த சில வியாபாரிகளைக் கட்டடத் தொகுதியில் இருந்து வெளியேறுமாறு மன்னார் நகர சபை நேற்று வெள்ளிக்கிழமை மவரை அவகாசம் வழங்கியிருந்தது. இந்த நிலையில் மன்னார் நகர சபைக்கு களங்கத்தை ஏற்படுத்தி, பழியை அவர்கள் மீது போடுவதற்கு குறித்த வியாபாரிகள் மேற்கொண்ட சதியே இந்தத் தீ விபத்து எனத் தெரிய வருகின்றது.

அத்துடன் இவர்களில் சிலர் குறித்த வியாபாரிகளை வெளியேற்றுவதற்காக நகர சபை மேற்கொண்ட சதியே இதுவென தவறான தகவல்களைப் பரப்பி வருகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் எதிர்காலத்தில் குறித்த சந்தையை மீண்டும் வாராந்தச் சந்தையாக மாற்றி அனைத்து வியாபாரிகளும் தொழில் செய்யும் இடமாகக்க வேண்டும் - என்றுள்ளது. (ங-12)

# மன்னார் கடைத் தொகுதி எரிப்பு மனிதக் கொலைக்கு சமனானது

### வினோ எம்.பி அறிக்கை



மன்னார், மார்ச் 3

மன்னார் தினச்சந்தை கடைத் தொகுதியில் இடம் பெற்ற தீ விபத்து ஒரு நாசகாரச் செயலாக இருக்கும் பட்சத்தில் அந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் - இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

மன்னார் தினச்சந்தை கடைத் தொகுதியில் மன்னார் மற்றும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 60 வர்த்தகர்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பல கடன்களுக்கும், சுமை களுக்கும் மத்தியில் பொருள் களைக் கொள்வனவு செய்து நாளாந்த வியாபாரம் மூலம் கிடைக்கும் வருவாயை வைத்தே இவர்கள் தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

குறித்த தினச்சந்தை கடைத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சம்பவத்தை நான் வன்மையாகக் கண்டிக் கின்றேன்.

குறித்த சம்பவத்தை மனிதக்கொலைக்கு சமனாகவே கருதுகின்றேன்.

குறித்த தீ விபத்தின் காரணமாக 35 வர்த்தக நிலையங்கள் எரிந்து சாம்பலாகியுள்ளன.

எனவே குறித்த சம்பவம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சம்பவமாக இருந்தால், இதில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

அத்துடன் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு நஷ்டஈட்டைப் பெற்றுக்கொடுக்க உரிய அதிகாரிகள் உடன் முன்வர வேண்டும்- என்றுள்ளது. (ங-12)

# உற்பத்தி திறன் செயலமர்வு

கிளிநொச்சி, மார்ச் 3

தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தின் ஏற்பாட்டில் முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி மாணவர்களுக்கு உற்பத்தித் திறன் தொடர்பான செயலமர்வு கடந்த மாதம் 29 ஆம் திகதி நடைபெற்றது.

தேசிய உற்பத்தித் திறன் செயலக வளவாளர்களால் நடத்தப்பட்ட இந்தச் செயலமர்வில் மாணவர்களின் ஆற்றல் மேம்பாடு பற்றிய பல்வேறு விடயங்கள் குறித்து விளக்கப்பட்டது.

ஏராளமான மாணவர்கள் இதில் கலந்து கொண்டு பயன் பெற்றனர். (ங-6)

## நீதிவேண்டும்; எமக்கு வேண்டும் நீதி



மன்னாரில் நேற்று முன்தினம் தினச் சந்தைக் கடைத் தொகுதி இனந்தெரியாதோரால் தீயிட்டு எரிக்கப்பட்டது. இதனைக் கண்டித்து வர்த்தக நிலையங்களை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள் வர்த்தகர்கள். (12)

# பட்டியலில் பெயர் வந்தும் இன்னும் கிடைக்கவில்லை வீடு



குடிசைகளால் நிரம்பியிருக்கும் ஒரு கிராமம்

கிளிநொச்சி, மார்ச் 3

கிளிநொச்சி குமாரசாமிபுரம் கிராமத்தில் வசிக்கும் குடும்பங்கள் எவருக்குமே நிரந்தர வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை என்று அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தக் கிராம மக்கள் தொடர்ச்சியாகப் போரினால் பாதிப்புற்று பல முறை இடம்பெயர்ந்திருந்தனர். நீண்ட காலமாக இந்தப் பகுதியில் அவர்கள் வசித்து வந்த போதும் போர் காரணமாக அவர்கள் அடிக்கடி இடம்பெயர வேண்டியிருந்தது. போர் முடிவடைந்த பின்னர் தற்போது இங்கு மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். தமது காணிகளில் தகரம், தறப்பாள், கிடுகு போன்றவற்றால் தற்காலிக வீடுகள் அமைத்தே இவர்கள் வாழ்ந்து வருகின்றனர். மீள் குடியமர்வு நடவடிக்கைகள் ஆரம்பமாகி நீண்ட காலம் கடந்த போதும் தமக்கான நிரந்தர வீட்டுத்திட்டங்கள் எதுவும் வழங்கப்படவில்லை என்று குமாரசாமிபுரம் மக்கள் ஆதங்கப்படுகின்றனர். அத்துடன் தமது காணிகளுக்கான 'பெமிற்' பத்திரங்கள் அதிகமானோரிடம் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

குமாரசாமிபுரத்தில் 274 குடும்பங்கள் தற்போது வசித்து வருகின்றன. இவர்களில் 125 குடும்பங்களுக்கு கெயர் நிறுவனத்தால் தற்காலிக வீடுகளும், மற்றும் வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

குமாரசாமிபுரம் கிராமம் புன்னைநீராவி என்ற கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த கிராமமாகும். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல கிராம சேவையாளர் பிரிவு அலுவலகங்களில் இந்திய வீட்டுத்திட்டப் பயனாளிகளின் பெயர்ப்பட்டியல்கள் அண்மையில் ஒட்டப்பட்டிருந்தன. இந்திய வீட்டுத்திட்டத்துக்குரிய பயனாளிகள் என்ற விவரத்தில் குமாரசாமிபுரத்தைச் சேர்ந்த 107 குடும்பங்களின் பெயர் விவரங்கள் ஒட்டப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. எனினும் வீடுகள் எதுவும் அமைக்கப்படவில்லை.

எனவே நிரந்தர வீடு இல்லாத நிலையில் அல்லல்பட்டு அவலங்களை எதிர்நோக்கும் தமக்கும் உரியவர்கள் கவனமெடுத்து நிரந்தர வீட்டுத்திட்டங்களை வழங்கி நிம்மதியாக வாழ்வதற்கும் தமது பிள்ளைகள் கற்பதற்கும் ஏற்ற சூழலை ஏற்படுத்தி உதவ வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் கோரி நிற்கின்றார்கள். (ங-426)

# பேராசை வர்த்தகர்களுக்குத் தண்டம்

### கிளிநொச்சியில் விலைக் கட்டுப்பாட்டுத்துறை அதிரடி

**கிளிநொச்சியில் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதி யினரால் திடீர்ப் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது கைது செய்யப்பட்ட ஒரு தொகுதி வர்த்தகர்களே நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.**

கிளிநொச்சி, மார்ச் 3

கிளிநொச்சி நகரப்பகுதியில் அதிகூடிய விலைகளில் பொருள்களை விற்பனை செய்த மற்றும் பொருள்களின் விலைகளைக் காட்சிப்படுத்தாத வர்த்தகர்களுக்கு நீதிமன்றினால் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரப்பகுதியில் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் மேற் கொண்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது மாட்டியவர்கள் கடந்த மாதம் 29 ஆம் திகதி கிளி நொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதி வான் பெ. சிவகுமாரிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

பனடோல் 'காட்' ஒன்றினை 0 ரூபாவுக்கு விற்பனை செய்த நபர் ஒருவருக்கு நீதிவான் ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதித்தார்.

கட்டுப்பாட்டு விலைக்கு மாறாக அரிசியை 70 ரூபாவுக்கு விற்பனை செய்த் இரு வர்த்தகர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா தண் டப்பணம் விதிக்கப்பட்டது.

இதே குற்றத்தைப் புரிந்த பெண் வர்த்தகருக்கும் ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

இதைவிடவிலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாமல் பாண் விற்பனை செய்த மூன்று வர்த்தகர்களுக்கு தலா ஆயிரம் ரூபாவும், துணி வகைகளை விற்பனை செய்த புடைவையக உரிமையாளர்கள் இரண்டு பேருக்கு தலா ஆயிரம் ரூபாவும் தண்டப் பணமாக விதிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி 21ஆம் திகதி மற்றும் பெப்ரவரி மாதங்களில் கிளிநொச்சியில் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதி யினரால் திடீர்ப் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது கைது செய்யப்பட்ட ஒரு தொகுதி வர்த்தகர்களே அன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டிருந்தனர்.

குறித்த வர்த்தகர்கள் தமது வணிக நிலையங்களில் பொருள்களின் விலைகளைக் கட்டாயம் காட்சிப் படுத்தப்பட வேண்டும் எனவும் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டுள்ளனர். (ங-6)

# வவுனியாவில் சுகாதார வேலைத் திட்டம்

வவுனியா மாவட்டத்தில் மத்திய கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் வவுனியா, தெற்கு, வடக்கு ஆகிய கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளின் விசேட சுகாதார வேலைத்திட்டம் ஆரம்பமாகியுள்ளது.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் உள்ள பூந்தோட்டம் மகாவித்தியாலயம், பெரிய கோமரான் குளம் மகாவித்தியால்யம், இலங்கை திருச்சபை தமிழ் மகாவித் தியாலயம், வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம், வவுனியா வடக்கு வலயத்தில் உள்ள தரணிகுளம் கணேச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் முதற் கட்டமாக இந்த விசேட சுகாதார வேலைத் திட்டம் நடைபெறவுள்ளது.தரம் 7, தரம் 8 மாணவர்கள், 500 பேர் முதற் கட்டமாக இந்த சுகாதார வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர்.

இந்தத் திட்டத்தில் முக்கியமாக போசாக்கு தொடர்பான அறிவித்தல்கள் வழங்கப்படவுள்ளன. (ங-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இப்படியும் ஒரு ராஜீகத் தந்திரம்!

கைகளை ஊன்றித் தலையைக் கீழே வைத்துக் கால்களை மேலே வைத்துக் கொண்டு நின்றாலும், ஒருவர் தமக்கு வரக்கூடிய ஆபத்தைத் தடுத்து விட முடியாது என்பது பேச்சு வழக்கில் உள்ள ஒரு வாசகம். அவர் செய்த பாவ, புண்ணியக் கணக்கின் பிரகாரம் அனுபவிக்க வேண்டிய கர்ம வினையை எதிர்கொண்டே ஆக நேரிடும் என்பதனை இலகுவில் விளக்கும் தர்ம வாசகம் அது.

இலங்கை அரசின் வினைப் பயனும், சர்வதேச மட்டத்தில் அதற்கு உண்டாகியுள்ள நெருக்கடி நிலையும் அத்தகையதே. சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் ஆரம்பமாகி நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில், மேற்கு நாடுகள் மற்றும் தேசங்கள் சேர்ந்து இலங்கை அரசு மீது கொண்டு வரவுள்ள பிரேரணையைத் தடுத்து நிறுத்த முடியாது என்பது நிச்சயமாகி விட்டது. சர்வதேச நாடுகள் வைக்கவுள்ள பொறியைத் தவிர்க்க முடியாத நிலை வந்து விட்டது.

புதிய உலக அரசியல் நடைமுறையில், உலக மயமாக்கல் சிந்தனை சகல துறைகளிலும் வேர்விட்டு, விரவிப் படர்ந்துள்ள நிலையில், தான் தனிமைப்படுத்தப்படும் ஆபத்து உண்டாகிவிடும் என்ற அச்சம், இலங்கை அரசுக்கு இப்போது பெரிதாக வளர்ந்து விட்டது.

அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள், இலங்கை குறித்த விவகாரத்தை திடுதிடுப்பென முன்னெடுத்ததாக இலங்கை அரசு கூற இயலாது. ஒழுங்கமைந்த நடைமுறையிலேயே அவை தமது செயல் திட்டத்தை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றன.

உலக நாடுகள் தன்மீது சுமத்திய மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தவறானவை என்று நிலைநாட்டுவதிலும், சர்வதேச மட்ட விசாரணை எதுவும் தேவையற்றது என்ற மனப் போக்குடனுமே எமது நாட்டு அரசு ஆரம்பம் முதலே செயற்பட்டு வந்தது.

தான் சொல்வதையே உள்வாங்கிக் கொண்டு, உலக நாடுகள் செயற்பட வேண்டும் என்று எதிர்பார்த்தது. போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டன என்பதனை மறுதலித்து வாதாடுவதற்கு நல்லிணக்க ஆணைக்குழுவை ஒரு கருவியாக்கும் முனைப்புடன் திட்டமிட்டு அதனை அமைத்தது.

முதலில் அதற்கு ஒப்புதல் அளிப்பதற்குப் பின்னடித்த சர்வதேச நாடுகள், சற்று விட்டுக் கொடுக்கும் மனப் பக்குவத்துடன் ஆணைக்குழுவின் அறிக்கைக்குச் சற்று மதிப்பளிப்பது போன்று காண்பித்து மென்மைப் போக்கைக் கைக்கொண்டன. அதன் வழி நின்று அக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வலியுறுத்தின; சிறிது அவகாசம் வழங்கின.

ஆனால் இலங்கை அரசு, அது விடயத்தில் வேண்டிய, எதிர்பார்த்த செயல்முறைகளில் அக்கறை காட்டாது, தட்டிக்கழிக்கும் போக்கையே கடைப்பிடித்தது. அது குறித்து அதிருப்தி மட்டுமன்றி, ஆத்திரமும் மீறிட மேற்கொண்ட நடவடிக்கையே ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை குறித்துக் காத்திரமான பிரேரணையைக் கொண்டு வருவதற்கு அமெரிக்கா தலைமையில் உலக நாடுகள் பலவும் எடுத்த முடிவும் அதன் வழியான பின்வரும் பிரேரணைகளும் எனலாம்:

*கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு அறிக்கையிலுள்ள காத்திரமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசுக்குக் கோரிக்கை விடுக்கின்றோம். தனக்குரிய சட்ட ரீதியிலான கடமைகளை நிறைவேற்ற உடன் நடவடிக்கை எடுக்குமாறும், சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறும், நம்பகமான சுயாதீன விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துமாறும் கோருகிறோம்.

*மனித உரிமைகள் பேரவையின் 20ஆவது அமர்வுக்கு முன்னர் ஒருங்கிணைந்த நடவடிக்கைத் திட்ட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு இலங்கை அரசைக் கோர வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும், அதேவேளை, சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரணைக்கு உட்படுத்துமாறும் இலங்கை அரசைக் கோர வேண்டும்.

*மனித உரிமைகள் தூதுவர் அலுவலக அதிகாரிகள், சம்பந்தப்பட்ட விசேட பிரமுகர்கள் ஆகியோரை உற்சாகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனை, மற்றும் தொழில் நுட்ப உதவி ஆகியவற்றைப் பெறுமாறு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும்.

இவற்றுக்கு மத்தியில், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் சார்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றிய டென்மார்க் வெளிவிவகார அமைச்சர் வில்லி சொவ்டல் அம்மையார் வெளியிட்ட கருத்து, இலங்கை அரசாங்கத்தைச் சிந்திக்கத் தூண்டும் என நம்பலாம்.

இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதே வேளை ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையுடன் இணைந்து செயற்படவும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கைக்கு ஊக்கமளிக்க வேண்டும்- என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தி உள்ளது.--

அங்கு மனித உரிமை மீறல்களுக்குத் தண்டனை வழங்குவது தீர்க்கப்படாமல் நிலுவையில் உள்ளது. இதற்குப் பதிலளிக்கப்படாவிடில் அது இன்னும் பல தலைமுறைகளுக்கு நீட்டிச் செல்லப்படும். இதனை உலகின் எந்த நாடும், எந்தச் சமூகமும் ஏற்க முடியாது. இலங்கை விடயத்தில் இது நூறு வீதம் உண்மை-- என்றும் ஐரோப்பிய நாடுகள் ஒன்றியத்தின் சார்பில் காத்திரமான கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய மனுநீதி சார்ந்த நிலைப்பாடுகளை இலங்கை அரசு காதில் போடும் என்று எதிர்பார்க்க முடியவில்லை.

இத்தகைய பல பின்னடைவுகளை கூட்டிப்பெருக்கி வரும் இலங்கை அரசு-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இப்போது ஜெனிவாவில் நடைபெறும் கூட்டத் தொடரில் தனது நிலைப்பாட்டை எடுத்துச் சொல்லவும், விசேட ராஜதந்திரிகள் குழுவை அமைத்துள்ள இலங்கை அரசு, அதன் தலைவராகத் தமிழ்ப் பெண் தமரா குணநாயகத்தை நியமித்துள்ளது.தமிழர்கள் விவகாரத்தால் அரசுக்கு எதிராக எழுந்துள்ள சர்வதேச அழுத்த அலையை, தமிழர் ஒருவரைக் கொண்டே அமுக்கிக் காட்டுகிறேன் பார்! என்று சர்வதேசத்துக்குச் சவால் விடுவது போன்ற செயற்பாடு இது! தமிழ் மக்களுக்கு எந்த வித கேடும் விளைவிக்கப்படவில்லை என்று, ஒரு தமிழ்ப் பெண் மூலம் ஊதிப்பெருப்பித்துச் சோடித்து நம்பவைக்கும் தந்திரமான உத்தியைக் கையில் எடுத்திருக்கிறது அரசு!

தான் விதைத்த வினையை சில்லறைத் தந்திரங்களால் எதிர்கொள்ள நினைக்கும், திட்டமிடும் இலங்கை அரசு, மனித உரிமைகள் பேரவையில் சர்வதேசங்களுடன் போர் நடத்த முனைந்து விட்டதால், தனது செயற்பாடுகளைச் சரிப்படுத்த எட்டப்பர் [illegible] யில் நியாயப்படுத்த முனைவது-

கண்ணை மூடிக்கொண்ட பூனை, பூலோகம் இருண்டு விட்டது என்று நினைப்பது போன்று ஒரு விம்பத்தைத் தோற்றுவிக்கிறது.

# தாய்-சேய் நலத்தை மேம்படுத்த ஆஸ்பத்திரிகளுக்கு உபகரணங்கள்

## ஐ.நா. சனத்தொகை நிதியம் வழங்கியது

யாழ்ப்பாணம், மார்ச்.3

வடமாகாணத்தின் தாய் சேய் நலத்தை மேம்படுத்தும் பொருட்டு, ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியத்தினால் 50 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வடமாகாண ஆளுநரிடம் கடந்த மாதம் 29 ஆம் திகதி கையளிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு இந்த உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிக்கும், வடமாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநரின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன் போதே மேற்படி உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

தாய்- சேய் நலத்தை மேம்படுத்தும் வகையிலான பல்வேறு நவீன உபகரணங்களை உள்ளடக்கிய 50 மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் இலங்கை பிரதிநிதி, வடமாகாண ஆளுநர், ஆளுநரின் செயலாளர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் மேற்படி கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

யாழ்.மாவட்டத்துக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் பருத்தித்துறை, சாவகச்சேரி, நெல்லியடி, வல்வெட்டித்துறை, அச்சுவேலி, சண்டிலிப்பாய், கோப்பாய், சங்கானை ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கே பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# கட்டணங்கள் அதிகரித்த போதும் இ.போ.ச. இன்னும் நட்டத்தில்

கொழும்பு, மார்ச்.3

எரிபொருள் விலைகள் உயர்ந்துள்ளதன் காரணமாக பஸ் கட்டணங்கள் மீளாய்வு செய்யப்பட்டுள்ள போதிலும் இலங்கைப் போக்குவரத்துச் சபை இலாப மீட்ட முடியாத நிலையில் உள்ளதாகப் போக்குவரத்துப் பிரதி அமைச்சரான ரோஹண திஸாநாயக்க கூறினார்.

எரிபொருள் விலையேற்றத்துக்கு முன்னர் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நாளாந்த வருமானத்தில் 51 வீதம் வரையிலான தொகை எரிபொருள்களுக்காகச் செலவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டு பஸ் கட்டண்ங்கள் உயர்த்தப்பட்டுள்ள போதிலும் சபையின் நாளாந்த வருமானத்தில் 61.38 வீதமான தொகை எரிபொருள்களுக்காகச் செலவாவதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

> எரிபொருளுக்கு செலவிடும் தொகையைக் கூட இ.போ.ச.வால் ஈட்டிக்கொள்ள முடியாதுள்ளது.

இதற்கமைய, எரிபொருள்களின் விலைகள் அதிகரிப்பதற்கு முன்னர் 2கோடி 32 லட்சத்து 12 ஆயிரத்து 644 ரூபாவும், எரிபொருள்களின் விலைகள் அதிகரித்ததன் பின்னர் 3 கோடி 17 லட்சத்து 79 ஆயிரத்து 215 ரூபாவும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு நாளாந்தம் செலவாவதாகவும் இது முன்னர் செலவான பெறுமதியைவிட 85 லட்சத்து 66 ஆயிரத்து 571 ரூபாவினால் அதிகரித்துள்ளதாகவும் பிரதியமைச்சர் கூறினார்.

பஸ்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டபின்னர் ஒட்டு மொத்த நாளாந்த வருமானம் 82 லட்சத்து 87 ஆயிரத்து 466 ரூபா எனவும் எரிபொருள்களுக்குச் செலவாகும் தொகையைக் கூட இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் ஈட்டிக் கொள்ள இயலாதுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-22)

# ஒரு வருடமாகியும் வெளிவராத முடிவுகள்

சாவகச்சேரி.மார்ச்.03

வடக்கு மாகாண அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களின் இரண்டாவது வினைத்திறன்களின் பரீட்சை முடிவுகள் ஒரு வருடமாகியும் வெளிவராதது குறித்து பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் மார்ச் மாதம் பரீட்சை நடத்தப்பட்ட போதிலும் இதுவரை முடிவுகள் வெளியாகாததால் சில அலுவலகங்களில் இவ் உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றத்தை இடைநிறுத்தி வைத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (த-9)

# விவாதப் போட்டி ஞாயிறன்று

யாழ்ப்பாணம், மார்ச்.3

சட்டபீட மாணவர் சங்கத்தால், வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையே இன்று நடத்தப்படவிருந்த விவாதப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிக்கு பல்கலைக்கழக கலைப்பீட மண்டபத்தில் இடம் பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-5)

# அங்கவீனருக்கு கொடுப்பனவு

தென்மராட்சி,மார்ச்.3

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் உள்ள 34 அங்கவீனர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பயனாளிகளை நாளை மறுதினம் திங்கட்கிழமை தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவு மாதாந்தம் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (த-9)

# கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச்.3

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆர். ரவீந்திரன் கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இவர்களுக்கான இடமாற்றம் கடந்த முதலாம் திகதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் இவர்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமையே கடமையைப் பொறுப்பேற்கவுள்ளனர். (த-3)

# வடக்கில் இரண்டு முதியோர் இல்லங்கள்

யாழ்ப்பாணம்.மார்ச்.3

வடமாகாணத்தில் முதல் முறையாக இருஇடங்களில்முதியோர்இல்லங்களை ஆரம்பிக்க மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் வைத்தியசாலையிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரி வைத்தியசாலையிலும் முதியோர் இல்லங்கள் திறக்கப்படவுள்ளன. கடந்த 29ஆம் திகதி [illegible] நடைபெற்ற கூட்டத்தில் ஆளுநர் இந்தத் தகவலை தெரிவித்ததாகத் தெரிய வருகிறது. (த)

# நிகழ்வுகள் இன்று

### பெருமங்கல விழா

ஆன்மீக குரு அருள் திரு அடிகளாரின் 72 ஆவது அவதாரத் திருநாள் பெருமங்கல விழா பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. டாக்டர்.சக்தி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் வடகிழக்கு வலய முகாமையாளர் விஜயசுந்தரம் அருளானந்தன் கலந்துகொள்வார். (த-14)

### கூட்டம்

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர் குழுக் கூட்டம் காலை 9.30 மணிக்கு சங்கப் பணிமனையில் வி.ஆர்.றஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-14)

### திறப்புவிழா

கர்வல்ஹோ ஒப்ரிக்கல்ஸிசின் யாழ். கிளைத் திறப்பு விழா பிற்பகல் 2 மணிக்கு கல்வியங்காடு சுப்பர் மார்க்கெட், இல 10/1 பருத்தித்துறை வீதி, நல்லூரில் திறந்து வைக்கப்படவுள்ளது. (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர வீடுகள் இல்லாமல் தவிக்கும் 4,447 குடும்பங்கள்

## கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் மட்டும்

கிளிநொச்சி, மார்ச் 3

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் 4 ஆயிரத்து 447 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவையிருப்பதாக கண்டாவளை பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

**கண்டாவளைப் பிர தேசத்தின் 15 கிராம அலுவலர் பிரிவுகளில் 7ஆயிரத்து 429 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 938 பேர் மீள்குடியேறியுள்ளனர்.**

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தின் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கருத்துத் தெரிவித்த கண்டாவளைப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், கண்டாவளைப் பிரதேசத்தின் 15 கிராம அலுவலர் பிரிவுகளில் 7ஆயிரத்து 429 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 938 பேர் மீளக்குடியேறியுள்ளனர். இதில் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் மூலம் 1616 வீடுகளை கட்டிக் கொடுக்க முடிந்துள்ளது.

மேலும் 4 ஆயிரத்து 447 வீடுகள் தேவையாகவுள்ளன. இதில் ஆயிரத்து 50 குடும்பங்கள் சொந்தக் காணிகள் இன்றியுள்ளன. இவர்களில் ஏராளமானவர்கள் மத்திய வகுப்புக் காணிகளில் இருப்பதால் அவர்களது காணிப் பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டியுள்ளது - என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பகுதியளவில் சேதமடைந்த வீடுகள் யு.என். ஹபிற்றர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளன எனவும் மேலும் 150 வீடுகள் புனரமைக்க வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(த-6)



57 ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 19வயதுப் பெண்கள் பிரிவில் வட்டக்கச்சி மகாவித்தியாலயம் சம்பியனானது. வெற்றிக் கிண்ணத்துடன் பாடசாலை அதிபர், பயிற்சி ஆசிரியை, ராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் சம்பியனான வீராங்கனைகள்.

# சின்னப் பல்லவராயன்கட்டில் சட்டவிரோத மணல் அகழ்வு

அக்கராயன், மார்ச் 3

பூநகரி சின்ன பல்லவராயன் கட்டுக்குள வான்பகுதியில் சட்ட விரோத மணல் அள்ளும் செயல் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைப்பதற்கு மணல் அனுமதி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்ட போதிலும் அந்த அனுமதியை வைத்துக் கொண்டு இந்தப் பகுதியில் அதிகளவான மணல் சேகரிப்பு நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பூநகரியில் எந்தப் பகுதியில் மணல் அகழும் செயல் நடைபெற்றாலும் அந்தப் பகுதி விரைவில் உவராகும் அபாயம் உள்ளதெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை குடமுருட்டி ஆற்றிலும் மணல் அள்ளும் செயல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

(த-18)

# சான்றிதழ் வழங்கல்

கிளிநொச்சி, மார்ச் 3

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியில் சுவிஸ்சிவன் கோயில் சைவத் தமிழ்ச் சங்கத்தின் நிதியுதவியுடன் இயங்கி வரும் அன்பே சிவம் கணினி கற்கை நிலையத்தில் கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

கடந்த 28 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 11 மணிக்கு மேற்படி நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி முதல்வர் தி.வரதன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கணினி பயிற்சிகளை நிறைவு செய்து கொண்ட 29 மாணவர்களுக்கு இச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மிகவும் பின்தங்கிய மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் வகையில் இக் கணினி கற்கை நெறி வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிமனையின் நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.இதயராஜன், கரவெட்டி தபாலதிபரும், அன்பே சிவம் அமைப்பின் தலைவருமான ஏ.அருளானந்தசோதி, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் த.பேரின்பராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக அன்பே சிவம் இணைப்பாளர் கே.குமணன், கிளிநொச்சி கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினைச் சேர்ந்த பி.மணிவண்ணன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

(த-6)

# ஏ-35 வீதி ஊடாக ஏப்ரலில் மின் விநியோகம்

கிளிநொச்சி, மார்ச் 3

ஏப்ரல் மாதத்துக்கு முன்னதாக பரந்தன், புதுக்குடியிருப்பு ஏ-35 வீதியினூடாக மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படும் என கிளிநொச்சி மாவட்ட மின்சார சபையினர் தெரிவித்தனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தின் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று முன்தினம் பகல் 10 மணிக்கு தருமபுரம் நெசவு நிலைய மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. இதில் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட மின்சார சபையிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த மின்சார சபை அதிகாரி,

தற்போது கிளிநொச்சிப் பகுதியின் பல்வேறு பகுதிகளுக்கும் வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் மின்விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது ஏ-35 வீதியினூடான மின்சார விநியோகம் செய்வதற்குரிய வேலைத் திட்டங்கள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் பத்து நாள்களுக்குள் கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்கு மின்சாரம் வழங்கப்படும். அதேவேளை ஏப்ரல் மாதத்துக்கு முன்னதாக ஏ-35 வீதியை அண்டிய பகுதிகளில் உள்ள பாடசாலைகள், அரச அலுவலகங்கள், பொது நிறுவனங்கள் என்பவற்றுக்கு மின்விநியோகம் மேற்கொள்ளப்படும். அதன் பின்னர் ஏனைய மக்களுக்கான மின்விநியோகம் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.சிறிநிவாசன், கண்டாவளைப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பிரதேச சபையின் தலைவர் நா.குகராஜா, நீர்ப்பாசன பிரதித் திட்டப் பணிப்பாளர் சு. சுதாகரன் மற்றும் திணைக்கள அதிகாரிகள், கிராம அலுவலர்கள், பொது மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(த-6)

# பயிர் அழிவுகளுக்கான இழப்பீடுகள் இல்லை

## அக்கராயன் விவசாயிகள் கவலை

அக்கராயன், மார்ச் 3

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் வான்பகுதியின் கட்டுமானங்கள் உடைவடைந்து பெருமளவு நெற்பயிர்கள் அழிவடைந்த நிலையில் பயிரழிவுகளுக்கான இழப்பீடுகள் வழங்கப்படவில்லையெனப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

**50 ஏக்கருக்கு மேல் இந்தப் பகுதியில் பயிரழிவு கள் ஏற்பட்டன. இதற்கான இழப்பீடுகள் வழங்கப்படும் என அரச உயரதிகாரிகள் வாக்குறுதியளித்தனர்.**

50 ஏக்கருக்கு மேல் இந்தப் பகுதியில் பயிரழிவுகள் ஏற்பட்டன. இதற்கான இழப்பீடுகள் வழங்கப்படும் என அரச உயரதிகாரிகள் வாக்குறுதியளித்தனர். ஆனால் இழப்பீடுகள் இதுவரை வழங்கப்படவில்லை. இதேவேளை தவறான கட்டுமானப் பணிகாரணமாக வெள்ளம் பாய்ந்து கிரவல் மண் வயல் நிலங்களில் பரவிக் கிடக்கின்றது.

அத்துடன் வயல் நிலங்களில் பல குழிகள் உருவாகியுள்ளன. இக் குழிகளை சீர் செய்து தருமாறு விவசாயிகள் நீர்ப்பாசன திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(த-18)

### கண்ணகிபுரத்தில் சட்டவிரோத செயற்பாடுகள்

கிளிநொச்சி அக்கராயன் கண்ணகிபுரத்தில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அக்கராயன் பொலிஸ் நிலையத்தில் கூடுதலான பொலிஸார் பணியில் ஈடுபட்டுள்ளமையால் அக்கராயன் கரித்தாஸ் குடியிருப்பு, கெங்காதரன் பகுதிகளில் சட்டவிரோத மது உற்பத்தி, விற்பனை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் முக்கொம்பன், கண்ணகிபுரம் கிராமங்களில் சட்டவிரோத மது உற்பத்தி, விற்பனை காணப்படுகிறது.

இதேவேளை வன்னேரிக்குளம் கிராமத்தில் சட்ட விரோத மது உற்பத்தி, விற்பனை இடம்பெறுகிறது. அத்துடன் களவாக மரம் தறித்தல், பலகை அரிதல் தாராளமாக இடம்பெறுகிறது. இவ் விடயங்களில் பொலிஸார் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

(த-18)

# கரைச்சிப் பிரதேச சபையில் வாகன வசதிகள் இல்லை

## பணிகளை முன்னெடுக்க முடியாத நிலை

கிளிநொச்சி, மார்ச் 3

கரைச்சி, கண்டாவளை ஆகிய இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உள்ளடக்கிய கரைச்சிப் பிரதேச சபையில் தேவைக்கேற்ப வாகன வசதிகள் இல்லாததனால் மக்களின் தேவைகளை இனங்கண்டு உடனுக்குடன் செயற்பட முடியாத நிலை நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ளது. இருந்த ஒரே ஒரு வாகனமும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் போக்குவரத்து வசதிகள் முற்றாக முடங்கியுள்ளன.

**58 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவு களைக் கொண்ட கரைச்சிப் பிரதேச சபை பரந்துபட்ட பிரதேசமாகும். 600 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இப்பிரதேசத்தில் 200 கிராமங்கள் அமைந் துள்ளன.**

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி, கண்டாவளை ஆகிய இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உள்ளடக்கிய 58 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளைக் கொண்ட கரைச்சிப் பிரதேச சபை பரந்துபட்ட பிரதேசமாகும். 600 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இப்பிரதேசத்தில் 200 கிராமங்கள் அமைந்துள்ளன. இந்தப் பிரதேசத்தில் 1800 வீதிகள் அமைந்துள்ளன.

இந்தப் பிரதேச சபையின் செயற்பாட்டிற்கென ஒருவர் மட்டும் பயணம் செய்யக் கூடிய வாகனம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இந்த பரந்துபட்ட பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் தேவைகளையும் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்களையும் நேரில் சென்று பார்வையிடுவதற்கு வாகன வசதி இல்லாததனால் வேலைத் திட்டங்கள் தாமதமடைய வேண்டிய நிலைக்குள்ளாகின்றது. இதனால் மக்கள் உறுப்பினர்கள் மீது நம்பிக்கை இழக்க வேண்டிய நிலை உருவாகின்றது.

அரசாங்கத்தால் வழங்கப்பட்டு பரந்த பிரதேசத்தில் சேவையாற்றி வந்த இந்த வாகனமும் ஒரு வாரகாலமாக இயக்கமுடியாது முடங்கிக் கிடக்கின்றது. இதனால் தலைவரின் செயற்பாட்டுக்கு மேலும் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

எனவே மக்களினது பிரதேசத்தினதும் நலன்கருதி வாகன வசதியை அதிகரிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை நிர்வாகத்தினர் கோரியுள்ளனர்.

(த-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலக சேவை நேரம் நீடிப்பு

சாவகச்சேரி, மார்ச் 3

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொது நூலக சேவை நேரம் ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் தொடக்கம் நூலக சேவை மாலை 5.30 மணி வரை வாசகர்களின் நலன் கருதி விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

நூலக செயற்பாடுகள் விஸ்தரிக்கும் திட்டத்தின் கீழ் தினமும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை நூலகம் திறந்திருக்குமென நூலகர் ந. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை, நூலகத்தின் சேவையை விஸ்தரிக்க சாவகச்சேரி நகரசபையால் கணினியும் பிறிண்டரும் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ம-9)

# இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை கச்சதீவில் ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச்.3

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை கச்சதீவில் நடைபெறவுள்ளது.

கச்சதீவு அந்தோனியார் பெருவிழா- முடிவடைந்த கையோடு இந்தக் கலந்துரையாடலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தா.றெக்ஷயன் மேற்கொண்டுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலுக்கு இலங்கை இந்திய மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள், துறைசார் அதிகாரிகள், அருட்தந்தையர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

**கச்சதீவுத் திருவிழாவில் பங்கேற்கத் தமிழகத்தில் இருந்தும் இங்கிருந்தும் செல்லும் கடற்றொழிலாளர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குகொள்வர்.**

கச்சதீவுத் திருவிழாவில் பங்கேற்கத் தமிழகத்தில் இருந்தும் இங்கிருந்தும் செல்லும் கடற்றொழிலாளர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குகொள்வர்.

இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையில் தொடர்ந்து வரும் பிரச்சினைகள், கடல் எல்லை விவகாரம், தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களின் பாவனை ஆகியன உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் இரு தரப்பினரும் விரிவாக ஆராய உள்ளனர் என்று தெரிய வருகின்றது.

தமிழகத்தில் இருந்து சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கச்சதீவுப் பெருவிழாவில் கலந்துகொள்வர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கச்சதீவுக்கு வருகை தருவதற்காகப் பெரும் எண்ணிக்கையானோர் இராமேஸ்வரம் கரையில் திரண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## சேவை நிறுத்திய 'மணிநாகதீபம்'

யாழ்ப்பாணம்,மார்ச் 3

குறிகாட்டுவான் துறைமுகத்தில் இருந்து இன்று சனிக்கிழமை கச்சதீவுக்குச் செல்லவிருந்த மணிநாகதீபம் மோட்டார் படகு தவிர்க்க முடியாத காரணத்தால் கச்சதீவுக்கான தனது சேவையைச் செய்ய முடியாதிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு தட்டுக்களைக் கொண்ட இந்தப் படகில் ஒரே தடவையில் சுமார் முந்நூறு பயணிகள் வரை பயணம் செய்ய முடியும்.

படகின் இயந்திரத்திற்குள் இனந்தெரியாதவர்களால் மண் போடப்பட்டுள்ளதாகவும் இதனால் இயந்திரம் சேதமடைந்துள்ளது எனவும் இதன் காரணமாக படகுச் சேவை இடம்பெற முடியாதிருப்பதாகவும் படகின் உரிமையாளர் கவலை தெரிவித்துள்ளார். (ம-7)

## சங்கிலி அபகரிப்பு

கொழும்புத்துறை, மார்ச் 3

தலையில் கொட்டனால் பெண்ணொருவரைத் தாக்கிவிட்டு அவர் அணிந்திருந்த 3 பவுண் சங்கிலியை அறுத்துக் கொண்டு திருடர்கள் தப்பிச் சென்ற சம்பவமொன்று அரியாலையில் இடம்பெற்றுள்ளது.

அரியாலை ஆனந்தன் வடலி வீதிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

காலை வேளை தனது வீட்டுக்கு முன் வீதியோரத்தை கூட்டித் துப்புரவு செய்து கொண்டிருந்த பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ஒரு முகவரியை விசாரித்தனர்.

இந்தப் பெண் அவர்களுக்கு வழிகாட்ட முற்பட்ட வேளை தலையில் கொட்டனால் தாக்கிவிட்டு தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர். (ம-135)

## புதிய நகர சபைக்கான தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

சங்கானை உப அலுவலக பிரதேசமும் சுழிபுரம் உப அலுவலக பிரதேசமும் இணைந்து புதிய நகர சபைக்கான தீர்மானம் வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் மிகுதியான வட்டுக்கோட்டை உப அலுவலகமும் அராலி உப அலுவலக பிரதேசமும் இணைந்து புதிய பிரதேச சபைக்கான தீர்மானமுமாக இரு புதிய அபிவிருத்திக்கான முன்னோடி தீர்மானங்கள் நகர திட்டமிடலின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபையின் உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் மேற்படி தீர்மானத்தை முன்மொழிந்தபோது அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக வரவேற்றினர்.

வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபையின் பொதுக்கூட்டம் சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் புதிய நகர சபை உருவாக்கமும் புதிய பிரதேச சபை தோற்றமும் எனும் தலைப்பில் முன்வைக்கப்பட்ட திட்டம் வருமாறு:

வலிகாமம் மேற்குப் பிரதேசம் நீண்ட காலமாக 4 உப அலுவலகங்களை உள்ளடக்கிய பிரதேச சபையாக இருந்து வருகின்றது.

இந்தப் பிரதேசத்தில் அபிவிருத்திக்கு நான்கு உப அலுவலகங்கள் இருந்தபோதிலும் வருமானத்தை ஈட்டித் தருகின்றதும் நகர திட்டமிடலின் கீழ் உள்ள பிரதேசமாக சங்கானை உப அலுவலகமும் சுழிபுரம் உப அலுவலகமும் உள்ளன.

இங்கு சங்கானை, சுழிபுரம் ஆகிய இரு பிரதேசங்களும் முக்கிய இரு நிர்வாக மையங்களாக பிரதேச சபையும் பிரதேச செயலகமும் அமைந்துள்ளன.

இதனைவிட சங்கானையில் வருமானத்தை ஈட்டித் தரும் சந்தைகளும் கடைத் தொகுதிகளும் வர்த்தக நிலையங்களும் பஸ் தரிப்பு நிலையமும் வங்கிகள், அலுவலகங்கள், பாடசாலைகள், முக்கிய வைத்திய சாலைகள் நான்கு வழிப் போக்குவரத்து சாலை வசதிகளும் அத்தோடு அதிக மக்கள் செறிவும், கைத்தொழில்சாலைகளும் உள்ள பிரதேசமாகக் காணப்படுகின்றது.

இதேபோல் சுழிபுரம் உப அலுவலக பிரதேசமும் வருமானத்தை ஈட்டித்தரும் சங்கானைப் பிரதேசம் போன்று ஒன்றுக்கு ஒன்று இணையாக உள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்ற நகர திட்டமிடல் அதிகார சபையின் ஆலோசனையை பெற்று பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வடக்கு பிரதம செயலாளர் ஊடாக ஆளுநருக்கும் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சுக்கும் தெரிவிப்பது என தீர்மானிக்கப்பட்டு நிறைவேறியது. (ம)

## நூலகச் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் திட்டம்

சாவகச்சேரி, மார்ச். 3

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொது நூலகத்தினர் நூலகச் செயற்பாடுகள் விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் கடந்த இரு மாதங்களில் பல்வேறு அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டுள்ளனர்.

மட்டுவில் - நுணாவில் பகுதிகளில் நீண்டகாலமாக குடிதண்ணீர் தட்டுப்பாடு காணப்பட்ட பகுதிகளை இனங்கண்டு அந்த இடங்களுக்கு நூலக கிணற்றிலிருந்து குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் தினமும் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் குடிதண்ணீர் தேவைக்காக அலையும் தேவை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

நூலகத்தில் வாசகர்கள், மாணவர்களின் நூல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நூலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று தேவையான நூல்களின் விவரங்களை வினாக்கொத்தாக சேகரித்துப் புதிய நூல்கள் கொள்வனவு செய்ய ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

நூலக மண்டபத்தில் மாணவர்கள், வாசகர்கள், பொதுமக்களுக்கு சிறந்த கருத்தரங்குகளை நடத்தவுள்ளதாகவும் நூலகர் ந.சுந்தரலிங்கம் தெரிவித்தார். (ம-9)

## உரிமையாளரின் மகன் திருடினார்

### வாடகையாளர் வழக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 3

வாடகை அடிப்படையில் கடை நடத்தி வந்த போது கடையின் உரிமையாளரின் மகன் கடையை உடைத்து பொருள்களைத் திருடியுள்ளார் என்று கடை உரிமையாளருக்கு எதிராக கடையை நடத்தி வந்தவர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. திருநெல்வேலியில் கடை வைத்திருக்கும் கடை நடத்துநர், சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் ஊடாக வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

சந்தேகத்தின் பேரில் 6 பேர் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். முதலாம், இரண்டாம், மூன்றாம் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணனும், நான்காம், ஐந்தாம், ஆறாம் சந்தேக நபர்கள் சார்பில் எஸ்.செலஸ்ரீனும் ஆஜராகியிருந்தனர். 6 பேரும் தாம் சுற்றவாளி எனத் தெரிவித்ததனால் இது தொடர்பான விளக்கத்துக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## சிறுவர் இல்லங்கள் இரண்டுக்கு மூடுவிழா

### தகுதிகள் இன்மையே காரணம்

யாழ்ப்பாணம்,மார்ச் 3

யாழ். மாவட்டத்தில் இயங்கி வந்த 2 சிறுவர் இல்லங்கள் கடந்த வாரம் மூடப்பட்டுள்ளன. சிறுவர் இல்லங்களாக இயங்குவதற்குரிய தகுதிகளைக் கொண்டிருக்காமையாலேயே இந்தச் சிறுவர் இல்லங்கள் மூடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருபாலையில் அமைந்துள்ள ஒரு சிறுவர் இல்லமும், சாவகச்சேரியில் அமைந்துள்ள ஒரு சிறுவர் இல்லமுமே இவ்வாறு மூடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த சிறுவர் இல்லங்களில் 10 சிறுவர் இல்லங்கள் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று வடமாகாண ஆளுநரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் அவதானத்துக்கு உட்படுத்தப்பட்டிருந்த சிறுவர் இல்லங்களில் இரண்டு சிறுவர் இல்லங்களே தற்போது மூடப்பட்டுள்ளன.

சாவகச்சேரியில் அமைந்திருந்த சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த சிறுவர்கள் அவர்களது பெற்றோரிடம் மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களால் ஒப்படைக்கப்பட்டனர்.

இதேவேளை இருபாலையில் அமைக்கப்பட்டிருந்த சிறுவர் இல்லத்தை மூடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதும் இந்த சிறுவர் இல்ல நிர்வாகத்தினரே நேரடியாகப் பெற்றோரிடம் பிள்ளைகளை ஒப்படைத்தனர்.

ஆனால் குறித்த பெற்றோர்களால் அந்தச் சிறுவர்களை வளர்க்க முடியாத சூழ்நிலை காணப்படுவதாகவும் இதனால் மீண்டும் அவர்களைச் சிறுவர் இல்லங்களில் சேர்ப்பதற்கு விண்ணப்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-5)

## திண்மக் கழிவுகளால் திண்டாடும் மக்கள்

கொக்குவில் பகுதியில் வீதிகளிலும் பாடசாலைகளுக்கு அருகிலும் குவிக்கப்பட்டுள்ள திண்மக் கழிவுகள் கிரமமாக அகற்றப்படாமையால் சுகதாரத்துக்கு சீர்கேடு ஏற்படுவதுடன் மக்களும் அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

இந்த நிலை குறித்து கவலையும் அதிருப்தியும் தெரிவித்துள்ள பொதுமக்கள் குவிக்கப்படும் திண்மக் கழிவுகளை உடனுக்குடன் அகற்றச் சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள ஞானபண்டித வித்தியாசாலை, அருகிலுள்ள வீதிகளில் கொட்டப்படும் திண்மக் கழிவுகள் பல வாரங்களாக அகற்றப்படாது உள்ளது.

இதனால் துர்நாற்றம் வீசுவதுடன் மக்கள் நிம்மதியாக நடமாட முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் மட்டுமல்ல மாணவர்களும் அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

**கொடிய நோய்களில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் சுகாதார விதிமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்பட்டு வரும் இவ்வேளையில் திண்மக் கழிவுகளை அகற்றுவதில் பிரதேச சபை அசமந்தப் போக்கைக் கடைப் பிடித்து வருகிறது**

கொடிய நோய்களில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் சுகாதார விதிமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்பட்டு வரும் இவ்வேளையில் திண்மக் கழிவுகளை அகற்றுவதில் பிரதேச சபை அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது என்று அதிருப்தி தெரிவித்துள்ள பொதுமக்கள் வீதிகளில் குவிக்கப்பட்டிருக்கும் குப்பைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளனர். (ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலாளருக்கு மானியம் 10,200 முத்திரைகள் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச்.3

குடாநாட்டில் கடற்றொழிலாளருக்கு மானிய அடிப்படையில் எரிபொருள் வழங்குவதற்கான முத்திரைகள் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அந்த அதிகாரி இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு மானிய அடிப்படையில் மண்ணெண்ணெய், டீசல் போன்ற எரிபொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கெனப் 10 ஆயிரத்து 200 மானிய முத்திரைகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்த முத்திரைகளை உடனடியாகக் கடற்றொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெரிய கடற்கலன்களைக் கொண்ட படகு உரிமையாளர்களுக்கு முப்பது ஆயிரம் ரூபா பெறுமதியான டீசல் மானிய முத்திரையும் றோலர் படகுகளுக்கு 18 ஆயிரம் ரூபா பெறுமதியான டீசல் மானிய முத்திரையும் மற்றும் ஏனைய மண்ணெண்ணெயில் செயற்படும் படகுகள் வள்ளங்களுக்கு 6 ஆயிரத்து 250 ரூபா பெறுமதி வாய்ந்த மானிய முத்திரைகளும் வழங்கப்படவுள்ளன.

இந்த மானிய முத்திரைகள் மாதாந்தம் கடற்றொழிலாளருக்கு வழங்கப்படும். இந்த முத்திரைகளின் பெறுமதிக்கு ஏற்ப அதற்குரிய எரிபொருள் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டது. (ம-17)

> மானிய முத்திரைகள் மாதாந்தம் கடற்றொழிலாளருக்கு வழங்கப் படும். இந்த முத்திரைகளின் பெறுமதிக்கு ஏற்ப அதற்குரிய எரிபொருள் வழங்கப்படும்

# வடமராட்சி கிழக்கில் ஐஸ் உற்பத்தி நிலையம்

யாழ்ப்பாணம், மார்ச்.3

வடமராட்சி கிழக்குதாளையடியில் ஐஸ் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

ஐ.ஓ.எம். நிறுவனத்தின் உதவியுடன் இந்த ஐஸ் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த உற்பத்தி நிலையத்தை விரைவாக அந்த பிரதேசத்தில் நிர்மாணித்து அதன் செயற்பாடுகளை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் ஐஸ் உற்பத்தி நிலையம் ஒன்று இல்லாமையால் அந்தப் பகுதியில் பிடிக்கப்படும் கடலுணவுகளைப் பதப்படுத்துவதற்கு கடற்றொழிலாளர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பகுதிக்கு யாழ். நகரில் இருந்தே கூடுதலாக ஐஸ் கட்டிகள் கொண்டு செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## விபத்தில் பெண்ணுக்கு கால் முறிவு

வலி.வடக்கு,மார்ச்.3

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் பெண்ணின் கால் முறிந்தது. சம்பவம் நேற்று முன்தினம் சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை வீதி வழியாக வந்த ஒரு பெண்ணே விபத்தில் சிக்கினார். மோட்டார் சைக்கிளை ஒழுங்கையில் திருப்ப முற்பட்ட போது விபத்து இடம் பெற்றது. (உ-86)

## இருளில் மூழ்கும் பஸ் நிலையம்

வடமராட்சி, மார்ச்.3

மந்திகையில் உள்ள பிரதான பஸ் தரிப்பிடத்தில் வீதி மின்விளக்கு பொருத்தப்படாமையால் பொதுமக்கள் பெரிதும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறைப் பிரதேச சபையால் மந்திகைப் பகுதியில் உள்ள பருத்தித்துறை வீதி, சாவகச்சேரி வீதி, ஆஸ்பத்திரி வீதிகளில் வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டு இரவு வேளைகளில் ஒளிர விடப் பட்டுள்ளன.

ஆனால், யாழ்ப்பாணம் செல்லும் பிரதான வீதியில் மந்திகை ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் உள்ள பிரதான பஸ் தரிப்பிடப் பகுதியிலும் தரிப்பிடத்திலிருந்து யாழ்ப்பாண வீதியில் கருகம்பன் பொது மயான வீதிச் சந்தி வரையான பிரதேச சபையின் எல்லை வரை வீதி மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை.

வீதி மின் விளக்குப் பொருத்தப்பட்ட வேளையில் முன்னுரிமை அடிப்படையில் பொருத்தப்படாமையால் இரவு அதிகாலை வேளையில் பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் குறிப்பிட்ட பஸ்தரிப்பிடத்தில் இருட்டில் நிற்க வேண்டியுள்ளது.

குறிப்பிட்ட பகுதியில் தாமதமின்றி வீதி மின் விளக்குகளைப் பொருத்துமாறு பிரதேச சபையிடம் பொது மக்கள் கோருகின்றனர். (ம-8)

# 50 கோழிகளுக்கு மேல் வளர்க்க அனுமதி பெற வேண்டியது அவசியம்

### வலி.வடக்கு பிரதேச சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 3

வலி.வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கோழி வளர்ப்பதற்கு எந்தவித தடையும் விதிக்கப்படவில்லை.

50 கோழிகளுக்கு மேல் வளர்ப்பதாயின் பிரதேச சபையிடம் அனுமதி பெற வேண்டும் என்று வலி. வடக்கு பிரதேசசபை யின் தலைவர் எஸ்.சுகிர்தன் தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கோழி வளர்ப்பதற்கு எவ்விதமான தடைகளும் விதிக்கப்படவில்லை.

இறைச்சிக் கோழியைச் சந்தையிலிருந்து 500 மீற்றர் தூரத்துக்குள் வைத்து வெட்டுவதோ விற்பனை செய்வதோதான் தடைசெய்யப்பட்டுள்ளது.

தற்போது அளவெட்டி மற்றும் மல்லாகம் பிரதேசங்களிலேயே சந்தை இயங்கி வருகின்றது.

இதிலிருந்து 500 மீற்றர் தூரத்துக்குள் இறைச்சிக் கோழியை விற்பனை செய்வதோ அல்லது வெட்டுவதோதான் தடை செய்யப்பட்டிருக்கின்றது.

வீடுகளில் அல்லது பண்ணைகளில் 50 கோழிகளுக்கு மேல் வைத்து வளர்ப்பதானால் பிரதேச சபையிடம் கட்டாயம் அனுமதி பெற வேண்டும் என்று மேலும் கூறினார். (ம-5)

> சந்தையில் இருந்து 500 மீற்றருக்குள் வைத்து விற்கவே தடை

# பொதுமக்களின் நிதியிலிருந்தே செம்மணியில் மதில் அமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 3

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட நிதியைக் கொண்டே செம்மணி இந்து மயானத்துக்கு சுற்றுமதில் அமைக்கப்பட்டு வருவதாக செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபை தெரிவித்தது.

மயான அபிவிருத்திச் சபையே பொதுமக்களிடமிருந்து நிதியைப் பெற்று சுற்றுமதில் அமைப்பதை முன்னெடுத்து வருவதாக அபிவிருத்திச் சபையின் செயலாளர் ஆர். தணிகைநாதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அபிவிருத்திச் சபை அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மயானத்தின் தென் பகுதியில் 1800 அடி நீளத்துக்கு சுற்றுமதில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 600 அடி நீளமான பகுதியில் மதில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மதில் அமைப்பதற்கு சுமார் 40 லட்சம் ரூபா தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மயானப் பாவனையாளர்களிடமிருந்து இதுவரை 24 லட்சம் ரூபா பெறப்பட்டுள்ளது.

இதேவேளை, மின்சாரத்தில் உடல்களைத் தகனம் செய்யும் வசதி வாய்ப்புக்களும் மயானத்தில் ஏற்படுத்தப்படவுள்ளன.

தற்போது மின் இணைப்புச் செய்யப்பட்டுள்ளது. இது முற்று முழுதாக அரச நிதி மூலமே முன்னெடுக்கப்படவுள்ளது. ஒரு கோடி ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மயானத்தின் வடக்குப் பகுதியில் தகனக் கிரியை செய்வதற்கான கொட்டகை ஒன்று மக்களின் பணத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# கட்டாக்காலிகள் விட்டபாடில்லை

நவாலி,மார்ச் 3

நவாலி ஆனைக்கோட்டை கல்லுண்டாய்ப் பகுதி வயல்களில் நெல் அறுவடை முடிந்தும் சிறுதானியச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள வயல்களில் ஈரம் உள்ள போதும் இவற்றில் எள்ளு மற்றும் சிறுதானிய விதைகளை விதைப்பதற்கு கட்டாக்காலிகள் விட்டபாடாக இல்லை என்று கூறப்படுகிறது.

விவசாய சம்மேளனங்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் கட்டாக்காலிகளை குறிப்பிட்ட காலம் வரை கட்டி வைத்து வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

தற்போது ஊர் எள்ளு தட்டுப்பாடு காரணமாக தென் பகுதியிலிருந்து வரும் எள்ளைக் கொண்டே நல்லெண்ணை வடிக்க வேண்டியுள்ளது.

இந்த எள்ளும் நாளுக்கு நாள் விலை அதிகரித்துச் செல் வதால் நல்லெண்ணையின் விலையையும் உயர்த்த வேண்டிய நிலை ஏற்படலாம் என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (ம-100)

## மதுவின் கொடை

சாவகச்சேரி, மார்ச் 3

மது செய்த வினையால் 6 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 33 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட ஆறு வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரமின்றி ஓட்டோ செலுத்தியவருக்கு 7 ஆயிரம் ரூபாவும் மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு 6 ஆயிரம் ரூபாவும் மதுபோதையில் பொது இடத்தில் குழப்பம் விளைவித்த நான்கு பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதிக்கப்பட்டது. (ம-9)

# மக்கள் குறைகேட்க நடமாடும் சேவைகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 2

நல்லூர் பிரதேச சபை தனது பகுதியில் உள்ள மக்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்து அவற்றிற்குத் தீர்வுகாணக் கூடியதாக தனது பகுதியில் நடமாடும் சேவைகளை நடத்த ஆலோசித்துள்ளதாக சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி, அரியாலைப் பகுதிகளில் உள்ள மக்களைச் சந்திக்கவெனத் தனியான நாள்களை அறிவிக்கவுள்ளதாகவும் அவர் கூறினார். இதில் பிரதேச சபை உறுப்பினர்கள் சபை உத்தியோகத்தர்கள் கலந்து கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

''கொட்டக்காடு, கோண்டாவில் அரியாலை கிழக்கு மயானங்களை அழகுபடுத்துவதுடன் எரிக்கும் கொட்டகை, மின்சாரம்,நீர்வசதி என்பவற்றையும் சபை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது'' என்று ப.வசந்தகுமார் தெரிவித்தார். (உ-7)

## கொழும்புத்துறையில் மின் விளக்குகள்

கொழும்புத்துறை, மார்ச் 3

கொழும்புத்துறை வீதியில் உள்ள மின் கம்பங்களில் புதிய மின் விளக்குகள் பொருத்தும் பணிகளை இலங்கை மின்சார சபை மேற்கொண்டுள்ளது.

தற்போது பாவனையில் உள்ள மின் விளக்குகள் சரிவர இயங்காமையால் வீதிகள் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன.

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் இப்போது ஒளிப் பிரதிபலிப்புமிக்க பெட்டிகளுடன் கூடிய மின் விளக்குகளை பொருத்தும் திட்டத்தை யாழ்.குடாநாட்டில் மின்சார சபை மேற்கொண்டுள்ளது.

இதனடிப்படையில் பிரதான வீதிகள், மக்கள் கூடும் இடங்களில் முக்கிய சந்திகளுக்கு இந்தப் புதிய மின்விளக்குகள் பொருத்தப்படுவதாகக் கூறப்பட்டது.

கொழும்புத்துறை கணக்கர் சந்தியில் இருந்து கொழும்புத்துறை துறை [illegible] இந்த மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. (ம-135)

# மப்பினால் வந்தது வம்பு 6 பேர் கட்டினர் அபராதம்

போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் மதுபோதையுடன் வீதியில் கூடி நின்ற ஆறு இளைஞர்கள் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர். மல்லாகம் நீதிமன்றத்தில் இவர்கள் மீது பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கில் இவர்கள் குற்றத்தை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து தலா 2,500 ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மானிப்பாயிலிருந்து சுதுமலை ஊடாக தாவடி செல்லும் வீதியில் இரவு நேரங்களில் மதுபோதையுடன் கூடி நிற்கும் இளைஞர்கள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதுடன் பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவதாகப் பொதுமக்கள் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

மக்களின் முறைப்பாட்டைத் தொடர்ந்து செயலில் இறங்கிய மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மல்கம தலைமையில் சென்ற பொலிஸார் சுதுமலை தாவடி வீதியில் வைத்து இரு தினங்களில் மதுபோதையில் நின்ற ஆறு இளைஞர்களைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். சமுகமளித்த ஆறு பேரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து மல்லாகம் நீதிவான் இவர்களுக்கு தலா 2500 ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதி வழங்கிய கடைகளும் உடைப்பா?

## கல்முனை மாநகரசபையின் ஆளுங்கட்சிஉறுப்பினர் ஆச்சரியம்

கல்முனை,மார்ச்.3

கல்முனை மாநகர சபையினால் பல வருடங்களாக தொழில் புரிவதற்கான வியாபார அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட வர்த்தக நிலையங்கள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டன என்று கூறி உடைக்கப்பட்டமை வேடிக்கையாக உள்ளது என்று கல்முனை மாநகர சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் ஏ.எம்.பறக்கத்துல்லா குற்றம் சாட்டியுள்ளார்.

கல்முனை தனியார் பஸ் நிலையத்துக்கு முன்பாக நிரந்தரமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த ஐந்து வர்த்தக நிலையங்கள் சட்டவிரோதம் என்று தெரிவித்து கல்முனை பொலிஸாரின் உதவியுடன் கல்முனை மாநகர சபை ஆணையாளர் லியாகத் அலி தலைமையிலான குழுவினர் உடைத்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

கல்முனை மாநகர சபை எல்லைக்குள் இந்த ஐந்து வர்த்தக நிலையங்கள் மாத்திரமா சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளன. இந்த வர்த்தக நிலையங்கள் தவிர்ந்த இன்னும் எத்தனையோ சட்டவிரோத வர்த்தக நிலையங்கள் இன்னும் ஏன் மாநகர சபையினால் உடைக்கப்படவில்லை?

உடைக்கப்பட்ட இந்தஐந்து வர்த்தக நிலையங்களை மாத்திரம் சட்டவிரோதமான வர்த்தக நிலையங்களாகக் கருதும் கல்முனை மாநகர சபை நிருவாகம், இவர்களுக்கு பல வருடங்களாக குறித்த இடத்தில் தொழில் புரிவதற்கான வியாபார அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளது.

வியாபார அனுமதிப் பத்திரங்கள் வழங்கும்போது இவை சட்டவிரோதமானவை என்பதை அறியாமல் இருந்துள்ளனரா? இந்த வர்த்தக நிலைய உடைப்பினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மாற்று இடத்தினை வழங்க எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் மாநகர சபை எதேச்சதிகாரமாக உடைத்தமை கண்டிக்கத்தக்க விடயமாகும்.

கல்முனை மாநகர சபை எல்லைக்குள் கட்டப்பட்டுள்ள அனைத்து சட்டவிரோத வர்த்தக நிலையங்களையும் இனங்கண்டு பொதுவான அறிவித்தல்கள் வழங்கி மாற்று வழியொன்றினை ஏற்படுத்திய பின்னர் அவற்றை அகற்றியிருக்க வேண்டும். அதை விடுத்து குறித்த ஐந்து வர்த்தக நிலையங்களை மாத்திரம் உடைத்த செயலானது மறைமுகமாக பழிவாங்கும் முயற்சி.



பாதிக்கப்பட்ட இவர்களுக்கு மீண்டும் தொழில் முயற்சியினை மேற்கொள்ள இடங்களை வழங்க கல்முனை மாநகர சபை நிருவாகம் மிக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச)

# டிப்போவின் அவலம்; ஊழியர்கள் கவலை

பொத்துவில், மார்ச்3

இலங்கைப் போக்குவரத்துச் சபையின்பொத்துவில் பஸ் டிப்போ பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது என்று அதன் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஜனவரி மாதத்திலிருந்து சம்பளமின்றி வேலை செய்வதாக ஊழியர்கள் கூறுகின்றனர். பொத்துவில் பஸ் டிப்போ கடந்த அரசின் காலத்தில் முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அக்கரைப்பற்றின் உப டிப்போவாகத் திறக்கப்பட்டு சுமார் பத்தாண்டுகள் கழிந்துள்ள நிலையில், ஆறு பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தன. தற்போது இரண்டு பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பழுதடைந்து காணப்படும் பஸ்கள் திருத்தப்படாமல் உள்ளன. இந்த நிலையில் இந்த பஸ் டிப்போவின் அவல நிலை குறித்து உயர் அதிகாரிகள் அசமந்தப் போக்குடன் காணப்படுகின்றனர். என்று பொது மக்கள் மற்றும் பிரயாணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் அக்கரைப்பற்று - பொத்துவில் வீதியில் பஸ்சேவையும் இல்லாதநிலை காணப்படுகிறது. பொத்துவில் பிரதேசத்தில் அதிகளவு வெளிப்பிரதேச ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் சேவையாற்றி வருகின்றனர். அவர்களின் போக்குவரத்துக்குப் போதியளவு அரச பஸ்களின்றி பல்வேறு சிரமங்களுடன் தனியார் பஸ்களில் பயணிக்க வேண்டியுள்ளது.

அரசியல்வாதிகளாலும், உயர் அதிகாரிகளாலும் பின்தள்ளப்பட்டுள்ள நிலையில் காணப்படும் பொத்துவில் பஸ்டிப்போவின் தரத்தை அதிகரித்து, அதிகளவு புதிய பஸ்களைத் தந்துதவுவதற்கு பிரதேச அரசியல் வாதிகளும், அமைச்சர்களும் நடவடிக்கை எடுக்க வேண் டும். போக்குவரத்து அமைச்சரும் இப்பிராந்தியப் போக்குவரத்துச் சேவையில் அதிக கவனமெடுத்து அதனை அபிவிருத்தி செய்யுமாறு பயணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச)



வாகரை , தோணிதாட்டமடு கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதி பாதிப்படைந்துள்ளது. இதனால் இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

# வேலைப்பளு அதிகரிப்பு: தொடர்ந்தும் எதிர்ப்பே

## கூட்டறிக்கையில் தெரிவிப்பு

பொகவந்தலாவை,மார்ச்3

பெருந்தோட்டக் கம்பனிக்கு உட்பட்ட பொகவந்தலாவைப் பிரதேச தோட்டங்களின் தோட்டத் தொழிலாளர்களின் வேலைப்பளுவை அதிகரிக்கும் வகையில் எவராவது செயற்படுவார்களானால் அந்த நடவடிக்கைகளுக்கு தொழிலாளர் தேசிய சங்கம் தொடர்ந்தும் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.பிலிப், மத்திய மாகாணசபை உறுப்பினர் சிங். பொன்னையா ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இந்த அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

பொகவந்தலாவைப் பிரதேசத்திலுள்ள பொகவந்தலாவை, பொகவான, லொயினோன், கெம்பயன், பெற்றசோ ஆகிய தோட்டங்களின் தொழிலாளர்கள் தோட்ட நிருவாகங்களின் தன்னிச்சையான வேலைப்பளு அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு தொழிலாளர் தேசிய சங்கமும் ஆரம்பம் முதல் ஆதரவு தெரிவித்து வருகின்றது.

இந்தத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஹற்றன் தொழிலுறவு அலுவலகத்திலும் கொழும்பில் உள்ள தொழிலுறவு ஆணையாளர் அலுவலகத்திலும் இடம்பெற்ற பல்வேறு பேச்சுக்களில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தொழிலாளர்களின் சார்பாக தமது நிலைப்பாட்டினை தெரிவித்துள்ளனர். இந்தப் பேச்சுக்களில் சில தொழிற்சங்கங்கள் கலந்து கொள்ளவில்லை.

கொட்டியாகலைத் தோட்டத் தொழிலாளர் தமது ஒரு நாள் அடிப்படைச் சம்பளத்துக்காக 13 கிலோ கொழுந்தினைத் தொடர்ந்து பறிக்க வேண்டும் என்பதில் தொழிலாளர் தேசிய சங்கம் உறுதியாக இருக்கின்றது.

ஏற்கனவே நடந்த பேச்சு ஒன்றில் கூட்டொப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள ஒரு தொழிற்சங்கம் ஒரு நாள் வேலையின் அளவை அதிகரிப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனை எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கஞ்சா வைத்திருந்த நபருக்கு விளக்கமறியல்

**குறித்த நபரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு**

திருக்கோவில்,மார்ச்3

திருக்கோவில், தம்பிலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் ஒரு கிராம் கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொத்துவில் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஐ.என்.றிஸ்வான் கடந்த புதன்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, குறித்த நபரை ஒரு கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவரை பொத்துவில் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் முன்னிலைப் படுத்தியபோது, இவரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# பணம் கட்டியும் நீர் இணைப்பில்லை

## மக்கள் விசனம்

ஆலங்குளம், மார்ச் 3

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் சுத்தமான குடிதண்ணீரைப் பெறும் பொருட்டு நீர் வழங்கல் சபையிடம் பணம் கட்டி ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும், இணைப்புப் பெற முடியாத நிலை காணப்படுகிறது என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுத்தமான குடிதண்ணீரைப் பெறும்பொருட்டு முழுப்பணத்தையும் செலுத்திய பின்னர் உடனடியாக நீர் இணைப்பு வழங்கப்பட வேண்டும். ஆனால், இணைப்புக்கான உபகரணங்கள் இன்மையைக் காரணம் காட்டி பலமாதங்கள் இழுத்தடிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் தலையிட்டு பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் சுத்தமான குடி. தண்ணீருக்கான இணைப்பைப் பெற உதவுமாறு அட்டாளைச்சேனைப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச)

# மூதூர் தள வைத்தியசாலையில் மகப்பேற்று சிகிச்சை நிலையம்

மூதூர், மார்ச் 3

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் தள வைத்தியசாலையில் மகப்பேற்று சிசேரியன் சிகிச்சை மூலமாகவும் குழந்தைப் பிரசவம் இடம்பெற்று வருவதையிட்டு மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

மூதூர், ஈச்சிலம்பற்று, தோப்பூர், கிளிவெட்டி, மூதூர் கிழக்கு பிரதேச மக்கள் பல்வேறு வகையிலும் கஷ்ட நிலையில் இருந்து வந்தனர். தற்பொழுது பிரசவத்துக்காக தூர இடங்களிலுள்ள வேறு வைத்தியசாலைகளுக்குச் செல்லும் நீண்டநாள் அவஸ்தை குறைவடைந்துள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

மூதூர் தள வைத்தியசாலைக்கு விசேட மகப்பேற்று வைத்திய நிபுணர் லலிந்திர வீரசேகர நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மூலமாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. (ச)

# இம்முறை கண்டியில் வெசாக்

கண்டி,மார்ச்3

இந்த ஆண்டின் அரச வெசாக் பண்டிகையை கண்டியில் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சரான பிரதமர் தி.மு.ஜயரட்ன தலைமையிலான குழுவே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.


அஸ்கிரிய மற்றும் மல்வத்த மஹாநாயக்க தேரர்களின் ஆலோசனைக்கமைய கண்டி ஸ்ரீ தலதா மாளிகையை மையமாகக் கொண்டே இந்த அரச வெசாக் விழா இடம்பெறவுள்ளதாக புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

# துப்பினால் ரூபா 500

புத்தளம்,மார்ச்3

புத்தளம் பஸ் நிலைய வளாகத்துக்குள் வெற்றிலை எச்சில் துப்பினால் 500 ரூபா அபராதம் விதிக்கப்படும் என்று விளம்பரம் ஒட்டப்பட்டுள்ளது. இந்த விளம்பரம் பயணிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதாக புத்தளம் நகரசபை தெரிவித்துள்ளது.

''சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருப்போம்'' என்ற கருப்பொருளில் பல திட்டங்களை நடைமுறைப்படுத்திவரும் புத்தளம் நகரசபையின் [illegible] ஒன்றாகவே இது அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




எனவே, கண்ட இடங்களில் வெற்றிலை எச்சில் துப்பி சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தியவர்கள் தற்போது கொஞ்சம் கவனமாகவே இருக்க வேண்டும். 10 ரூபா வெற்றிலைக்கு அபராதத் தொகையாக 500 ரூபாவை கொடுக்க வேண்டுமா? என்று நகரசபை கேட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற்திறன் இலவச வகுப்புக்கள்

பாடசாலையை விட்டு நீங்கியோருக்கான

1) தையல் பயிற்சி வகுப்பு
2) மனைப்பொருளியலும், மனை அலங்காரமும் வகுப்பு
3) அடிப்படைக் கணினி அறிவு பயிற்சி நெறி என்பன

இலக்கம் 26, ஆடியபாதம் வீதி, கொக்குவில் எனும் முகவரியில் உள்ள பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள், தமது பெயர் விவரங்களை 2012.03.07 ஆம் திகதிக்கு முன்னர் காரியாலய நாள்களில், காலை 08.30 மணி தொடக்கம் பிற்பகல் 05.00 மணி வரை நேரிலோ அல்லது தபாலிலோ மேற்படி முகவரியில் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம் (மேற்படி பயிற்சி நெறியினை மேற்கொள்பவர்களுக்கான அடிப்படை ஆங்கில அறிவு வகுப்புக்களும் இடம்பெறும்.)

நிர்வாகம்.

(C8382)(6-7-8)



## கணனி ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்குமான

ஓர் அரிய சந்தர்ப்பம் **Diploma in Computer Courses**

2012ம் ஆண்டு மாபெரும் கட்டணக்கழிவு

Duration 3months,4months

BatchI 03-03-2012
BatchII 04-03-2012
BatchIII 07-03-2012
BatchIV 09-03-2012
(Time:-9am or 3pm)

Ms Office 2007, DTP, Hardware, Graphic Designing, Wep page Designing, Multi Media, Computer Science, Video Editing, Computerized Accounting, AutoCAD, Net Working, Inter Net & e - mail.

புதன், வெள்ளி மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இன்றே எம்முடன் இணைந்துகொள்ளுங்கள்.

வரையறையற்ற செய்முறைப்பயிற்சி, மாணவர்மீது தனிப்பட்ட கவனம், அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ், நன்கு அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் தமிழ்மொழி விளக்கத்துடன் வகுப்புகள் நடாத்தப்படும்.

**Computer Express**
No 15, Sirambiyadi lane (off stanly Road)
Jaffna. T.P - 021 222 8250, 077 490 7444

Certificate in Multi IT
Duration - 1Week,1Month
Rs 3500 only Batch i 03-03-2012
077 4691673 Batch ii 07-03-2012


# வவுனியா புதூர் வயற் காணியில் இளைஞரின் சடலம்

வவுனியா.மார்ச்.3

வவுனியா, புதூர்ப் பகுதியில் உள்ள வயற்காணி ஒன்றில் இருந்து நேற்று ஆண் ஒருவரின் சடலம் வவுனியா பொலிஸாரால் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை வயலுக்குக் காவலுக்குச் சென்ற குறித்த நபர் திரும்பி வராததைத் தொடர்ந்து செவ்வாய்க்கிழமை அவரைத் தேடி அவரது உறவினர்கள் புதூர் கோவில் வீதியில் உள்ள அவரின் வயல் காணிக்குச் சென்றனர்.

அங்கே அவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது. சம்பவம் தொடர்பாக வழங்கப்பட்ட தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைந்தனர்.

அவரின் சடலத்துக்கு அருகில் வெற்றுப் போத்தல் ஒன்றைப் பொலிஸார் மீட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கனகராயன் குளம் ரகுபதி குடியிருப்பைச் சேர்ந்த செல்லையா ஜெயபாலன் (வயது-26) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார். (ஓ-15-435)

# திருத்த வேலையின்போது மின் தாக்கி வவுனியாவில் குடும்பஸ்தர் சாவு

வவுனியா, மார்ச் 3

வவுனியா, சின்னப்புதுக்குளம் பகுதியில் மின்சாரம் தாக்கிக் குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் ஸ்ரீஸ்கந்தராஜா என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

சின்னப்புதுக்குளம் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் மின்சாரத் திருத்த வேலை செய்து கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக மின்தாக்கியதில் தூக்கி வீசப்பட்டு அந்த இடத்திலேயே மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் வவுனியா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு விசாரணைகளின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஒ-10)

# இலங்கையின் கோழி இறைச்சி, முட்டைக்கு குவைத்தில் தடை

இலங்கையிலிருந்து கோழி இறைச்சி, கோழி முட்டை, கோழிக்குஞ்சு என்பவற்றை இறக்குமதி செய்வதற்கு குவைத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பறவைக் காய்ச்சல் ஐயம் காரணமாகவே கோழி மற்றும் முட்டை போன்றவற்றுக்குத் தடை விதித்துள்ளதாக குவைத் அரசு அறிவித்தல் விடுத்துள்ளது.

இதேவேளை ஆஸ்திரேலியாவிலிருந்தும் கோழி உற்பத்திப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு குவைத் தடைவிதித்துள் ளது. (வ)

# பயிற்சிப் பட்டறை

சாவகச்சேரி.மார்ச்.03

சர்வோதய நீதிச் சேவைகள் இயக்கத்தினர் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் மத்தியஸ்தம் தொடர்பான இரு நாள் பயிற்சிப்பட்டறை இன்றும் நாளையும் இடம் பெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப் பட்டவர்களுடன் மேலதிகமாக ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் தலா 20 பேரை கலந்து கொள்ளுமாறு திட்ட இணைப்பாளர் கூறியுள்ளார். (ம-5)


## கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி மீண்டும் யாழ். மண்ணில்

Ganesh.K Hardware / Software

March 09

காலை 9 மணி முதல்

09,10,11,12 நான்கு நாள்கள்

★ சர்வதேச தரத்திலான டிப்ளோமா சான்றிதழ்
★ உங்கள் விபரம் இணையத்தளத்தில் பதியப்படும்.

கடந்த வருடத்தில் இலங்கையில் 500இற்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய பெருமை தொடர்ந்து முதல் தர ஆசிரியராக

No. 1 ஆசிரியர் **Ganesh. K** கட்டணம் 8500/-

* IC கழட்டுதல் * IC மாற்றுதல்
* ICகளைக் கண்டறிதல் * ICகளின் செயற்பாடுகள்
* போனில் வரும் பிரச்சினைகளைக் கண்டறிதல்.

பதிவுகளுக்கு விரையுங்கள்

**Greenwich College**
No. 39, 3rd Lane, Power House Road, Jaffna.
T.P. 0770584658, 0750445070 (34)



## வான் விற்பனை

TOYOTO HIACE டொல்பின் 58 XXXX தொடர் இலக்கமுடைய அசிரபிள் சீட் ஏலோவில் வல் AC 4 Door லீசிங்குடன் விற்பனைக்கு உண்டு. குறிப்பு: செல் மொடலுக்கு மாற்றம் செய்யப்படும்.

தொடர்பு: 077 8736777, 0776617845.



## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள KORD (கோட் மெசின்) விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :- 0714546800 (007)



## பணிப்பெண் தேவை

மானிப்பாயில் வீடொன்றில் வேலை செய்வதற்கு பணிப்பெண் உடனடியாகத் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகள் : 077 0367125
071 6962869 (007)


# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் ஸ்ரீஸ்கந்தராஜா

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா, சின்ன புதுக் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஸ்ரீஸ்கந்தராஜா நேற்று முன்தினம் (01.03.2012) வியாழக் கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் புஸ்பமலர் தம்பதியரின் அன்பு மகனும், உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவகுரு மற்றும் மலர்சோதி தம்பதியரின் அன்பு மருமகனும், உமாதேவியின் அன்புக் கணவரும், சாயிசிந்து, அபிராமி (வவுனியா, இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலய மாணவிகள்), சாயிவசந் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தினி (இந்தியா), ஸ்ரீதரன் (சுவிஸ்), ஸ்ரீபிரேமநாத் (கனடா), காலஞ்சென்ற ஸ்ரீறமணன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், விஜயகுமார், சாரதாதேவி, சிவலிங்கம், இந்திராதேவி, சிவாஸ்காந்தன், சிவநேசன், காலஞ் சென்ற சிவபாலன் மற்றும் சிவரூபன், சிவகரன், கார்த்திகா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.03.2012) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் வவுனியா வெளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54, சின்னபுதுக்குளம்,
வவுனியா.

தகவல்:-
குடும்பத்தினர். (34)

# கச்சதீவுக்கான "மணி நாகதீபம்" படகுச் சேவை நடைபெறமாட்டாது

இன்று (03.03.2012) சனிக்கிழமை குறிகாட்டுவான் துறைமுகத்தில் இருந்து கச்சதீவுக்குப் புறப்படவிருந்த "மணிநாகதீபம்" படகுச் சேவை விஷமிகள் சிலரால் இயந்திரத்திற்குள் மண் போடப்பட்டுள்ளதால் அது பழுதடைந்துள்ளது.

இந்தப் படகு தனது சேவையைச் செய்யமுடியாதுள்ளது என்பதை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றேன்.

ந. மோகனரூபன்
தொலைபேசி இல. 0772840173 (34)

# ஈர விழிகளுடன் ஓராண்டில்



## தேவராஜா தையல் நாயகி

(தங்கா)

தாயின்மடியில் 22 ★ 02 ★ 1973

இறையடியில் 03 ★ 03 ★ 2011

எங்கள் அன்புத் தெய்வமே!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்கள் அன்புக்கு ஈடாகுமா!
எங்கள் மனங்களில் உங்கள்
நினைவலைகள்
அழியாமல் உயிர் உள்ளவரை வாழும்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

கட்டுடை,
மானிப்பாய்.

குடும்பத்தினர். (007)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தரான திரு.க.கணபதிப்பிள்ளை அவர்களின் சகோதரர்

## கனகன் ஜெயம்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!


பிரதேச வைத்தியசாலை,
பூநகரி.

வைத்திய அதிகாரியும்
சக உத்தியோகத்தர்களும் (007)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான உறவு

## ஈரான்-பாக். குறித்து அமெரிக்கா



ஈரான் –பாக்.எரிவாயு குழாய்வழி விநியோகத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது, ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள தடைகளை மீறுவதாகும். அதனால் ஏற்படும் பின் விளைவுகள் என்னவென்று பாகிஸ்தானுக்கே தெரியும்.

வாஷிங்டன்,மார்ச்.3

பயங்கர அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து வருவதாகக் குற்றம் சுமத்தி அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஈரான் மீது பொருளாதாரத் தடை விதித்துள்ளன. உலக நாடுகள் ஈரானுடன் வர்த்தகத் தொடர்பு எதுவும் வைத்து கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தி வருகின்றன.

இந்தநிலையில், பாகிஸ்தான் எரிசக்தி தேவைக்காக ஈரானில் இருந்து குழாய் மூலம் எரிவாயு கொண்டு வரும் திட்டத்தை செயல்படுத்த உள்ளது. இது குறித்து அமெரிக்க வெளியுறவு செயலர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்ததாவது; ஈரான் -பாக். எரிவாயு பைப் லைன் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது, ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள தடைகளை மீறுவதாகும். அதனால் ஏற்படும் பின் விளைவுகள் என்ன வென்று பாகிஸ்தானுக்கே தெரியும். பொருளாதாரம் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இது பாகிஸ்தானுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தும்- என்றார்.

# ஆர்ப்பாட்டங்கள் ஓயவில்லை



மாலி,மார்ச்.3

மாலைதீவில் அண்மையில் ஏற்பட்ட ஆட்சிக் கவிழ்பைப் தொடர்ந்து துணை அதிபராக இருந்த முகமது வாஹீத் ஜனாதிபதியானார்.

புதிய ஜனாதிபதியின் காலத்திலும் அங்கு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

பதவியிலிருந்து அகற்றப்பட்ட முன்னாள் ஜனாதிபதி நஷீத்தின் ஜனநாயகக் கட்சியினர் புதிதாகத் தேர்தல் நடத்தக் கோரிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

புதிதாக அதிபர் பொறுப்பேற்ற வாஹீத், முதன் முறையாக நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றத் திட்டமிட்டிருந்தார்.

இதற்கிடையே ஒரு மாதம் ஆகியும் தேர்தல் திகதி அறிவிக்கப்படாததால் ஆத்திரமடைந்த ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தில் உள்ள அதிபர், அமைச்சர்கள் மற்றும் சபாநாயகர் இருக்கைகளை அப்புறப் படுத்தினர்.

அத்துடன் அதிபர் பதவி விலக வேண்டும் என்று கோஷம் எழுப்பினர். இதற்கிடையே நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் நஷீத் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதை பொலிஸார் தடுக்க முயன்றதால் இருதரப்புக்கும் இடையே வன்முறை வெடித்தது. 14 ஆர்ப்பாட்டக்காரர்கள் காயமடைந்தனர்.

# ஜப்பான் அதிர்ந்து கொண்டேயிருக்கிறது




டோக்கியோ, மார்ச்.3

ஜப்பான் கடல் பகுதியில் நேற்று முன்தினம் பூகம்பம் ஏற்பட்டது. ஜப்பானில் கடந்த ஆண்டு மார்ச் 11ஆம் திகதியும் பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. அப்போது 9.0 புள்ளி றிச்டர் அளவில் பூகம்பம் பதிவானது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமித் தாக்குதலில் 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்திருந்தனர். கடலோர நகரங்களில் கடும் சேதம் ஏற்பட்டது. அணு உலைகளும் பாதிக்கப்பட்டன. ஓராண்டு முடியும் நிலையில் நேற்று முன்தினம் 6.0 றிச்டர் அளவில் பூகம்பம் பதிவானது. ஜப்பான் அருகில் உள்ள ஹோன்சு தீவு பகுதியில் பூகம்பம் மையம் கொண்டிருந்ததாக ஹொங்கொங்கில் உள்ள புவியியல் ஆய்வு மையம் தகவல் தெரிவித்தது.

இதனால் மக்கள் பீதி அடைந்துள்ளனர். இந்த மையம் ஜப்பானின் டோக்கியோ நகரில் இருந்து 150 கிலோ மீற்றர் தூரத்தில் பூகம்பம் மையம் கொண்டிருந்தது என்று தெரிவித்துள்ளது. இந்த பூகம்பத்தால் ஏற்பட்ட சேதம் பற்றி உடனடியாகத் தகவல் வெளியாகவில்லை. சுனாமி எச்சரிக்கையும் விடப்படவில்லை.

# ஈரானில் நேற்று தேர்தல்

அமெரிக்கா, ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் உட்பட பல்வேறு நாடுகளின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் நேற்று ஈரானில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

ஈரானின் சட்டம் இயற்றும் அமைப்பான மஜ்லிஸ் என அழைக்கப்படும் நாடாளுமன்றத்திற்கு 290 உறுப்பினர்கள் தெரிவு செய்யப் படவுள்ளனர். மொத்தம் 3,400 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

கடந்த 2009ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பல்வேறு முறைகேடுகள் நடந்தது என்று குற்றச் சாட்டு எழுந்தது. இதனால் அந்த நாட் டின் சில சீர்திருத்த மற்றும் பசுமை இயக்க அமைப்புகள் தேர்தலைப் புறக்கணித்துள்ளன. இதனால் ஜனாதிபதி அகமதி நிஜாத்துக்கு ஆதரவு அதிகரிக்கும் என செய்திகள் வெளியாகி வருகின்றன.


தேர்தலை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அன்றும்... இன்றும்...



நியூயோர்க்கில் நடைபெற்ற சிரிய நிலைமைகள் தொடர்பான மாநாட்டில் கலந்துகொண்ட முன்னாள் ஐ.நா.செயலாளர் கோபி அனானும் தற்போதைய ஐ.நா.செயலாளர் பான் கீ மூனும் கைலாகு கொடுக்கின்றனர்.

# டைட்டானிக்: 100ஆவது ஆண்டு நிறைவு



டைட்டானிக் கப்பல் மூழ்கிய 100 ஆவது ஆண்டு நினைவு தினம் கடை பிடிக் கப்படுகிறது.

டைட்டானிக் என்ற பயணிகள் சொகுசுக் கப்பல் கடலில் மூழ்கி 100 ஆண்டுகள் ஆகின்றன.

இந்தக் கப்பல் பிரிட்டனில் உள்ள சவுத் ஆம்ப்டன் நகரில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு கடந்த 1912ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி அட்லாண்டிக் பெருங்கடலில் தனது பயணத்தை தொடங்கியது.

அந்தப் பயணத்தின் போது கடலில் மூழ்கிய பிரமாண்டமான அந்த அதிநவீன சொகுசுக் கப்பலில் 2200 பயணிகளும், ஊழியர்களும் இருந்தனர்.

4 நாள் பயணத்துக்குப் பின் அதாவது ஏப்ரல் 14ஆம் திகதி இரவு 11.40 மணியளவில் அந்தக் கப்பல் ஒரு இராட்சத பனிப்பாறையின் மீது மோதியது. இதனால் கப்பல் 2 துண்டுகளாகப் பிளந்து கடலில் மூழ்கியது.

அதில் அவசர கால தேவைக்கு பயன்படுத்தப்படும் 20 சிறிய படகுகள் மற்றும் உயிர் காக்கும் கவச உடைகள் உதவியின் மூலம் பயணிகள் வெளியேற்றப்பட்டனர். இருந்தும் கப்பலில் இருந்த 705 பேரை மட்டுமே காப்பாற்ற முடிந்தது. 1,522 பேர் கடலில் மூழ்கிஉயிரிழந்தனர். இந்தச் சம்பவம் இன்னும் மறையாத அழிக்க முடியாத வடுவாக உள்ளது.

இந்தக் கப்பல் கடலில் மூழ்கி தற்போது 100 ஆண்டுகள் ஆகின்றன. அது கடலில் மூழ்கிய நினைவு தினம் எதிர் வரும் ஏப்ரல் 15ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது.

# ஆடை பறந்தது



தண்ணீர் குழாய் உடைந்து தண்ணீர் பீய்ச்சியடித்ததால், குழாய் திருத்துநர் ஒருவர் உறை பனி நிலையிலான கடும் குளிருக்கு மத்தியில் உள்ளாடைகளுடன் மாத்திரம் வீதியில் நிற்க வேண்டியேற்பட்ட சம்பவமொன்று சீனாவில் இடம்பெற்றுள்ளது.

யே லீ எனும் 41 வயதுடைய நபரே சீனாவின் நிங்போ நகரில் இந்தநிலைமையை எதிர்கொண்டார்.

நீர் செல்லும் குழாயின் மீது அவரின் வாகனம் மோதியதால் குழாய் உடைந்து தண்ணீர் பீய்ச்சியடித்துள்ளது.

இதனால் மேற்படி நபர் அணிந்திருந்த தண்ணீர் புகாத ஆடைகளுடன் அவரால் அவ்விடத்தில் நிற்க முடியவில்லை.

இறுதியில் அந்த ஆடையை களைந்துவிட்டு உள்ளாடையுடன் மாத்திரம் நின்று உடைந்த குழாயை சீராக்கத் தீர்மானித்தார்.

அப்போது அந்தப்பகுதி சூழல் வெப்பநிலை -4 பாகை செல்சியஸாக இருந்தது. கடும் குளிரில் யே லீ திணறிக்கொண்டிருந்த நிலையில் அவரின் நண்பர்கள் வாகனங்களிலிருந்த ஹீட்டர்களைப் பயன்படுத்தி அவரை சூடாக்கிக் கொண்டிருந்தனர்.

10 நிமிடங்கள்தான். ஆனால்- 4 பாகை வெப்பநிலை மிக குளிராக இருந்தது என யே லீ கூறியுள்ளார்.

# சிரியா செல்கிறார் அனான்

சிரியாவுக்கு சுற்றுப் பயணமொன்றை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக அந்த நாட்டுக்கான அரபு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி கோபி அனான் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெறும் இரத்தம் சிந்தும் நடவடிக்கையை நிறுத்துவதை ஊக்குவிப்பதற்கு ஜனாதிபதி பஷர் அல் அஷாத்தை கோரவுள்ளதாக கோபி அனான் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரை கொலை செய்வதைத் தடுப்பதற்கு வெளி உலகம் அதிகாரமற்றிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிரியா தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் அரபு மற்றும் மேற்குலக நாடுகள் கொண்டு வந்த கண்டனத் தீர்மானத்திற்கு எதிராக சீனா மற்றும் ரஷ்யா ஆகியன தமது சிறப்பு வாக்குகளைப் பயன்படுத்தி தடுத்து நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பல்கலைக்கழக இளைஞர் மாநாடு சிங்கப்பூரில்

**'தமிழ் இளையோர் அடையாளத்தை கற்பனை செய்தல்' எனும் தொனிப் பொருளில் இந்த மாநாடு நடைபெறும்.**

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரவையின் ஏற்பாட்டில், உலகப் பல்கலைக்கழக இளைஞர் மாநாடு இந்த வருடம் ஜூலை 6 முதல் 8 ஆம் திகதிவரை சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது.

'தமிழ் இளையோர் அடையாளத்தை கற்பனை செய்தல்' எனும் தொனிப் பொருளில் உலகெங்குமுள்ள பல்கலைக்கழகங்களில் பயிலும் இளையோர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிப்பதற்கான களத்தை இந்த மாநாடு வழங்கும்.

இந்த மாநாடானது, உலகெங்குமுள்ள தமிழ் சந்ததியைச் சேர்ந்த இளையோர்கள், 21 ஆம் நூற்றாண்டில் தமது இனத்துவ அடையாளத்தைப் பேணும் விதம் குறித்து கருத்துப் பரிமாற்றங்கள், விவாதங்களை நடத்துவதற்கான ஒரு முயற்சி என்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக தமிழ்ப் பேரவையின் 33 ஆவது நிறைவேற்றுக்குழு தெரிவித்துள்ளது.

தமது கட்டுரையின் சுருக்கத்தை சிங்கப்பூர் நேரப்படி 2012 மார்ச் 5 ஆம் திகதி காலை 9 மணிக்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு உலகெங்குமுள்ள பல்கலைக் கழகங்களில் பயிலும் இளையோர்களை அந்தப் பேரவை கோரியுள்ளது. இந்தப் பேரவை 1975 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# தேசிய குறுநாடக விழாவுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச்.3

கலாசார கலை மற்றும் அலுவல்கள் திணைக்களத்தின் கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் நாடகக்குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள '2012 ஆம் ஆண்டுக்கான தேசிய குறு நாடக விழாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து டிசெம்பர் 31 ஆம் திகதி வரை அரங்கேற்றப்பட்ட நாடகங்கள், மொழி பெயர்ப்பு நாடகங்கள், சுயமாகத் தயாரிக்கப்பட்ட நாடகங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் நாடகக் குழுவின் செயலாளரால் வழங்கப்படும் விண்ணப்பத்தை தகுந்த முறையில் பூரணப்படுத்தி 3 நாடகப் பிரதியுடனும் 3 சாராம்ச பிரதிகளுடனும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் 'தேசிய குறுநாடக விழா 2012' என குறிப்பிட்டு பதிவுத் தபாலில் நாடகக் குழு கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆவது மாடி செத்திறிபாய, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் விஜித்கனுகல தெரிவித்துள்ளார்.

மேற்படி விண்ணப்பப்படிவத்தினை மற்றும் சுற்றுநிருபம் என்பவற்றை மேற் குறிப்பிட்ட முகவரியிலும் அனைத்து மாவட்ட செயலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-13)

# வைக்கோல் குவியல் திருட்டு

வடமராட்சி, மார்ச். 3

வயலில் நெல் அறுவடை செய்யப்பட்ட பின்னர் வைக்கப்பட்ட வைக்கோல் குவியல் இரவு வேளையில் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் உடுப்பிட்டி தொண்டமானாறு வீதியில் உள்ள வயலில் நடைபெற்றுள்ளது.

குறிப்பிட்ட வயலில் நெல்லை அறுவடை செய்த விவசாயி நெல் மூடைகளை எடுத்துக்கொண்டு மறுநாள் வைக்கோலை டிராக்டரில் ஏற்றி வீட்டுக்கு எடுத்துச் செல்லத் தயாராக இருந்த வேளையில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

திருட்டுப்போன வைக்கோலின் பெறுமதி 12 ஆயிரம் ரூபாணமதிப்பிடப்பட்டுள்ளது.

இதே வயலில் அறுவடைக்கு முன்னர் சுமார் இரண்டு புசல் நெல் கொண்ட நெற் கதிர்கள் இனந்தெரியாதோரால் இரவு வேளையில் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-8)

# இளைஞர் கழகங்கள் புனரமைப்பு

வடமராட்சி, மார்ச். 3

பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கிராமங்கள் தோறும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் கழகங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

கிராம சேவையாளர்களின் அனுசரணையுடன் தேசிய இளைஞர் சேவை மன்ற பிரதேச அதிகாரியினால் இக் கழகங்கள் புனரமைக்கப்பட்டு புதிய உறுப்பினர்கள் உள் வாங்கப்பட்டு கழக நிர்வாகத் தெரிவுகளும் நடைபெற்று வருகின்றன. (வ-8)

# கல்விக்கு ஒதுக்கப்படும் நிதி இலங்கையில் மிகக் குறைவு

## சிரேஷ்ட விரிவுரையாளர் குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச்.3

ஒரு நாட்டின் சமயங்களை விட அதி முக்கியத்துவம் அறிவுக்கும், கல்விக்கும் வழங்கப்படுகின்றன. எவ்வாறான கஷ்டங்களை எதிர்நோக்கினாலும் பல நாடுகள் தமது தேசிய வருமானத்தில் கல்விக்கே அதிகளவான நிதியை ஒதுக்கி வருகின்றன. ஆனால் இலங்கை நாட்டின் குழந்தைகளின் கல்விக்காக அரசு 1.8 சதவீத நிதியையே ஒதுக்கியுள்ளது என்று இலவசக் கல்வியை வழங்கும் தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான தம்மிர அமில தேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த நிலையில் கியூபா .8.5 வீதத்தையும், அமெரிக்கா 5.6 வீதத்தையும் இந்தியா 4.1 வீதத்தையும் கல்விக்காக ஒதுக்குகின்றன என்று அவர் தெரிவித்தார்.

காலநிலை மாற்றம் மற்றும் அதிகமான வறுமையைச் சந்தித்துவரும் எத்தியோப்பியாவே 4.8 சதவீத நிதியை கல்விக்காக ஒதுக்குகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# மெய்வன்மைப் போட்டிகள்

புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி பணிப்பாளர் வே. பால சுப் பிரமணியமும் சிறப்பு விருந் தினராக புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபை யைச் சேர்ந்த ஆர். எஸ். ஈ. சுதாகரும் கலந்துகொள்வர். (வ)

* * *

புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் எஸ்.கே. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கலந்து கொள்வார். (வ)

***

கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் மெய்வன்மைப் போட்டி நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

சிவபூமி அறக் கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மலேசிய குகநாத சுவாமிகள் கலந்து கொள்வார். (த-14)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான பிறிமா No.1 புறொயிலர் குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085

(15218) (2-)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி மந்திரி (காசிப்பிள்ளை)



இலகடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மந்திரி (காசிப்பிள்ளை) 29.02.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - வெள்ளைச்சி தம்பதியரின் அன்பு மகனும் மணிமாலை (பவளம்) யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் காந்தரூபன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மோகன் (சுவிஸ்), சாந்தன் (கனடா), சுதர்சன், புஸ்பலதா, ரஜனி (கனடா), பரீனா (கனடா), ரூபினா (சுவிஸ்), பவானி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேசன், குணசேகரம் (கனடா), சிறீஸ்காந்தராஜா (சுவிஸ்), சந்திரசேகரம் (கனடா), ரவீந்திரன் (லண்டன்), வெண்ணிலா (சுவிஸ்), தர்சினி (கனடா), கீர்த்தனா ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.03.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
மனைவி, சகோதரர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தர்மகுலசிங்கம்.
ச.ச.நிலையம், வல்வெட்டி,
வல்வெட்டித்துறை. (பி/15277) (2-7-21)

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னுத்துரை அன்னமுத்து



சுதுமலை தெற்கு, எச்சாட்டி வைரவர் கோயிலடியைச் சேர்ந்த திருமதி பொன்னுத்துரை அன்னமுத்து 01.03.2012 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை (இணுவில்) அவர்களின் அன்பு மனைவியும் மற்றும் சோதிப்பிள்ளை, பாலசுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், சபாரட்ணம், கணேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், நல்லையா மற்றும் காலஞ்சென்றவர்களான இராசமணி, கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், லண்டனில் வசிப்பவர்களான ஜெயசீலன், சுமித்தா, மயூரன் ரூபிகா, றங்கா நிரஞ்சன், கஸ்தூரி காண்டீபன், கௌதமி மற்றும் கஜேந்தினி, நிசாந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஹவிசனின் (லண்டன்) அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.03.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகத் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எச்சாட்டி,
மானிப்பாய். (15280) (2-7-21)

தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முரண்பாடான கருத்துக்களை அகற்றி விட்டோம் Google

டில்லி,மார்ச் 3

இல னத்தில் முரண்பாடான வகையில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்த கருத்துக்கள் அகற்றப்பட்டுவிட்டன என்று அமெரிக்க தேடு தளமான கூகுள் இங்க் டில்லி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. ஒரு சேவை வழங்குநராக தங்களது பொறுப்பை உணர்ந்துள்ளதாக நிர்வாக சிவில் நீதிபதி பிரவீண் சிங்கிடம் அளித்த பிரமாணப் பத்திரத்தில் கூகுள் இங்க் தெரிவித்துள்ளது. (வ)

### சொத்துக் குவிப்பு வழக்கு:

## சசிகலாவின் மனு நிராகரிப்பு

சொத்துக்குவிப்பு வழக்கு தொடர்பாக இன்று உச்ச நீதிமன் றத்தில் விசாரணை நடைபெற உள்ளதால், பெங்களூர் நீதிமன்றத்தின் விசாரணையை நேற்றுடன் முடிக்க வேண்டும் என்ற சசிகலாவின் சட்டத்தரணி தாக்கல் செய்த மனுவை நீதி பதி நிராகரித்தார்

தமிழக முதல்வர் ஜெய லலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் வருமா னத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக தொடரப்பட்ட வழக்கு, பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடை பெற்று வருகிறது.

ஐந்தாவது நாளாக நேற்று முன்தினம் சசிகலா முன்னி லையாகி நீதிபதி கேள்வி களுக்கு பதிலளித்து வருகிறாா். நீதிபதிகளின் கேள்வி களுக்கு, பேப்பரில் உள்ள வற்றை படித்தவாறு பதில் சொல்லிவரும் சசிகலா, கேள்விகள் குறித்து குறிப் பெடுக்க பேப்பர் பயன் படுத்திக்கொள்ள அனுமதி கேட்டார். அதற்கு நீதிபதி அனுமதியளித்தார்.

மேலும் உச்ச நீதிமன்றத் தில், சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை இன்று நடைபெற உள்ளதால்நேற்று டன் விசாரணையை முடித் துக் கொள்ள வேண்டும் என் றும் மறு விசாரணையை எதிர்வரும் 7 ஆம் 8 ஆம் திகதி களில் நடத்த வேண் டும் என்று சசிகலாவின் சட்டத்தரணி தாக்கல் செய்த மனுவை நீதிபதி நிராகரித்து விட்டார். (வ)



டில்லியில் வெளியுறவு துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, சீனாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் யாங் ஜியங்சியை சந்தித்தபோது...

### இலங்கைக்கு எதிரான ஜெனிவா தீர்மானம்:

## அரசே வேண்டாம் ஆதரவு திருமாவளவன் ஆர்ப்பாட்டம்



ஜெனிவாவில்நடைபெற்று வரும் மனித உரிமைகளின் பேரவைக் கூட்டத்தில் இலங் கைக்கு எதிராகக் கொண்டு வரும் தீர்மானத்துக்கு ஆதர வளிக்க இந்திய அரசை வலி யுறுத்தும் வகையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை சென்னை, சைதாப்பேட்டை, பனகல் மாளிகை முன்பாக முற்பகல் 11 மணியளவில் விடு தலைச் சிறுத்தைகள் ஆர்ப் பாட்டம் நடத்தவுள்ளனர்.

திருச்சியில் வியாழக் கிழமை நடைபெற்ற கட்சியின் மாநிலக் குழு கூட்டத்துக்கு பின்னர் விடுதலைச் சிறுத் தைகள் கட்சித்தலைவர் தொல். திருமாவளவன் செய்தியா ளர்களுக்குப் பேட்டி அளித்த போது தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளின் பேரவைக் கூட்டம் கடந்த 27 ஆம் திகதி ஜெனிவாவில் கூடி யுள்ளது. இந்தக் கூட்டம் வழக்கத் துக்கு மாறாக, உலக நாடுக ளின் கவனத்தை ஈர்க்கும் சிறப்பைப் பெற்றுள்ளது. அதாவது முள்ளிவாய்க் கால் படுகொலைக்குப் பின் னர் ஐ.நா. பேரவையால் நியமிக் கப்பட்ட ஆய்வுக் குழு சிங் கள இனவெறி ஆட்சியாளர் களின் போர்க் குற்றம், இனப் படுகொலை, மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத் தியுள்ளது.

இந்தநிலையில், ராஜ பக்ஷ அரசின் மீது மனித உரிமை மீறல்கள் தொடர் பான குற்றச்சாட்டை தீர்மா னமாக முன்மொழிவதில் அமெரிக்கா மற்றும் அமெ ரிக்க ஆதரவு நாடுகள் முனைப் பாக உள்ளன. இதனால் நிலை கலங்கிப் போயிருக்கும் சிங் களவர்களுக்கு தங்களுக்கு ஆதரவாக இந்திய அரசு ஒத்துழைப்பு அளிக்கும் என்று அறிவித்துள்ளனர்.

தற்போது, மீண்டும் இந் திய அரசு தமிழினத்துக்கு துரோகம் இழைப்பதைக் கைவிட வேண்டும். மாறாக, நடைபெற்றுக் கொண்டி ருக்கும் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் சிங் கள அரசுக்கு எதிராகக் கொண்டு வரும் தீர்மா ணத்தை ஆதரித்து இந்திய அரசு குரல் கொடுக்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானத்துக்கு ஆதரவ ளிக்க இந்திய அரசை வலி யுறுத்துகிற வகையிலும், தீர்மானத்துக்கு உலக நாடு களின் ஆதரவைக் கோரி நாளை மறுதினம் ஜெனிவா வில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் நடத்தும் பேர ணியை ஆதரிக்கும் வகையி லும், அதே நாளில் விடுத லைச் சிறுத்தைகளின் சார்பில் சென்னை, சைதாப்பேட்டை, பனகல் மாளிகை முன்பு காலை 11 மணியளவில் ஆர்ப் பாட் டம் நடைபெறுகிறது.

விடுதலைச் சிறுத்தை கள் மட்டுமின்றி தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் அனை வரும் பெருந்திரளா கப் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்- என்றார் அவர். (வ)

## மாவோயிஸ்ட் முக்கியஸ்தர் உட்பட 4 பேர் கைது

கொல்கத்தா, மார்ச்.3

மேற்குவங்கத்தில் சுட் டுக்கொலை செய்யப்பட்ட முக்கிய மாவோயிஸ்ட் தலை வர் கிஷன்ஜியின் வலது கர மான மற்றொரு மாவோ யிஸ்ட் தலைவர் உட்பட நான்குபேர் கைது செய்யப் பட்டனர்.

ஆந்திராவைச் சேர்ந்த கோடீஸ்வர் ராவ் என்ற கிஷன்ஜி, கடந்த வருடம் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி மேற்குவங்க மாநிலத் தில் பாதுகாப்புப் படையின ருடன் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் சுட்டுக்கொல் லப்பட்டார்.

இவருக்கு பின் தலை வர் பொறுப்பேற்றதாகக் கூறப்படும் ஆர்.கே. என்ற ராமகிருஷ்ணா, கிஷன்ஜி யின் அடுத்த தலைவராக மாவோயிஸ்ட்டுகளால் முடி சூட்டப்பட்டார். இவர் மீது ஆந்திரா, ஒரிசா, ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் பல் வேறு வழக்குகள் உள்ளன. இருமாநில அதிரடிப்படை யினர் இவரைத் தேடி வந்த னர்.

இந்தநிலையில் மேற்கு வங்க மாநிலத்தில் வனப் பகுதியில் பதுங்கியிருப் பதாகக் கிடைத்த ரகசியத் தகவலை அடுத்து நடத்திய தேடுதல் வேட்டையில் கைது செய்யப்பட்டார். ஆர்.கே.வு டன் நான்கு மாவோயிஸ்ட் டுகள் கைது செய்யப்பட்ட னர். அவர்கள் கொல்கத்தா மெட்ரோ பொலிட்டன் மாவட்ட நீதிமன்றம் பந்தோ பாத்தியா முன்பு முன்னி லைப்படுத்தப்பட்டனர். எதிர் வரும் 13 ஆம் திகதி வரை அவர்களை காவலில் வைக் கும்படி நீதிபதி உத்தரவிட் டார்.

கைது செய்யப்பட்ட ஆர்.கே.என்ற ராமகிருஷ் ணன், மெக்கானிக்கல் பொறியியல் படித்துள்ளார். (வ)

## கம்யூனிஸ்ட் கட்சியும் ஆர்ப்பாட்டம்

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி எதிர் வரும் 6 ஆம் திகதி தமிழகத் தில் மாவட்டத் தலைநக ரங்களில் இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியினர் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடு படப் போவதாக அந்தக் கட்சின் மாநிலச் செயலர் தா. பாண்டியன் தெரிவித் தார்.

தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை அரசின் குற்றத்தை மூடி மறைக்க மத்திய அரசு தொடர்ந்து முயற்சிக்கிறது. இலங்கை அரசுக்கு ராணுவ உதவி மற்றும் பண உதவி வழங் குவதை மத்திய அரசு உட னடியாக நிறுத்த வேண் டும் என்றார் அவர். (வ)

## ஆகாஷ் ஏவுகணை இன்று விமானப் படையில் சேர்ப்பு



வானிலிருந்து இலக்கு களை துல்லியமாகா தாக் கும் ஆகாஷ் ஏவுகணை இந் திய விமானப் படையில் இன்று சேர்க்கப்பட உள்ளது.

இந்தியாவின் ஆகாஷ் ஏவுகணைகள் டி.ஆர்.டி.ஓ எனப்படும் ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு துறை சார்பில் ஒருங்கிணைந்த ஏவுகணை மேம்பாட்டு திட் டத்தின் கீழ் (ஐ.ஜி.எம்.டி.பி.) வடிவமைக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் டி.ஏ. எல். எனப்படும் இலகுரக ஏவுகணையான ஆகாஷ் ஏவுகணை, ஆந்திராவின் விசாகபட்டினத்தில் உள்ள தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வகத் தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏவுகணையானது ஆளில்லா விமானங்கள், போர் விமானங்களை தாக் கவல்லது. கப்பல்தளம், ஹெலி கொப்டர், நீர்முழ்கி கப்பல்கள் ஆகியவற்றிலி ருந்தும் ஆகாஷ் ஏவுக ணை யைச் செலுத்தலாம்.

இந்த ஏவுகணை இந் திய விமானப் படையிடம் முறைப்படி இன்று ஒப் டைக் கப்படவுள்ளது. இதற் கான விழாவில் ராணுவ அமைச்சர் ஏ.கே.அந் தோணி கலந்து கொள்கிறார்.

இந்த ஏவுகணையை பேட்ரியாட் என்று விஞ்ஞ னிகள் அழைக்கின்றனர் பேட்ரியாட் என்பது கடந் 1990ஆம் ஆண்டு ஈரா கில் நடந்த வளைகுட போரில் பெருமளவு பய படுத்தப்பட்ட அமெரிக் க வின் சிறந்த படைப்பாகும்

மேலும் ஆகாஷ் ஏ கணை தயாரிப்பின் பிரதா நோக்கம் சீனாவினால் அச் றுத்தல் ஏற்படும் பட்சத்தில் சீனாவை எதிர்க்கப் பய படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ

## பாக். உளவு அமைப்புடன் மாவோயிஸ்ட்டுகள் தொடர்பு

டில்லி, மார்ச்.3

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐக் கும் மாவோயிஸ்ட்டுகளுக் கும் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. மாவோ யிஸ்ட்டுகளுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பதற்கும், அவர்கள் மூலம் இந்தியா வில் தாக்குதல் நடத்துவ தற்கும் பாகிஸ்தான் உளவு அமைப்பு திட்டமிட்டு வருவ தாகவும் தகவல்கள் தெரி விக்கின்றன.



தீவிரவாதிகளை இந்தி யாவுக்குள் ஊடுருவச் செய்து இந்தியாவில் நாச வேலை களை பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. செயற்படுத்தி வருகிறது. தற்போது மாவோயிஸ்ட்டு தீவிரவாதிகளுடனும் ஐ.எஸ்.ஐ. தொடர்பு ஏற் படுத்திக் கொண்டிருக்கி றது என்று மத்திய உளவுத் துறை தெரிவித்துள்ளது. தெரியவந்துள்ளது.

இதுதொடர்பான உறுதி யான ஆதாரங்களுடன் உள வுத்துறையின் ரகசிய அறிக்கை வெளியாகி பரபரப்பை ஏற் படுத்தி உள்ளது.

அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:

ஐ.எஸ்.ஐஇற்கும், மாவோயிஸ்ட் டுகளுக்கும் இடையே நேரடித் தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்ததில், உல்பா தீவிரவாத இயக்கத் தளபதி பரேஷ் பருவா முக் கிய பங்கு வகித்துள்ளார். நேரடித் தொடர்பு ஏற்பட்ட வுடன், மாவோயிஸ்ட்டுக ளுக்கு நிதி உதவி அளிக்க ஐ.எஸ்.ஐ. முன்வந்தது.

ஆனால், நிதி உதவியை மாவோயிஸ்ட்டுகள் ஏற்க மறுத்துவிட்டனர். தங்களி டம் ஏற்கனவே பணம் குவிந்து கிடப்பதாக கூறிய அவர்கள், அதற்கு பதிலாக ஆர்.டி.எக்ஸ், நேரம்குறித்த குண்டு மற்றும் அதிநவீன ஆயுதங்கள் மற்றும் தள பாடங்களை அளிக்குமாறு கேட்டுக் கொண்டனர். மேலும், தங்கள் இயக்க தளபதிகளுக்கு அதிநவீன ஆயுதங்களை பயன்படுத்த பயிற்சி அளிக்குமாறு வலி யுறுத்தினர்.

மாவோயிஸ்ட்டு தீவிர வாதிகளுக்கு கே.எல்.ஓ. என்ற மற்றொரு வடகிழக்கு மாநில தீவிரவாத இயக்கம் மூலமாக 'உல்பா' ஆயுத விநியோகம் செய்து வருவ தும் தெரியவந்துள்ளது.

வங்காளதேசத்தில் ஐ. எஸ்.ஐ. உளவாளியாக முக மது அஸ்லம் என்பவர் செயல் பட்டு வருகிறார். அவரை இந்தியாவில் உள்ள மாவோ யிஸ்ட்டு மேலிட தலைவர்க ளுடன் தொடர்ந்து தொடர் பில் இருக்குமாறு ஐ.எஸ்.ஐ. உத்தரவிட்டுள் ளது.

மேலும், மாவோயிஸ்ட் டுகளை பயன்படுத்தி, கட லோரத்தில் அமைந்துள்ள உள்கட்டமைப்புத் திட்டங் கள் மற்றும் தொழில் நிறு வனங்கள் மீது தாக்குதல் நடத்த ஐ.எஸ்.ஐ. திட்டமிட் டுள்ளது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காலிகமாக வீதி மூடப்படும்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சென்.ஜோன்ஸ் கல்லூரிகளுக் கிடையிலான பெருந்துடுப்பாட்டத்தினை முன்னிட்டு எதிர்வரும் 8ஆம், 9ஆம், 10ஆம் திகதிகளில் இராஜேந்திர பிரசாத் வீதி மூடப்பட் டிருக்கும் என்று மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார். குறித்த வீதிப் பாவனையாளர்கள் மாற்று வழியைப் பயன்படுத்துமாறும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)


## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னைமடியில்
01★07★1979

தெய்வபாதத்தில்
03★03★1996

### செல்வன் ம.பிரேமானந்

பதினாறு வயதில் பரமபதம் அடைந்த பாலனே
எத்தனை வருடங்கள் சென்றாலும்
என்றும் மறவோம் உங்களை
துள்ளித் திரியும் பள்ளிப் பருவத்தில்
மாய்ந்ததே உங்கள் வாழ்க்கை
உங்களைத் தேடும் எம் உள்ளம் ஆறுமா?
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல.26/2, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (15276) (2-7)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.



## அந்தியேட்டி அழைப்பு



திருமதி
### புவனேஸ்வரி இரத்தினம்

இமை மூடித் திறப்பதற்குள் நீர் மறைந்து
நாள்களோ முப்பத்தொன்றாகிவிடே
நாம் வாழும் காலம் வரை உங்கள்
நினைவு
எம் மனங்களின் நீங்காமற
நிறைந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்திபெற
அருளுமாறு
மஞ்சவனப்பதி முருகன் பாதம்
பணிகின்றோம்.

இன்று (03.03.2012)சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மண்ணில்
10.07.1928

விண்ணில்
02.02.2012

2ஆம், ஒழுங்கை,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தனம் (மகன்).



## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா மாணிக்கம்



வீரபத்திரர் கோயிலடி, சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாக வும் கொண்ட திருமதி நாகம்மா மாணிக்கம் 28.02.2012 செவ்வாய்க்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சம்பந்தர்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்பு மனைவியும் வீரசிங்கம், தங்கம்மா, சின்னம்மா, பூரணம், செல்லையா, இராசேந்திரம், பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெகதீஸ்வரன் (அவுஸ் திரேலியா), கலாதேவி (கனடா), நிரஞ்சனாதேவி (லண்டன்), ரவீந் திரதாஸ் (லண்டன்), சுரேஸ் (லண்டன்), றமேஸ் (அவுஸ்திரே லியா) ஆகியோரின் தாயும், காந்தி (அவுஸ்திரேலியா), திருநாவுக் கரசு (கனடா), காலஞ்சென்ற செந்தில்குமார் மற்றும் வசந்தராணி (லண்டன்), சிவநிதி (லண்டன்), துஸ்யந்தி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், சுதர்ஸன் (சண்டிலிப்பாய்), தாரணி -சுதன், மயூரன் (அவுஸ்திரேலியா), பிரணவன், துர்க்கா, செந்திலன், கேசவன் (கனடா), கமலன், கோகுலன், அபிராமி, குமரன், செந்தூ ரன், சிவஜனனி (லண்டன்), சானுஷன், வினோஷன், மயூரி (அவுஸ் திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.03.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் சண்டிலிப்பாய் வடக்கில் அமைந்துள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் கோயிலடி,
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய். (15275) (7,21,10)

தகவல்:
பொ.சிவராசா (மருமகன்).


# ஆலய வீதிக்கு மின் விளக்குகள்

கொழும்புத்துறை,மார்ச்.3

கொழும்புத்துறை கிழக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய திருவிழாவை முன்னிட்டு ஆலயப் பகுதி வீதிகளுக்கு யாழ். மாநகரசபையால் மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

யாழ்.மாநகரசபை உறுப்பினர் அ.கொர்னேலியஸின் முயற்சியால் இந்தப் பகுதிகளுக்கு புதிய மின் விளக்குகள் பொருத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாலயத்தின் தேர்த்திருவிழா 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கும் தீர்த்தத்திருவிழா மறுநாள் காலை 9.30 மணிக்கும் நடைபெறவுள்ளது. (ம-135)

# ஒரு வருடச் சிறை

யாழ்ப்பாணம்,மார்ச்.3

முற்குற்றம் புரிந்தவர் 18 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசியைத் திருடியதனால் அவருக்கு ஒருவருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதி மன்றில் நீதிவான் ஆர்.எஸ்.எம். மகேந்திர ராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஊர்காவற்றுறை, கரம் பொன்னைச் சேர்ந்த பிரஸ்தாப நபர் ஏற்கனவே திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டதனால் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார். அவருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதகால சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

5 வருட காலப்பகுதியில் பிரஸ்தாப நபர் ஏதாவது குற்றம்புரிந்தால் அந்தத் தண்டனை நடைமுறைபடுத்தப்படும் என்ற சட்டவிதி முறைக்கமைய கைத்தொலைபேசியைத் திருடியதனைச் சந்தேகநபர் ஒப்புக்கொண்டதனால் அவரைக் குற்றவாளியாக இனங்கண்டு அவருக்கு ஒருவருட சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார் நீதிவான். (ம-4)


## வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி டிப்போ றோட்டுக்கு அருகில் '10 x16' அளவுள்ள சிறிய றூம் சகல வசதிகளுடன் உண்டு.

தொடர்புகளுக்கு : 077 1045415

(14052)(-7-8)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

## மலிவு விற்பனை

யாழ்.நகரில் எங்கும் இல்லாத மலிவு விலையில் JAPAN SONY Wega Flat TV கள் 21", 25" - 13500/= முதல், குளிர்சாதனப் பெட்டிகள் 19500/=, பைனியர் அம்பிளிபயர் 10 000/=, CD - Radio - Casstte - 3000/=

தொடர்பு: 077 0440570, சோனி றேட் சென்ரர்
(கொமர்சல் வங்கி முன்பாக) 56, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 51 - XXXX தொடரிலக்கமுடைய செல்மொடல் வான் உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 0776331914

## தேவை

வெள்ளவத்தையில் இரு முதியவர் அடங்கிய குடும்பத்துக்கு தங்கியிருந்து சகல வேலைகளையும் செய்யக்கூடிய, பொறுப்புக்கள் அற்ற 40 வயதுக்கு உட்பட்ட பணிப்பெண் தேவை. தனி வசதிகள் செய்து கொடுக்கப்படும். சம்பளம் தகுதியுடையோருக்கு ரூபா 12000 வழங்கப்படும்.

தொடர்பு: 0112365967

## கடை வாடகைக்கு

திருநெல்வேலி வடக்கு, ஆடிய பாதம் வீதியில் தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகில் அமைந்துள்ள புதிய மாடிக் கட்டடத்தின் மேல் மாடி வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 0750108585



## கோண்டாவில் சிவபூமி பாடசாலை விளையாட்டுப் போட்டி

காலம்
03.03.2012 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணி

இடம்
சிவபூமி பாடசாலை

தலைவர்
கலாநிதி ஆறு.திருமுருகன்
(தலைவர் - சிவபூமி அறக்கட்டளை)

பிரதம விருந்தினர்
வணக்கத்துக்குரிய குகநாத சுவாமிகள்
(மலேசியா)

கௌரவ விருந்தினர்
உயர் திரு. S. ஞானகணேசன்
(மின்பொறியியலாளர் - யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்
திரு.மா.இளம்பிறையன்
(தலைவர், சர்வதேச விசேட ஒலிம்பிக் குழு, வடமாகாணம்)
திருமதி. சிவசக்தி இளம்பிறையன்
(ஆசிரியர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(15274)(7,21,10) சிவபூமி குடும்பம்.



## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
06★05★1924

மறைவு
13★02★2011

### அமரர் கணபதிப்பிள்ளை அன்னம்மா

திதி: தசமி

அன்புடன் எமை அரவணைத்து
அகிலத்தில் சீருடனே வாழவைத்தீர்
ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறாது உங்கள் நினைவுகள்
இன்றல்ல நேற்றல்ல இனிவரும்
காலங்கள் யாவிலும் மறவோம்
உங்களை....

(14670) (2-7)

கெற்பேலி மேற்கு,
மிருசுவில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்

### அந்தோனிமுத்து பேர்னபேத் (துங்கமணி)



சேந்தாங்குளத்தைப் பிறப்பிடமாக வும், போயிட்டி, இளவாலையை வசிப்பிடமாக வும் கொண்ட அந்தோனிமுத்து பேர்னபேத் (துங்கமணி) நேற்று முன்தினம் (01.03.2012) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கஸ்பார் - மரியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அந்தோனிமுத்துவின் (புத்திரர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற றோஸ் மற்றும் இராசேந்திரம், நேசம் ஆகி யோரின் அன்புச் சகோதரியும் செல்வராணி, மல்லிகா, ரவி காலஞ் சென்ற துரை மற்றும் சுகந்தி, யஸ்ரின், சியாமிளா, றீற்றா, கண்ணன் ஆகியோரின் அன்புத் தாயும், மரிசிலின் ரட்ணராஜா, இராஜேஸ்வரி, கென்றி யோசேப், விஜிதா, அலோசியஸ், ஜெறோம், கொறற்றி ஆகியோரின் அன்பு மாமியும் தீபா, ஜனா, விஜய், ஜோய், அருணா, சங்கீதா, வித்தியா, அன்ரனி, ஜினோலினி, ஜினோசன், ஜினோத், விலுக்ஷி, அஸ்விதா, அஷாணா, டிலைக்ஷன், டிலுஷா, டிஷான், சுகன்யா, சுவேதா, ஆகாஷ் அஜித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டெனி சிமேரி, மரிலேனா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2012) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு போயிட்டி புனித லூர்த்து அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித லூர்த்து அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

போயிட்டி,
இளவாலை. (சி/9533) (2-7-21)

தகவல்:
பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கவும்

## அரச பொது ஊழியர் சங்கம் வலியுறுத்து

**குறைந்த வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத திண்டாட்ட நிலையிலிருந்து வரும் அரச ஊழியர்களுக்கு சம்பள விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பாங்கையே அரசு காட்டி வருகின்றது.**

அம்பாறை,மார்ச்.3

பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். மாற்றாந்தாய் மனப்பாங்கைக் கைவிட்டு இந்தச்சம்பள உயர்வை அரசு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்..

இவ்வாறு அகில இலங்கை அரச உதவிப் பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சங்கம் அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றில் இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

அகில இலங்கை பொது ஊழியர் சங்கம் சார்பில் அதன் தலைவர் எஸ்.லோகநாதன் இந்த மனுவை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள அரச அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பல வருட காலமாக முறையான வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படாமல் பொருளாதார ரீதியிலான பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தற்போது விலைவாசி உயர்வு, எரிபொருள் விலையேற்றம், மின்கட்டண உயர்வு, நீர்க் கட்டண உயர்வு, எரிவாயு சிலிண்டர் விலை, தொலைபேசிக் கட்டணம் என்பன அரச ஊழியர்களைப் பெரிதும் பாதித்துள்ளதுடன் பொருளாதார ரீதியிலான தாக்கங்களையும் அவை ஏற்படுத்தியுள்ளன.

இந்த வருடம் அரச ஊழியர்களுக்கு அரசு 10 வீத மேலதிகக் கொடுப்பனவு வழங்கியிருந்தும் இது பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்குப் போதுமான நிவாரணத்தை வழங்கவில்லை.

இந்த நிலையில் மின்சார சபை, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊழியர்களுக்கு அவர்கள் முன்னெடுத்த போராட்டம் காரணமாக 25வீத சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறைந்த வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத திண்டாட்ட நிலையிலிருந்து வரும் அரச ஊழியர்களுக்கு சம்பள விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பாங்கையே அரசு காட்டிவருகின்றது.

அதேவேளை சம்பள உயர்வு மற்றும் சம்பள முரண்பாடு தொடர்பாக அரசால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு கடந்த ஆறுவருட காலமாகத் தமது சிபாரிசுகளை அரசுக்கு முன்வைக்காமல் இருப்பதை அரச ஊழியர்கள் அதிருப்தியுடன் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே ஜனாதிபதி அரச ஊழியர்கள் எதிர்நோக்கும் இந்தப்பிரச்சினைக்குத் தீர்வாக அடிப்படைச் சம்பளத்துடன் பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

# 'மெலிபன்' பால்மா நிறுவனம் உற்பத்தியை நிறுத்தியது

கொழும்பு,மார்ச்.3

பால்மாக்களின் விலைகளை அதிகரிப்பதற்கு அரசின் அனுமதி கிடைக்காததன் காரணமாக அதிகளவில் நட்டமடைய நேர்ந்திருப்பதால் 'மெலிபன்' பால்மா நிறுவனத்தின் உற்பத்தி செயற்பாடுகள் கடந்த 24ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் ஊடகமொன்றுக்குத் தெரிவித்தார்.

நாளொன்றில் 400 கிராம் நிறைகொண்ட மெலிபன் பால்மா ஒரு லட்சத்து 25 ஆயிரம் வரையில் உற்பத்தி செய்யப்படுவதோடு, இரு வேலை நேரங்களும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதால் நிறுவனம் நாளொன்றில் 27 லட்சம் ரூபாய்கள் வரையில் நட்டமடைய வேண்டி நேர்ந்துள்ளதாக இந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்த நிலைப்பாட்டின் காரணமாக தொழிற்சாலைப் பணியாளர்களின் விநியோகங்கள், பிரதிநிதிகளின் மற்றும் விற்பனைப் பிரநிதிகளினதும் வேலை வாய்ப்புக்கள் இழக்கப்படும் அபாயம் தலைதூக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நிறுவனத்தினால் ஏற்கனவே தருவிக்கப்பட்டுள்ள பால்மா தொகையொன்று தற்போது கொழும்புத் துறைமுகத்தில் தேங்கியிருப்பதாகவும், புதிய தருவித்தல் கட்டளைகள் 50 வீதம் வரையில் குறைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

டொலரின் பெறுமதி உயர்வடைந்து செல்வதன் காரணமாக ஏற்க வேண்டியுள்ள நட்டத்தைக் குறைத்துக் கொள்வது தொடர்பாக 400 கிராம் நிறைகொண்ட பால்மா பக்கற் ஒன்றின் விலையை 15 ரூபாவால் அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு அனைத்து பால்மா நிறுவனங்களும் நுகர்வோர் அதிகார சபைக்கு கோரிக்கையொன்றை விடுத்துள்ளன. இந்தக் கோரிக்கைக்கு இதுவரையிலும் அனுமதி கிடைக்காததன் காரணமாக சில பால்மா நிறுவனங்கள் பால்மா இறக்குமதியைக் குறைத்துக் கொண்டுள்ளதோடு மேலும் சில நிறுவனங்கள் எதிர்வரும் நாள்களில் பால்மா இறக்குமதியை நிறுத்தி விடுவதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளன.

இந்த நிலைப்பாட்டுக்கு அமைய, எதிர்காலத்தில் வர்த்தகச் சந்தையில் பால்மா தட்டுப்பாடு நிலவக்கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-22)

# எயிட்ஸ் நோயினால் 250 பேர் உயிரிழப்பு

கொழும்பு,மார்ச்3

இலங்கையில் எயிட்ஸ் நோயினால் 3 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்களில் இதுவரை 250 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் எயிட்ஸ் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் டாக்டர் என். எதிரிசிங்க தெரிவித்தார்.

இந்த நோயின் தாக்கத்தால் 15- 49 வயதுக்கு இடைப்பட்டவர்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்டவர்கள் மேல் மாகாணத்திலேயே அதிகம் உள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மேர்வின் சில்வாவுக்கு ஒழுக்காற்று விசாரணை

**அமைச்சருக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை நேரில் ஆய்வு செய்து ஒழுக்காற்று குழுவினரிடம் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டது.**

கொழும்பு,மார்ச்3


பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பாகவுள்ளன.

ஊழல் மோசடிகளில் இவர் ஈடுபட்டதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

அமைச்சர் மேர்வின் சில்வா கப்பம் கோரல்களில் ஈடுபட்டு வருகிறார் என்று களனி பிரதேச சபை உறுப்பினர்களும், வர்த்தகர்களும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் லஞ்ச ஊழல் தவிர்ப்புப் பிரிவு தனியான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நேரில் ஆய்வு செய்து ஒழுக்காற்று குழுவினரிடம் ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



மாலைதீவு இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை மற்றும் மனித வள அமைச்சர் முஹம்மது ஹுசைன் ஷெரீப், இலங் கையின் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவை அண்மையில் கொழும்பு, நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சில் சந்தித்தபோது......

# அரசுக்கு ஏற்படும் அழுத்தங்களை மக்கள் மீது திணிக்க முயற்சி

**அழுத்தங்கள் மக்கள் மீது திணிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. நாட்டுக்கு எதிராக ஏதேனும் ஆபத்துக்கள் ஏற்பட்டால் அதற்காக எப்போதும் குரல்கொடுப்போம்.**

கொழும்பு,மார்ச்3

அரசு தனக்கு ஏற்படும் அழுத்தங்களை, நாட்டு மக்கள் மீது திணிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் அமெரிக்காவால் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானம் இந்த அரசுக்கு எதிரானது. இலங்கை மக்களுக்கு எதிரானதல்ல என்று அவர் தெரிவித்தார்.

அரசின் மீதான அழுத்தங்கள் மக்கள் மீது திணிக்கப்படுவதனை அனுமதிக்க முடியாது. நாட்டுக்கு எதிராக ஏதேனும் ஆபத்துக்கள் ஏற்பட்டால் அதற்காக குரல் கொடுக்கத் தயார் என்று அவர் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளதனால் பாண், எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராக போராட்டம் நடத்த வேண்டாம் என்று மக்களை அரசு கோரியுள்ளது.

அரசின் இவ்வாறான கருத்துக்களுக்கு நாம் ஏமாந்து விடக்கூடாது - என்றார். (ச)

# வடக்கில் நெல் விளைச்சல் அதிகம்

கொழும்பு,மார்ச்.3

வடமாகாணத்தில் இந்த ஆண்டு அதிக நெல் விளைச்சல் கிடைத்து வருவதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவிக்கிறது.

அதற்கமைய, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் பிரதேசங்களில் ஆறு நெல் கொள்வனவு நிலையங்கள் முன்பு திறக்கப்பட்டுள்ளன என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் அனுராதபுர வலய முகாமையாளரான பந்துலகுமார தெரிவித்தார்.

இந்த நிலையங்கள் மூல[illegible] ஆயிரம் கிலோ நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச-22)

# அதிவேக நெடுஞ்சாலைப் பயணம்: அனுமதி பெறாத பஸ்களுக்குத் தடை

## துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்.3

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ள இலங்கைப் போக்குவரத்துச்சபை மற்றும் தனியார்துறை பஸ்களைத் தவிர்ந்த வேறு பஸ்கள் இந்த வீதியால் பயணிப்பதற்கு கடந்த 29ஆம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத்துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்தார்.

[illegible] சேவை தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிப்பதால் அது தொடர்பாக குறித்த பிரதேசத்தின் பிரதேச வழித்தட பயணிகள் போக்குவரத்து அதிகார சபையிடமிருந்து விசேட அனுமதிப் பத்திரமொன்றைப் பெறவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

குளிர்சாதனவசதி கொண்ட மற்றும் ஆசனப் பட்டிகள் இல்லாத தரநிர்ணயமற்ற பஸ்கள் சட்டவிரோதமாக அதிவேக நெடுஞ்சாலையில் பயணிகள் போக்குவரத்துச் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகக் கிடைத்துள்ள முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிகள் போக்குவரத்துச் செயற்பாடுகள் தொடர்பாக நான்கு இ.போ.ச.பஸ்கள் மற்றும் இரண்டு தனியார்துறை பஸ்கள் ஆகியவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த வாகனங்களின் தொடரிலக்கங்கள் அதிவேக நெடுஞ்சாலையில் உள்ளிடும் கருமபீடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

அதற்கமைய, எந்தவொரு பஸ்களும் சட்டவிரோதமாக பயணிகள் போக்குவரத்துச் செயற்பாடுகளை மேற்கொள்ள அனுமதி இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் தன்னலமற்ற சேவை**

எமது அடுத்த கிளை புத்தளத்தில் இம்மாதம் 10ம் திகதி ஆரம்பிக்கப்படுகின்றது என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றோம்

- கணனி மயப்படுத்தப்பட்ட நவீன கண் பரிசோதனை முறை
- எல்லா விதமான கண்டக் லென்சுகளும்
- குறைந்த விலை 1000/- இல்
- மாணவர்களுக்கு 20% விஷேடமான கழிவு
- வயோதிபர்களுக்கு வீட்டுக்கு வந்து சேவை வழங்கப்படும்

**CARVALHO OPTICALS**
No: 10/1, Kalviankaadu Super Market, Pointpetro Road, Nallur, Jaffna, Sri Lanka.
Tel: 077 777 0440 Email: gstani@hotmail.com


## ஊழியர்களுக்கு மீண்டும் உணவு

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலை ஊழியர்களுக்கு மீண்டும் இந்த வருடம் முதல் சமைத்த உணவு வழங்கப்படுகின்றது. வைத்தியசாலை ஊழியர்களுக்கு கடந்த சில வருடங்களுக்கு முன்னர் உணவு வழங்குவது இடைநிறுத்திவைக்கப் பட்டிருந்தது. (ஒ-100)

உ
ஓம் சக்தி



## ஷஷ்டியப்த பூர்த்தி வைபவ அழைப்பு

உபயகுசலோபரி

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான கர வருடம் மாசி மாதம் 21ஆம் நாள் (04.03.2012) ஞாயிற்றுக்கிழமையும் புனர்பூச நக்ஷத்திரமும் கூடிய காலை 9 மணி முதல் 10 மணிவரையுள்ள சுபவேளையில்

**பாரத்துவாஜ கோத்திரம், உத்தரகோவை,**
**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆதீன பிரதம சிவாச்சார்யார்,**
**ஸாகித்ய சிரோன்மணி**

**சிவஸ்ரீ வை.மு.ப. முத்துக்குமாரசுவாமி சிவாச்சார்யார்**
**ஸ்ரீமதி பர்வதவர்த்தனி அம்மா தம்பதிகளுக்கு**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அனுக்கிரகத்தினால் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் சூழ சஷ்டியப்தபூர்த்தி சாந்தி வைபவம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் செய்வதற்கு உத்தேசித்துள்ளதால் அன்றைய தினம் தாங்கள் தம்பதிகள் சகிதம் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


''சிவானந்த குருவாசம்'',
குருக்கள் ஒழுங்கை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (15287)(7,34)

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்.
**ஸ்ரீமான் பாலகுமாரசாமி குருக்கள்**
**ஸ்ரீமதி நிஷாளினி தம்பதிகள்**
**ஸ்ரீமான் மு. குருபரசாமி குருக்கள்**
**ஸ்ரீமதி சந்தானலக்ஷ்மி தம்பதிகள்**

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை முருகையா

*(N.V.M.சுருட்டு முதலாளி)*



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை முருகையா கடந்த 29.02.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான முருகேசு - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் கணேஸ்வரியின் பாசமிகு கணவனும், முருகவேள் (தொழில் வழிகாட்டல் அதிகாரி, ஆசிரிய மத்திய நிலையம், மாங்குளம்), மனோகரி, முருகானந்தி (சுவிஸ்), உதயவேணி (சுவிஸ்), குமரவேள் (சுவிஸ்), கோவர்த்தனி (முன்பள்ளி ஆசிரியை, இணுவில் இளந்தொண்டர் சபை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சகிலாதேவி (ஆசிரியை, யா/ கட்டுடை சைவவித்தியாசாலை), ஸ்ரீகுமார் (மெக்கானிக்), தயாபரன் (சுவிஸ்), பரமானந்தராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான யோகநாதன், நாகையா, கமலேந்திரன் மற்றும் செல்வநாதன் (லண்டன்), நடராசா (ஊரெழு), புவனேஸ்வரி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், செல்வரத்தினம் காலஞ்சென்ற செல்வராணி ஆகியோரின் மைத்துனரும், ஆதிபன், ஆருஷன், அக்ஷதன், தரன்சிகன், தருண், அர்ச்சனா, பிரித்திகா, ஆருணி, அஸ்விகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (04.03.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''பாப்பாத்தோட்ட வீதி''
இணுவில் மேற்கு, இணுவில். (15221)(2)

துயருறும்:
முருகவேள் (மகன்),
ஸ்ரீகுமார் (மருமகன்)

# ஆண்டொன்று ஆனதம்மா...!

## செல்வி ரேணுகா பிள்ளைநாயகம்

(5ஆம் வட்டாரம், புங்குடுதீவு)



*மண் மகிழ*
*01-03-1980*

*கண் நெகிழ*
*14-03-2011*

திதி: 03.03.2012

அப்பா என்ற உன் அன்பு
அம்மா எனும் உந்தன் பாசம்
அன்றிஎன்றழைக்கும் அரவணைப்பு
எங்கேதான் போனதம்மா...?
அக்கா என்றிடுவாய்
அண்ணா எனவருவாய்
சின்னண்ணா சின்னா என
சிரித்தே அழைப்பெடுத்து
அன்பைச் சொரிந்த - உன்
செல்லக் குரல்
எங்கே தான் போனதம்மா
குட்டியா குட்டியா என்றே
குழைந்திடுவாய் - அன்பு
தம்பியா என்றே மகிழ்ந்திடுவாய்
அத்தான் அண்ணி என
அன்பால் அதட்டிடுவாய்
லஜிக்குட்டி அச்சு செல்லமென
வாஞ்சையோடு கொஞ்சி மகிழ்ந்திடுவாய்
ஆனாலும் ஆண்டொன்றாய்
தேடுகிறோம் எங்குள்ளாய்...?

'ரேணுகா இல்லம்'
63/8, [illegible], 2ஆம் ஒழுங்கை,
கொக்குவில்.

(15220) (7,10)

குடும்பத்தினர்
021 3207602,
0776163349.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓரளவு மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# அரிசி ஏற்றுமதியை அதிகரிக்கத் திட்டம்

நாட்டின் அரிசி ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

215 மெற்றிக் தொன் அரிசி அடுத்த வருடம் ஏற்றுமதி செய்யப்படுமென அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். இதற்குத் தேவையான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்காக தரிசு நிலங்களில் அதிக விளைச்சலைப் பெற கூடிய விதை நெல்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

உர மானியமும் இத்திட்டத்துக்கு மிகவும் உந்து சக்தியாக அமையுமென அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளுக்காக நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் விரைவில் பூர்த்தியாக்கப்படவுள்ளன. அத்துடன் குளம் மற்றும் வாவிகளின் புனரமைப்பிற்கு அரசு அதிக நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**தரிசு நிலங்களில் அதிக விளைச்சலைப் பெறக்கூடிய விதை நெல்கள் அறிமுகப்படுத்தப் படவுள்ளன.**

இதன்மூலம் பாசுமதி, சம்பா, மூலிகை அரிசி போன்ற வகை அரிசிகளை அதிகளவு ஏற்றுமதி செய்வதே அரசின் நோக்கமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# மட்டு. ஆசிரிய கலாசாலைக்கு ஒலிபெருக்கி சாதனங்கள்



மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு ஒலி பெருக்கி சாதனங்களை கையளிக்கும் நிகழ்வும் ஒன்றுகூடலும் கடந்த புதன்கிழமை கலாசாலை அதிபர் ஏ.எஸ். யோகராஜா தலைமையில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் ஒலி பெருக்கி சாதனங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்தநிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா, திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ந)

# சுயாதீன விசாரணையை வலியுறுத்தும் கையேடு கனடாவில் வெளியீடு

இலங்கை தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுறுத்தும் 'எமது குற்றச்சாட்டு, போர்க்குற்றம் மற்றும் இனக் கொலைகள்'' எனும் கையேடுகனடாவில் வெளிவந்துள்ளது.

இந்தக் கையேட்டை நாடுகடந்த தமிழீழ அரசின் மனித உரிமைகள், போர்க்குற்றங்கள், இனப்படுகொலை விவகாரங்களுக்கான அமைச்சகம் உருவாக்கியுள்ளது.

இதன் வெளியீட்டு நிகழ்வு கடந்த 26ஆம் திகதி ரொறொன்ரோவில் இடம்பெற்றிருந்தது. NDP கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன், சர்வதேச மன்னிப்புச் சபையின் கனேடியப் பேராளரும் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் ஜோன் ஆர்க்,சி.ஏ.ஆர்.வி. அமைப்பைச் சேர்ந்த வரும் லிபரல் கட்சிப் பிரமுகர் றோட்றோஸ் ஆகியோர் சிறப்பு பிரதிநிதிகளாகப் பங்கெடுத்திருந்தனர்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன், மனித உரிமைகள், போர்குற்றங்கள், இனப்படுகொலை விவகாரங்களுக்கான அமைச்சர் டிலக்சன் மொறிஸ் மற்றும் இந்தியா- பெங்களூர் பல்கலைக்கழக விரிவுரையாளரும் நா.த.அரசின்தின் ஜெனிவா ஐ.நா. மனித உரிமைச் சபைக்கான வள அறிஞர் குழுவின் பிரதிநிதியு மான பேராசிரியர் பொல் நியூமன் ஆகியோர் இணைய வழி காணொலிப் பரிவர்த்தனையூடாக பங்கெடுத்திருந்தனர்.

நாடு கடந்த தமிழீழ அரசின் உதவிப் பிரதமர் ராம் சிவலிங்கம், தகவல் துறை அமைச்சர் சாம் சங்கரசிவம், அவை உறுப்பினர் ஈழவேந்தன் ஆகியோருடன் படைப்பாளிகள் கழகத் தலை வரும் சமூக அரசியல் செயற்பாட்டாளருமானவேலுப்பிள்ளை தங்கவேலு ஆகியோர் உரை நிகழ்த்தியிருந்தனர்.

நாடு கடந்த தமிழீழ அரசின் அரசவை உறுப்பினர் ஜெயபாலனின் ஒருங்குபடுத்தலில், ஹென்றி கிருபைராஜா நிகழ்வரங்கை தொடக்கி வைக்க, பவன் சங்கரசிவம் நிகழ்வை நெறிப்படுத்தியிருந்தார். (வ)

# மயான விருத்திக்கு சபைகள் அமைப்பு

சாவகச்சேரி, மார்ச்.3

சாவகச்சேரி நகர எல்லைக்குட்பட்ட கண்ணாடிப்பிட்டி இந்து மயானம், கொல்லங்கிளாய் இந்து மயானம் ஆகியவற்றில் அபிவிருத்தி தொடர்பாக மயான அபிவிருத்தி சபைகள் அமைக்க நகர சபையினால் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

**அபிவிருத்தி தொடர்பில் நகரசபை நிர்வாகத்துக்கு ஆலோசனை வழங்கக்கூடிய ஆலோசனை சபையும் அமைக்கப்படவுள்ளது.**

இவற்றின் அபிவிருத்தி தொடர்பில் நகரசபை நிர்வாகத்துக்கு ஆலோசனை வழங்கக் கூடிய ஆலோசனை சபையும் அமைக்கப்படவுள்ளது.

இந்த இரு சபைகளையும் அமைப்பதற்கான கூட்டங்கள் இந்த மாத நடுப்பகுதியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நகர சபைத் தலைவர் இ. தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (உ-9)


## பூநகரி ப.நோ.கூ.சங்கம் (வரையுள்ளது)

### பதவி வெற்றிடம்

பூநகரி ப.நோ.கூ. சங்கத்தில் கீழ்க்குறிப்பிடும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1 **பதவி: பொது முகாமையாளர்**
பதவி இலக்கமும் / சம்பளக் குறியீடும்-
101-06 (165/88) இன்படி - 101-04(101/81) இன்படி
சம்பள அளவுத்திட்டம் -
66/2006 இன்படி 11950-15300 (66/2006 இன்படி)
155X10-180X10
கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

2 **தகைமைகள்:**
அ கூட்டுறவுப்பணியாளர் 07 ஆவது சம்பளத்திட்டத்தில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 08ஆவது சம்பளத்திட்டத்தில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைமட்டப் பதவி ஒன்றில் 08 வருட அனுபவம் இதில் 02 வருடம் சிரேஷ்ட முகாமை மட்டப் பதவியில் கடமை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

இ கூட்டுறவு ஊழியர் தராதரப்பத்திர (உயர்தர) சான்றிதழ் / க.பொ.த உயர்தரத்தில் 03 பாடங்கள் சித்தியுனுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டப் பதவி ஒன்றில் 10 வருட அனுபவம். இதில் 02 வருடம் சிரேஷ்ட முகாமைப் பதவியில் கடமை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

3 **வயது:** 18 - 50 வரை
4 சங்கப் பணியாளர்களுக்கு வயது எல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. சங்கப் பணியாளர்கள் தங்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
5 **பிணை தொடர்பானது:** ரொக்கம்,
ஆதனம்
6 இலங்கைப் பிரஜைகளிடம் விண்ணப்பம் கோரப்படுகின்றது.
7 **விண்ணப்ப முடிவுத் திகதி:** 15.03.2012
8 **விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**
தலைவர், பூநகரி ப.நோ.கூ.சங்கம், வாடியடி, பூநகரி.
9 விண்ணப்பத்துடன் கல்வி, வயது அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ் போட்டோப்பிரதிகளை இணைக்கவும்.

தலைவர்,
பூநகரி ப.நோ.கூ.சங்கம், பூநகரி.

(15253) (7,10)



## வீடு விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு பிடாரி அம்மன் கோயில் சூழலில் ஆறு பரப்புக் காணியுடன் விசாலமான வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0212213170

## விற்பனையாளர் தேவை

கொழும்பில் உள்ள வியாபார ஸ்தாபனம் ஒன்றுக்கு க.பொ.த.(சா/த) சித்தி அடைந்த மேலதிக தராதரங்களுமுடைய விற்பனையாளர் தேவை. இவர் 25 - 40 வயதுக்கு இடைப்பட்டவராகவும் இருத்தல் நன்று. வேலை அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானித்துக்கொள்ளலாம்.

விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல: 4228
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(15145)(-7-8)

## விற்பனைக்கு

Japanese Spitz நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: விஜயகுமார்,
கெலியவத்தை லேன்,
உடுவில் மேற்கு, சுன்னாகம்.

(15130) (2-7)

## உடனடித் தேவை

SUN FOOD PRODUCTS (PVT) LTD இன் தயாரிப்புக்களை யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்துவதற்கு பின்வருவோர் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள்.

1) விற்பனை முகவர்
2) விற்பனைப் பிரதிநிதி

தொடர்பு : 077 3565607

(15187)(6-7-8)



## பூநகரி ப.நோ.கூ.சங்கம் (வரையுள்ளது)

### பதவி வெற்றிடம்

பூநகரி ப.நோ.கூ.சங்கத்தில் கீழ்க்குறிப்பிடும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

01. **பதவி: கணக்காளர்**
*பதவி இலக்கமும்/ சம்பளக்குறியீடும் -*
*104 - 08 (165/ 88 இன் படி) - 104/ 06 (108/ 81 இன்படி)*
*சம்பள அளவுத் திட்டம் -*
*சுற்று நிருபம் 66/ 2006 இன் படி 11200 - 14100 (66/ 2006 இன்படி)*
*140 X 10 - 150 X 10*

02. **தகைமைகள்:**
*அ. கூட்டுறவுப் பணியாளர் 09 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்காளர்/ உட்துறைக் கணக்காளர் பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்காளர்/ உட்துறைக் கணக்களார் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.*

*அல்லது*

*ஆ. பட்டயக்கணக்காளர் நிறுவனத்தில் தொழில் உரிமைப் பரீட்சை சித்தி அல்லது தொழில் ரீதியான பகுதி செலவின முகாமைத்துவக் கணக்காளர் அல்லது ஸ்ரீலங்கா தொழில் நுட்பக்கல்லூரி டிப்ளோமா கணக்கியல் அல்லது இவற்றுக்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்காளர்/ உட்துறைக் கணக்காய்வாளர் பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.*

03. *வயது: 18 - 45 வரை*
04. *சங்கப் பணிப்பாளர்களுக்கு வயது எல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. சங்கப் பணியாளர்கள் தங்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.*
05. *பிணை தொடர்பானது: ரொக்கம்*
*ஆதனம்*
06. *இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.*
07. *விண்ணப்ப முடிவுத் திகதி: 15.03.2012*
08. *விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:*
**தலைவர், பூநகரி ப.நோ.கூ.சங்கம், வாடியடி, பூநகரி.**
*விண்ணப்பத்துடன் கல்வி, வயது அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ் போட்டோப் பிரதிகளை இணைக்கவும்.*

(15254) (2,7) **தலைவர், பூநகரி ப.நோ.கூ.சங்கம், பூநகரி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் தொகை மதிப்பீடு ஜெனிவாவில் அரசு பிரசாரம்

## ஏமாற்று வேலை என்கிறது தமிழர் தரப்பு

**வடக்கில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் மொழி பேசும் உத்தியோகத்தர்களைக் கொண்டே மேற்கொள்ளப்பட்ட தொகை மதிப்பீட்டு அறிக்கையை ஜெனீவாவில் அங்கத்துவ நாடுகளிடையே பகிர்ந் தளித்து அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது**

உண்மை நிலைமையை தெளிவுபடுத்துவதற்காக வடக்கின் தொகை மதிப்பீட்டு அறிக்கையை ஜெனிவாவில் அங்கத்துவ நாடுகளிடையே பகிர்ந்தளித்து அறிவூட்ட நடவடிக்கை எடுத் துள்ளதாக பதில் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது;

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பிலான உண்மை நிலைமையைத் தெளிவுபடுத்துவதற்காக வடக்கில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் மொழி பேசும் உத்தியோகத்தர்களைக் கொண்டே மேற்கொள்ளப்பட்ட தொகை மதிப்பீட்டு அறிக்கையை ஜெனிவாவில் அங்கத்துவ நாடுகளிடையே பகிர்ந் தளித்து அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அங்கத்துவ நாடுகளில் மனமாற்றம் ஏற்பட்டு அவை இலங்கைக்கு ஆதரவாக வெளிப்படையாக கருத்துக் கூறி வருகின்றன.

இலங்கையில் மனித உரிமை மீறல், ஆள்கடத்தல் போன்ற நிலைமை கிடையாது என பிரிட்டன் நற்சான்றிதழ் வழங்கியுள்ளது வரவேற்கத்தக்கது என்று குறிப்பிட்டார்.

இலங்கை தொடர்பான தவறான குற்றச்சாட்டுகள் தெளிவின்மை என்பவற்றுக்குத் தனித்தனியாகவும் கூட்டாகவும் எமது தூதுக் குழு அறிவூட்டி வருகிறது. வடக்கு, கிழக்கின் தற்போதைய நிலைமை தொடர்பில் அங்கு சுயாதீனமாக தகவல்கள் திரட்டப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

1981இன் பின் நடந்த இந்த புள்ளி விவரங்களின் மூலம் காணாமல் போயுள்ளனர், கொல்லப்பட்டனர், கடத்தப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதில் வழங்கப் பட்டுள்ளது. 40 ஆயிரம் பேர் இறுதிக் கட்ட யுத்தத்தில் இறந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டாலும் 2009 ஜனவரி முதல் மே மாதம் வரை சுகவீனம் முதுமை உட்பட பல்வேறு காரணங்களினால் 8998 பேரே இறந்துள்ளனர் - என்றார்.

இதேவேளை, அரசின் இந்தப் பிரசாரம் ''முழுப் பூசணிக் காயைச் சோற்றில் புதைக்கும் செயல்'' என்று தமிழர் தரப்பு அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இது அனைவரையும் ஏமாற்றும் இலங்கை அரசின் கபடத்தனமான செயல் என்று அவர்கள் கூறுகின்றனர்.

(ந)

# "வாழ்வை விரும்பும் இறைவன்"

''இன்று உலகம் அழிந்து கொண்டிருப்பது அணுகுண்டுகளால் அல்ல: அன்பற்ற இதயங்களால்'' என்று ஓர் அறிஞன் கூறுகின்றான். இன்று மனிதன் தன்னையும் அழித்து தான் வாழும் சமூகத்தையும் அழிக்கும் தீயசெயல்களில் ஈடுபட்டு வருகின்றான் என்பதே உண்மை. இன்றைய எமது இளையோர் இத்தகைய நிலைக்கு சமூகத்தொடர்பு சாதனங்களின் அதீத பயன்பாட்டாலும் நுகர்வு கலாசார வெறியாலும் தள்ளப்பட்டுள்ளனர். தங்களை அறியாமலே தங்கள் தலைமீது மண்போட்டு கொள்ளுமளவுக்கு கலாசார சீரழிவுகள் கொலைவெறியாகிவிட்டது. இது எமது தமிழ் சமூகத்தின் எதிர்கால காட்டு வாழ்க்கைக்கு கட்டியம் கூறுவதாக அமைந்துவிடப்போகின்றது. தவக்காலத்தில் இறைவன் நாம் தீமைகளிலிருந்து விலகி வாழவேண்டும் என்பதையே விரும்புகிறார் என்ற செய்தியே எமக்கு அளிக்கப்படுகின்றது. நாம் அழிந்து போகவேண்டும் என்று கடவுள் ஒருபோதும் விரும்புவதில்லை. பொல்லாரின், தீயவர்களின் சாவில் மகிழ்கின்ற கடவுளல்ல நாம் வணங்கும், வழிபடும் கடவுள்: மாறாக மனிதர்கள் தீயவழிகளினின்றி திருந்தி வாழவேண்டும் என்றே விரும்புகின்றார். அவருடைய விருப்பத்தை ஏற்று தீயவழிகளை விட்டு விலகி வாழ்வதே தவக்காலத்தின் நோக்கமாகும். இன்று எம்மவரில் பலர் குடிபோதைக்கு போதைவஸ்துக்கு, தீய நாட்டங்களுக்கு ஆரோக்கியமற்ற கடிவாளமில்லாத பாலியல் வெறித் தனங்களுக்கு அடிமையாகி வாழ்வதை காணுகின்றோம். எப்படியும் வாழலாம் என்ற மனப்போக்கே குறிப்பாக இளையோர் மத்தியில் காணப்படுவது கவ லைக்குரியதே! இளையோர் தங்கள் ஆக்க சக்திகளை தங்களையே அழித்துக்கொள்ளும் வழிமுறைகளுக்கு பயன்படுத்துவது ஆரோக்கியமான, நம்பிக்கை நிறைந்த எதிர்காலத் துக்கு வித்திடாது. எமது எதிர் காலத்தை பற்றிய நம்பிக்கையீனங் கள் அதிகரித்துச் செல்வதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

உண்மையான நோன்பு வெறும் புறச் செயல்களில் மட்டும் அமைத்து விடப்போவ தில்லை. நாம் கடைப்பிடிக்கும் விரதங்கள், நோன்பு, செபம், தபமுயற்சிகள் உடலை நெறிப்படுத்த தேவையானவைதான். ஆனால் உண்மையான நோன்பு எதிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்? மற்றவர்களை தீர்ப்பிடாது வாழ்வதில் பிறரின் குற்றங்களை மிகைப்படுத்தாமல் வாழ்வதில், மனதைப் புண்படுத்தும் வார்த்தைகளை சொல்லாமல் இருப்பதில், கோபமாய் இல்லாதிருப்பதில்; பகையுணர்வுகளுக்கு இடம்கொடாமலிருப்பதில் வெளிப்படவேண்டும். இதுவே உடலை ஒறுத்து வருத்திச் செய்யும் நோன்புகளைவிட மேலானது. தபக்காலத்தில் மனிதநேயமும் பகைமை இல்லாத உறவுகளைக் கட்டியெழுப்ப முயற்சி செய்யும்போதே கடவுளின் ஆசீரை அருளைப் பெறமுடியும். நேர்மையான உண்மைத் தனமான உறவுகளை கட்டி யெழுப்பும்போதே நாம் மனிதர்களாக வாழ்கின்றோம். கோபமும் வன்மமும் குரோதமும் நிறைந்த இதயங்களில் இறைவனுக்கு இடமில்லை என்பதை அறிந்து எமது வாழ்க்கைப் பாதையை மாற்றியமைப்போம். கடவுள் விரும்பும் உவப்பான வாழ்க்கையை வாழ்ந்து மனிதத்தின் சாட்சிகளாக அன்பின் குறியீடுகளாக நாம் வாழும் சமூகத்தை அன்புமயமாக்க திடசங்கற்பம் பூணுவோம்!

தவக்காலச் சிந்தனை

அருட்கலாநிதி. ஸ்ரவி அன்ரனி அ.ம.தி

# மயங்கி விழுந்த குடும்பஸ்தர் சிகிச்சை பயனின்றி மரணம்

யாழ். போதனா வைத்தியசாலை நுழைவாயிலில் குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி வீழ்ந்த நிலையில் நேற்றுமுன்தினம் மரணமானார்.

மீன்முள் உணவுக்கால்வாயின் இடையில் அகப்பட்டுக் கொண்டமையால் வைத்திய சாலை விடுதியில் இருந்து சிகிச்சை பெற்ற இவர் வீடுதிரும்பிப் பின்னர் மருந்து எடுப்பதற் காக மீண்டும் வைத்தியசாலைக்குச் சென்ற போதே மயங்கி வீழ்ந்துள்ளார். சம்பவத்தில் குப்பிளான் தெற்கு, வரிசையப்புலத்தைச் சேர்ந்த கற்பன் கிருஷ்ணகுமார் (வயது-51) என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது :-

15 நாள்களுக்கு முன்னர் பிரஸ்தாப குடும்பஸ்தர் கூழ் குடித்துள்ளார். அதில் இருந்த மீன்முள் உணவுக்கால் வாயில் இடையில் அகப்பட்டுக்கொண்டது. அதனை அறிந்திராத அந்தக் குடும்பஸ்தர் அருகிலுள்ள தனியார் வைத்திய நிலையம் ஒன்றில் சிகிச்சை பெற்றுள்ளார்.

அங்கு சிகிச்சை பயனளிக்காதமையால் கடந்த வியாழக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். அங்கு படம் பிடித்துப் பார்த்தபோது உணவுக் கால்வாய்ப் பாதையில் மீன்முள் இருக்கின்றமை தெரிய வந்தது. பின்னர் உரிய சிகிச்சைமூலம் முள் வெளியே எடுக்கப்பட்டுச் சுகமடைந்து அவர் வீடு திரும்பினார். பின்னர் மருந்து எடுப்பதற்காக அவர் யாழ். போதனா வைத்திய சாலைக்குச் சைக்கிளில் சென்றுள்ளார்.

அங்கு வைத்திய சாலை வாயிலில் மயங்கி வீழ்ந்தநிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். விழுந்ததினால் மூக்கு, வாய் பகுதிகளால் அதிக இரத்தம் வெளியேறியதுடன் சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் அவர் மரணமானார்.

(த-05)


## ஆறுமுகம் ரவீந்திரன்

வாழ்வகத்தின் தலைவரின்

பிறந்த தின வாழ்த்து






ஆறுமுகப் புதல்வனுக்கு ஆண்டொன்று கூடுது
ஆனாலும் அவர் பெருமை நீண்டெங்கும் ஓடுது
தீரும் துயர் எமக்கு இவர் திருவாய் மொழி கேட்டால்
சேரும் கூட்டமெல்லாம் வாழ்த்துகின்றோம் ஒரு பாட்டால்

எப்போதும் இருக்கும் இவருடன் ஒரு கூட்டம்
இயல்பான பேச்சுத்தான் இவரழகைக் கூட்டும்
முயல்வோர்க்கு இவர் நல்ல முன் மாதிரி
பயில்வோர்க்கு ஆசானாய் இவர் நன் மாதிரி

துயில்கொள்ளும் விழிகளை துயில்கொள்ள விடாது இவர் மொழிகள்
பயில்கொள்ளும் கிளிகளின் பராமரிப்புத்தான் இவர் வழிகள்
எழில் கொள்ளும் இவர் வாழ்வில் எடுக்கும் பணிகளெல்லாம்
எளிதாய் வெற்றிபெற இத்திருநாளில் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
வாழ்வகத்தில் கல்வி பயின்ற
பல்கலைக்கழக மாணவர்கள்.

(15200) (7,21,10)



யாழ்.இந்தியத் துணைத் தூதரகமும் திருமறைக் கலாமன்றமும்
இணைந்து நடத்தும்

## தீம்தனனா...

(பரத நடன நிகழ்வுகள்)

**நட்டுவாங்கம்**
திருமதி அகல்யா இராஜபாரதி
(முதுகலைமாணி)
திருமதி சுதர்சினி கரன்சன்
(நுண்கலைமாணி, கலாவித்தகர்)

**குரலிசை**
ஸ்ரீமதி சுகன்யா அரவிந்தன்
(விரிவுரையாளர், இசைத்துறை இராமநாதன் நுண்கலைத் துறை, யாழ்ப்பாணம்)
திருமதி சுகந்தி இரட்ணேஸ்வரன்
(இசைக்கலைமணி)

**மிருதங்கம்**
திரு.சி.துரைராசா (இசைமாணி)

**வயலின்**
கலைஞானசேகரி அம்பலவாணர் ஜெயராமன்

**காலம்:** 04.03.2012 ஞாயிற்றுக்கிழமை (நாளை)
**நேரம்:** மாலை 5.00 மணி
**இடம்:** கலைத்தூது கலையகம்
286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
யாழ்.இந்தியத் துணைத் தூதரகமும்
திருமறைக் கலாமன்றமும்.

(சி/9536) (2-7-21)



## உபநயன பிரம்மோபதேச அழைப்பு

உபநயனம்
04.03.2012 (ஞாயிற்றுக்கிழமை)
நாகேஸ்வரசர்மா தம்பதியரின் புதல்வனாகிய
சிரஞ்சீவி ஸ்ரீ விசாக சர்மாவிற்கு
தென்புலோலியூர் அருள்மிகு உபயகதிர்காம ஆலயத்தில் பூனூல் சடங்கு நிகழ இருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்ட பந்துக்களுடன் வருகை தந்து ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உபநயனதீட்ஷாகுரு
சிவஸ்ரீ பரமசாமி சண்முகநாதக் குருக்கள் (கோப்பாய்)

ஆண்டியா வைரவர் கோயிலடி,
பெருந்தெரு,
புலோலி தெற்கு, புலோலி.

தங்கள் நல்வரவை நாடும்:
பிரம்மஸ்ரீ யோ.நாகேஸ்வரசர்மா
ஸ்ரீமதி நா.சற்குணதேவி தம்பதிகள்

(சி/9534) (2-7-21)



## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**சுப்பிரமணியம் நாகம்மா**

பிறப்பு 24.06.1939
இறப்பு 23.02.2010

திதி - தசமி

பாலூட்டிச் சோறு ஊட்டித்
தாலாட்டி பார் போற்ற
எம்மை எல்லாம் வளர்த்த
எங்கள் அம்மாவே!
உங்களைப் பிரிந்து ஈராண்டு
அல்ல எத்தனை ஆண்டு
சென்றாலும் உங்கள் நினைவு மறையாது.

– குடும்பத்தினர்-

மிசன் பாடசாலை வீதி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களை விமர்சித்த சிலருக்கு, நல்ல ஆலோசனை சொல்வீர்கள். இரண்டு நாள்களாக நீடித்த மனக்குழப்பங்கள் முடிவுக்கு வரும். சிலர் உங்களை நம்பி பணப்பொறுப்புகளை ஒப்படைக்கலாம். அரசியல்வாதிகள் மகிழ்ச்சி, உற்சாகமாகச் செயற்படுவர்.

**இடபம்:** குடும்ப உறுப்பினர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். உடன் பிறந்தவர்கள் வழியில், உதவிகள் கிடைக்கலாம். சிலரிடம் வீண் வம்புபேசி, அவர்களின் கோபத்தைத் தூண்டுவீர்கள். எங்காவது வெளியிடங்களுக்குப் புறப்படும் போது, யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் செலவு நேரும்.

**மிதுனம்:** எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வீர்கள். பெண்கள் விரும்பிய ஆடை, ஆபரணங்களை வாங்கலாம். உங்களின் சொந்த விவகாரங்களில் மற்றவர்களை தலையிட அனுமதிக்க மாட்டீர்கள். கோயில் ஒன்றுக்குச் சென்று, வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். நண்பர்கள் வழியில் பண உதவிகள் கிடைக்கலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும்.

**கடகம்:** எதிர்காலம் பற்றிய கவலைகள் அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கல்களில் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். நீங்கள் சிறப்பாகச் செயற்பட்டாலும், ஏதாவது ஒரு வகையில் மற்றவர்கள் குறை சொல்வர். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்யலாம். இதுவரை தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த ஒருவரை, நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிட்டும்.

**சிங்கம்:** அதிகசெலவில் முடிக்க நினைத்த வேலை ஒன்றை, குறைந்த செலவில் முடித்துக் கொள்வீர்கள். மனைவி, குழந்தைகளுடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். கலைஞர்கள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். உங்களிடம் சண்டை போட்ட சிலரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். புதிய நண்பர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். அனுகூலமான நாள்.

**கன்னி:** தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். இதுவரை உங்களின் வீட்டுக்கு வராத விருந்தினர்கள் சிலர் வரலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். நாளை வரும் என்று நினைத்த பணவரவு ஒன்று, இன்றே வரலாம். காலை முதல் மாலை வரை, பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். இனிய நாள்.

**நாளை**

மாசி 21 ஞாயிற்றுக்கிழமை 04.03.2012
திதி: ஏகாதசி மு.இ. 07.51வரை
நட்சத்திரம்: புநர்பூசம் மு.இ. 09.34வரை
சுபநேரம்: 09.26- 10.56 வரை,
ராகு காலம்: 04.56 - 06.26 வரை

**துலாம்:** குடும்பத்தில் சிறு சச்சரவுகள் ஏற்படலாம். திடீரென வரும் வேலை ஒன்றால், வழக்கமான சில வேலைகளை ஒத்தி வைக்கலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்கலாம். எதிர்பாராத செய்திகளைக் கேட்கலாம். பிரபலமான கோயில்களுக்குச் சென்று வழிபாடு நடத்தலாம். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவு நேரும்.

**விருச்சிகம்:** எந்த வேலையையும் பொறுப்பாகச் செய்ய வேண்டிய நாள். சில விடயங்களில் வாயைக் கொடுத்து, வம்பில் மாட்டிக் கொள்ளலாம். சிலர் கேட்ட உதவியை செய்ய மறுத்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். குடும்பச்செலவுகள் கூடும். பயணங்களின்போது, வாகனங்கள் தொந்தரவு கொடுக்கலாம்.

**தனுசு:** பெரிய மனிதர்கள் சிலரின் நட்பு கிடைக்கலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, பழைய நண்பர் ஒருவரை எதிர்பாராமல் பார்க்கலாம். பெற்றோர் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள். ஒரு வகையில் ஏற்பட்ட செலவை, மற்றொரு வகையில் சரிக்கட்டுவீர்கள். மதிப்பு, கௌரவம் மேம்படும்.

**மகரம்:** குதர்க்கமாகப் பேசும் சிலரிடமும், கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் நிலவும். உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவுகள் கிடைக்கலாம். வாகன யோகத்துக்கு வாய்ப்பு உண்டு. மாமன், மைத்துனர்களால் எதிர்பாராத நன்மை அடையலாம்.

**கும்பம்:** திடீர் பணத்தட்டுப்பாட்டைச் சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்கள், உங்களின் செயற்பாடுகளை விமர்சிக்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். பெண்கள், கணவரின் அன்பைப் பெறுவர். சிறிய வேலை ஒன்றுக்கு, பெரியளவில் அலட்டிக் கொள்வீர்கள். குழப்பம், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம்.

**மீனம்:** ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆளாகலாம். மாமன், மைத்துனர்கள் கேட்ட உதவிகளைச் செய்ய முடியாமல், சாக்குப்போக்குச் சொல்லிச் சமாளிப்பீர்கள். தூக்கமின்மையால் உடல் அசதி, சோர்வு ஆள்கொள்ளும். அயலார் விவகாரங்களில் தலையிட வேண்டாம். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | | | 2 | | 5 | 6 |
| 3 | 9 | | | | 5 | 2 | 4 | |
| 5 | | 2 | 8 | 6 | | | | |
| | | | 4 | | 1 | 9 | | |
| | 8 | | 3 | | 7 | | 1 | |
| | | 1 | 6 | | 9 | | | |
| | | | | 4 | 8 | 7 | | 3 |
| | 6 | 5 | 2 | | | | 8 | 1 |
| 4 | 3 | | 7 | | | | 2 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 5 | 2 | 8 | 3 | 7 | 4 | 9 |
| 9 | 8 | 3 | 7 | 4 | 6 | 1 | 5 | 2 |
| 7 | 2 | 4 | 5 | 1 | 9 | 3 | 6 | 8 |
| 3 | 5 | 6 | 4 | 9 | 8 | 2 | 7 | 1 |
| 1 | 9 | 2 | 6 | 5 | 7 | 8 | 3 | 4 |
| 8 | 4 | 7 | 3 | 2 | 1 | 6 | 9 | 5 |
| 5 | 7 | 8 | 9 | 3 | 2 | 4 | 1 | 6 |
| 2 | 6 | 9 | 1 | 7 | 4 | 5 | 8 | 3 |
| 4 | 3 | 1 | 8 | 6 | 5 | 9 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


**ENGLISH & SINHALA PERSONAL CLASSES**

ஆங்கில, சிங்கள மொழிகள் அடிப்படையிலிருந்து கிரமமான பாடங்கள், பயிற்சிகள் ஊடாக G . C. E (O/L) வரை கற்பிக்கப்படும். ஆறாம் தரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள், பாடசாலை விலகியோர், அரச மற்றும் தனியார் நிறுவன சேவையாளர் உட்பட எந்த வயதினரும் எந்தத் திகதியிலும் இணைந்து கொள்ளலாம்.

வகுப்பு நேரங்கள் (வெள்ளி தவிர)
மு.ப. 8.45 - 10.30
பி.ப. 2.45 - 4.30

ஆய்வுக் கட்டுரைகள் சம்பந்தமான பிரத்தியேக மொழிபெயர்ப்பு வேலைகள் மற்றும் கடிதங்கள் (சிங்கள, ஆங்கில, தமிழ்) செய்து தரப்படும்.

T. SAGATHEVAN, B.A. LONDON.
Trilingual Tutor / Translator (PVT)
46, Pirappankulam Lane,
Vannarpannai, Jaffna.
T . P : 222 3520, 077 8210178
(15185)(-7-8)

**காணி/வீடு விற்பனைக்குண்டு**

கல்வியங்காடு பிளேக்கிறவுண்ட் றோட்டில் (Play ground road), கோப்பாய் தெற்கு 3 ½ பரப்பு காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0775174872.
(15103)

**கட்டடத்தொகுதி வாடகைக்கு**

யாழ். பிரதான வீதி, பஸ்தியன் சந்தியிலுள்ள 4 மாடிக்கட்டடம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வாடகைக்கு விடப்படும். கம்பனிகளுக்கும் காட்சியறைகளுக்கும் உகந்தது.

தொடர்பு: 077 134 0080
(15212)(45-6-7)


**4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



**அன்னலிங்கம் அசேத்திரன்**

பிறப்பு 11★10★1981 — இறப்பு 03★03★2008

பாதை யோரத்தில் நடைபயின்ற தடம் மறையவில்லை
வேட்டுச் சத்தமாய் இடிவிழுந்தது இதயத்தில்
தாங்கவில்லை அண்ணா - பரிதவிக்கின்றோம்
நான்கு ஆண்டுகள் நடைபயின்று போன நினைவுகள் மட்டும்
நின்ற இடத்தைவிட்டுப் போக மறுக்குதண்ணா
மறைந்திட்ட உன் உருவை மறுபடி காண்பதெப்போ?

அனுஸ் தையலகம்
பேருந்து நிலையம் அருகில்
A9, வீதி, பரந்தன் (14051) (45-7)

V.அன்னலிங்கம்
குடும்பத்தினர்
வண்ணாங்கேணி தெற்கு, பளை.

**மூன்றாம் ஆண்டு நினைவலைகள்**

*நேச மகளின் நினைவாக...*



தோற்றம் 30.12.1989 — மறைவு 03.03.2009

**சிவபாலன் சிவகௌரி**

வருடங்கள் மூன்று பறந்தன
வாடும் இதயத்துடன் – கண்ணீர்
நிதம் வழிந்தோட – உன்
எழில் முகத்தைத் தேடியும்
காண முடியாமல் தவிக்கும்
அப்பா, அம்மா, தம்பியுடன்
உன் நினைவுகளும் மூன்றாம்
ஆண்டு நினைவு நாள் இன்று.

*அப்பாவுக்கு....*



**சின்னையா முருகையா**

தோளிலும் தொட்டிலிலும்
சுமந்த எம் அப்பாவே!
எமக்கு நல்வழிகாட்டியும் எம்முடன்
வாழ முடியாமல்
மூன்றாண்டு எமைப்பிரிந்து
ஏக மனம் வந்ததோ! எமது
காணிக்கையாக இன்று
உங்கள் [illegible]

- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*தம்பி - மைத்துனிக்கு....*



**மு.ரவிச்சந்திரன்**
**ர.நிர்மலாதேவி**

தம்பி யென்று இருந்தேன்
உடன் மைத்துனியும் இல்லை
இருவரும் எமைப் பிரிந்து
ஆண்டுகள் மூன்றானது
உமது பிரிவு எமக்குப் பெரும்
இழப்பு இன்று உங்கள்
[illegible] தினம்
ஆத்ம சாந்தி கிடைக்கட்டும்.

இல.6H,
6 ஆம் யூனிற்,
இராமநாதபுரம்.

- பாச உறவுகள்.
(15215)(2-7)


**வீடுவாடகைக்கு**

யாழ்ப்பாணம்/சுண்டுக்குழி-Girls School அருகில் 5 Rooms/Hall/2 Bathrooms/Kitchen வீடு வாடகைக்கு உண்டு NGO/நிறுவனம்/Office use விரும்பத்தக்கது/Vehicle parking available.

0757131027,
No.33,2nd Lane, Columbuthurai Road,
Chundukulli, Jaffna.
(15103)

**கோழிக் குஞ்சு விநியோகம்**

தரமான No- 1 புறொயிலர் கோழிக் குஞ்சுகள் (Pussalla Farm) (09.03.2012) வெள்ளிக்கிழமையன்று விநியோகம் செய்யப்படும். பெற்றுக் கொள்ள விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளவும்.

'சிற்றி பாம் ரேடேர்ஸ்'' ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு.
T.P.No. 021 222 1158
(14248) (2-6)

**வேல் மிக்சர்**

★விசேட தயாரிப்புக்கள்★

சுபவைபவங்களுக்குத் தேவையான பூந்தி லட்டு, நெய் பூந்தி, மஸ்கட், பயற்றமுருண்டை, அரியதரம், சிற்பி முறுக்கு, வெளிநாடு கொண்டு செல்லக் கூடிய விஷேட மிக்சர், பகோடா, கச்சான் பகோடா விற்பனைக்கு உண்டு. ஓடர் செய்தும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: வேல் மிக்சர்
No. 59, K.K.S. Road, Kokuvil.
T.P: 0214914055 / 0750489784.
(15157)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பியது இத்தாலியக் கப்பல்

இயந்திர அறையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாக ஆயிரம் பயணிகளுடன் கூடிய உல்லாசக் கப்பல் தொடர்ந்து பயணிக்க முடியாமல் திணறியது.

'கோஸ்டா அல்லக்ரா' என்ற அந்தக் கப்பலின் இயந்திர அறையில் கடந்த 27ஆம் திகதி திடீரென தீப் பிடித்து எரிந்தது. தீ பரவுவதற்கு முன்னால் அதை அணைத்து விட்டார்கள்.

ஆனால் அந்த விபத்தால் கப்பலுக்குள் மின்சார வழங்கல் அடியோடு நின்று விட்டது. அதனால் கப்பலின் இயக்கம், தகவல் தொடர்பு, குடிதண்ணீர் வசதி, மின் விளக்கு வசதி போன்ற அனைத்தும் செயலிழந்து விட்டன.

கடுமையான கோடைப் பருவம் தொடங்கிவிட்டதால் கப்பலில் இருந்த பயணிகள் வெப்பம் தாங்காமல் புழுக்கத்தில் தவித்தனர். சாப்பிடுவதற்கும் சரியான உணவு கிடைக்காமல் திண்டாடினார்கள். குளிக்கவும் இதர வேலைகளைச் செய்யவும் நல்ல நீரும் இல்லாமல் திண்டாடினார்கள். அவர்களால் வெளியில் இருப்பவர்களுடன் கப்பல் மூலமாகத் தொடர்பு கொள்ளவும் முடியவில்லை. ஆனாலும் கப்பலின் நிலைமை மற்றவர்களுக்குத் தெரிந்துவிட்டது.

எனவே கப்பலைக் கரைக்குக் கொண்டுவர பெரிய மீன்பிடிக் கப்பலும் இத்தாலியக் கடற்படையும் அதிவிரைவுப் படகுகளும் அனுப்பப்பட்டன. அவர்களின் தீவிர முயற்சியினால் இரண்டு தினங்களுக்குப் பின்பு விபத்துக்குள்ளான கப்பலில் இருந்த அனைத்துப் பயணிகளும் பாதுகாப்பாகக் கரைசேர்க்கப்பட்டனர்.



கப்பலின் இயந்திர அறையில் கடந்த 27ஆம் திகதி திடீரென தீப்பிடித்து எரிந்தது.

# கைதாவாரா முஷாரப்?

இஸ்லாமாபாத்,மார்ச்3

2007 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் முன்னாள் பிரதமருமான பெனசிர் பூட்டோ படுகொலை செய்யப்பட்டார்.



இந்தக் கொலைக்கு அப்போது ஆட்சியிலிருந்த முஷாரப்பே காரணம் என்பது பின்னர் தெரிய வந்தது. பெனாஸிர் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பது தெரிந்தும் போதிய பாதுகாப்பை முஷாரப் அளிக்காததுடன், பெனாஸிர் கொலைக்குயாக காரணமாக இருந்தார் என்றும் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டது. முஷாரப்பை தேடப்படும் குற்றவாளி என்று நீதிமன்றம் அறிவித்து, கைது செய்ய பிடியாணை பிறப்பித்தது.

அதன்படி,சர்வதேச பொலிஸாரிடம் பாகிஸ்தான் அரசு முறைப்படி நேற்று விண்ணப்பித்தது. அதை சர்வதேச பொலிஸ் பிரதிநிதி பரிசீலித்து தலைமையகமான பிரான்ஸுக்கு அனுப்புவார். அங்கு விசாரணை முடிந்ததும் கைதுக்கான ரெட் கோர்னர் அழைப்பாணை வெளியிடப்பட்டு உலகின் எந்த மூலையில் இருந்தாலும் முஷாரப்பைக் கைது செய்ய முடியும்.

ஆனால், பாகிஸ்தான், பிரிட்டன் இடையே குற்றவாளிகளை பரிமாறும் ஒப்பந்தம் இல்லை. எனவே, முஷாரப் கைது செய்யப்படு வது சந்தேகம் என்று லண்டனைத் தளமாகக் கொண்ட நியூஸ் டெய்லி தெரிவித்துள்ளது.

# இது புனிதரின் கல்லறை



கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த யேசுவின் கல்லறையை ஜெருசலேம் அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது யேசு கிறிஸ்துவின் உடல் வைக்கப்பட்ட கல்லறையாக இருக்கலாம் என்பதற்கு தொல்லியல் ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன.

நவீன அடுக்குமாடி வளாகத்தின் அடியில் அமைந்திருக்கும் இந்தக் கல்லறை, கி.பி.70ஆம் ஆண்டுக்கு முந்தையதாகக் கருதப்படுகிறது. கல்லறையில் இருக்கும் சுண்ணாம்புக் கல்லால் ஆன பெட்டியில் புனித ஜெகோவா விழித்தெழு என்று கிரேக்க மொழியில் குறிப்பிடப்பட்டிருப்பதை ரிமோட் கன்ட்ரோல், கமெரா உதவியுடன் ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

# வெளியேறி வருகின்றனர் வெளிநாட்டவர்

சிரியாவில் ஏற்பட்டுவரும் பேரவலத்தைத் தொடர்ந்து அங்கிருந்து வெளிநாட்டவர்கள் வெளியேறி வருகின்றனர். ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் இராணுவம் மூலம் மக்களை அசாத் அடக்கி வருகிறார். இதுவரை நடந்த கலவரங்களில் மட்டும் 7500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என ஐ.நா அறிவித்துள்ளது.

மேலும் யுனெஸ்கோவின் அலுவலகத்தில் இதுவரை, 25 ஆயிரம் பேர் சிரிய அகதிகளாகத் தங்களை பதிவு செய்து கொண்டுள்ளனர். இதனையடுத்து அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் சிரியா மீது தடைகளை விதித்துள்ளன. இதனால் இராணுவத்தின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. எனவே தங்கள் தூதரக ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் போதிய பாதுகாப்பு இல்லாத காரணத்தால் பிரிட்டன், தமது நாட்டவர்களை நாடு திரும்பும்படி உத்தரவிட்டுள்ளது.


"ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ"

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

வதனி ஜூவலறியின் ஸ்தாபகரும் எங்களை வாழ வைத்த தெய்வமும்

அமரர்

## சண்முகம் இரத்தினம் (பத்தர் ஐயா)



மண்ணில் 19 . 01 . 1917

விண்ணில் 23 . 02 . 2010

திதி : வளர்பிறை தசமி

பண்பின் உருவமாகவும் பாசத்தின் உறைவிடமாகவும் பார் போற்றும் உத்தமனாகவும் பாரினிலே வாழ்வாங்கு வாழ்ந்து பரமனடி சேர்ந்து ஆண்டுகள் இரண்டாகி விட்டன. இரண்டு ஆண்டுகள் சென்றாலும் எமது உள்ளங்களில் நீங்கள் என்றும் இன்றும் வாழ்கின்றீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இத்தியடி விநாயகனின் பாதார விந்தங்களைப் பணிந்து நிற்கின்றோம்.

(வதனி ஜூவலறி கொடிகாமம் / சாவகச்சேரி)
பொற் பதியிலான் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவில்
வாழும்: குடும்பத்தினர்.

(15252) (7,21,10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீன்பீல்ட் , கில்லறி அணிகள் அரையிறுதிக்கு

மன்னார், மார்ச். 3

பிறவுண்ஸ் கம்பனியின் அனுசரணையுடன் மன்னார் சின்னக்கடை கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் மன்னார் சின்னக்கடை கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகம் மன்னார் சாவற்காடு கில்லறி விளையாட்டுக்கழகம் ஆகியவை வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளன .

முதலில் இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் மன்னார் சின்னக்கடை கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென் சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் மன்னார் சின்னக் கடை கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது . மற்றைய காலிறுதியாட்டத்தில் மன்னார் சாவற்காடு கில்லறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்லூசியா விளையாட்டுக்கழகஅணி மோதிக்கொண்டது . இதில் மன்னார் சாவற்காடு, கில்லறி விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது .

( த-23)




இலங்கை கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய 49ஆவது தேசியமட்ட சிரேஷ்ட பிரிவு ஆண்களுக்கான 'பி'பிரிவுக்குக் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய யாழ்.மாவட்ட அணித்தலைவரிடம் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே வெற்றிக்கிண்ணம் வழங்குகிறார். (த-23)

## கைதடி சரஸ்வதி நடத்தும் போட்டிகள்

கைதடி.மார்ச்.3

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சரஸ்வதி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியில் செற்றப் முறையிலான கரப்பந்தாட்டம், பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் மற்றும் தென்மராட்சி ரீதியில் மென்பந்து கிரிக்கெட் ஆகிய போட்டிகளை விரைவில் நடத்த இருக்கின்றது.

இப்போட்டியில் பங்கு கொள்ள விரும்புவோர் தமது பதிவுகளை எதிர் வரும் 05 ஆம் திகதிக்கு முன்னர் நிலைய செயலாளரிடம் அல்லது கைதடிச் சந்தியிலுள்ள சிகையலங்கரிப்பு நிலையத்தில் மேற்கொள்ளலாம் என நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது.

(த-288)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் .மார்ச்.3

யாழ் .மத்திய கல்லூரியில் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதிகளில் உயர்தரக் கல்வி பயின்ற மாணவர்களின் அனுசரணையுடன் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் , யாழ். கூடைப்பந்தாட்டச் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் மின் ஒளியிலான கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்று வருகின்றது. இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு கொள்ளும் அணிகள் விவரங்கள் வருமாறு:

கோப்பாய் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்.பல்கலைக்கழகம் ( மாலை 6மணி ).

பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் வவுனியா விளையாட்டுக் கழகம் ( மாலை 7 மணி )

(த-23)

## தாச்சி இன்று ஆரம்பம்

கைதடி. மார்ச்.3

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கைதடி தென்கிழக்கு சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி பிரதேசத்துக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தாச்சிப் போட்டி இன்று சனிக்கிழமை மாலை 7 மணிக்கு கழக மைதானத்தில் மின்னொளியில் ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய போட்டியில் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி குமரநகர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது . (த-288)

## கே.சி.சி.சி. முதலிடம்

யாழ்ப்பாணம்.மார்ச்.3

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கான பதிவுசெய்யப் பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 2012 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளில் ஆண்களுக்கிடையிலான எல்லே போட்டியில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தையும், அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (த-7)

## வலைப்பந்தாட்டப் போட்டி

வலி வடக்கு, மார்ச் 3

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி கோட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும் இராமநாதன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் சமநிலையில் காணப் படுவதை நிரூபிக்கும் வகையில் இரு அணிகளும் மோதிக்கொண்டதுடன் ஒரு அணி மற்றைய அணிக்கு சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக் கொண்டார்கள்.


முதல் பாதி ஆட்டத்தில் 10:07 புள்ளிகள் என்ற நிலையில் இராமநாதன் கல்லூரி முன்னிலையில் நின்ற வேளையில் ஆட்டம் முடிவடைந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் வெற்றி பெற வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கி மோதிக் கொண்ட போதிலும் இராமநாதன் கல்லூரி சீரான முறையில் விளையாடி வெற்றியைப் பெற்றுக்கொண்டது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் இராமநாதன் கல்லூரி 10:09 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது. ஆட்டநிறைவில் இராமநாதன் கல்லூரி 20:16 புள்ளிகள் என்ற அடிப் படையில் உடுவில் மகளிர்கல்லூரியை வெற்றி பெற்றுக்கோட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப் பட்டது. (த-26)

## விற்பனையாளர் தேவை

மருந்தகத்துக்கு விற்பனையாளர் தேவை. கணினி அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

மயூரா மருந்தகம்
பலாலிவீதி, திருநெல்வேலி
T.P:- 0212222946.

## மரண அறிவித்தல்



### தம்பிப்பிள்ளை தியாகராசா

பருத்தித்துறை, சுப்பர்மடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை தியாகராசா நேற்று (02.03.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேல், விமலாதேவி மற்றும் பொன்னம்பலம், நிர்மலாதேவி, கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேவராசா, தேவராணி, மங்களலட்சுமி, தியாகராணி, தவராசா, ஞானச்சந்திரன் ஆகியோரின் தந்தையும், அன்ரன்குலராசா, உதயகுமார், கிருஸ்ணராசா, ரத்தினகுமாரி, சுபாசினி, பிரசாந்தினி ஆகியோரின் மாமனும், அனோஜினி, விணோஜினி, பிரபாலினி, சஞ்சாயினி, பரந்தாமன், விஜிதா, நித்தியா, பரசுராமன், பிரகாஷ், பானுப்பிரியா, பிரிதா, தனுஷன், லக்ஷ்சிகா, நிதர்சினி, பதுமன், அபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2012) சனிக்கிழமை மாலை 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுப்பர்மடம்,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

(34)

## மரண அறிவித்தல்



### முத்து பொன்னுத்துரை

(முன்னாள் இ.போ.ச. நடத்துநர்)

யாழ்ப்பாணம், ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்து பொன்னுத்துரை நேற்று (02.03.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 09, அராலி வீதி,
ஒட்டுமடம்.

தகவல்:
குடுத்தினர்.

## 15 ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26 * 05 * 1934



மறைவு
16 * 02 * 1997

### அமரர் திருமதி சித்திரா முத்துராஜா

(யாழ் போதனா வைத்தியசாலையின் ஓய்வுபெற்ற அலுவலர்)

மாசி ஏகாதசியில்
விண்ணிற்காய் விரைந்து- இன்று
ஆண்டு பதினைந்து ஆகியும்
வாழ்கின்றீர் எம்மனதில்

நாவற்குழி,
கைதடி

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(007)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வென்றது இலங்கை வெளியேறியது இந்தியா

பரபரப்பாக இறுதிப் பந்து பரிமாற்றம் வரையில் நகர்ந்த ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி பெற்று ஆஸ்திரேலிய அணியை அதன் சொந்த மண்ணிலேயே தோற்கடித்தது. இறுதி ஆட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைக்குமா என்று எதிர்பார்த்திருந்த டோனி தலைமையிலான இந்திய அணி வெறுங் கையுடன் நாடு திரும்ப வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஆஸ்திரேலியாவில் சீ.பி கிண்ண முக்கோணக் கிரிக்கெட் தொடர் இடம்பெற்று வருகின்றது. முதலில் இடம்பெற்ற 11 லீக் ஆட்டங்களின் அடிப்படையில் ஆஸ்திரேலிய அணி இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றிருந்தது. இந்திய, இலங்கை அணிகள் சமபுள்ளிகள் பெற்றிருந்தன. நேற்றைய ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியை தழுவும்பட்சத்தில் இந்திய அணிக்கு இறுதி ஆட்டத்தில் பங்கேற்கும் வாய்ப்புக் காத்திருந்தது. இலங்கைக்கு வாழ்வா, சாவா என்ற நிலையில் மெல்பேர்னில் நேற்றைய ஆட்டம் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

மஹேல, டில்ஷான் ஜோடி இலங்கையின் ஆட்டத்தை தொடக்கி வைக்க களமிறங்கியது. ஆரம்பத்திலேயே ஆஸி. அசத்தலாக தனது ஆட்டத்தை ஆரம்பித்தது. ஒற்றை ஓட்டங்களுடன் இருவரையும் பவிலியனுக்கு அனுப்பியது ஆஸி.

**3 இல் 3**

மூன்றாவது இலக்குக்காக சங்ககார மற்றும் சந்திமால் இணைந்து துடுப்பெடுத்தாடினர். மரணப் பொறியினுள் சிக்கியிருந்த இலங்கையை மெல்ல மீட்டனர். 47 பந்துகளில் தனது 7 ஆவது அரைச் சதத்தை கடந்தார் சந்திமால். மறுமுனையில் போராடிக் கொண்டிருந்த சங்ககார 79 பந்துகளில் தனது 68 ஆவது அரைச்சதத்தை கடந்தார். இவர்களது மிக நீண்ட நிலையான இணைப்பாட்டம் ஆஸிக்கு நெருக்கடியைக் கொடுத்தது. இவர்கள் இருவரும் 123 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தனர். இது ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக இலங்கை அணியினால் மூன்றாவது இலக்குக்கு பகிரப்பட்ட மூன்றாவது மிகச் சிறந்த இணைப்பாட்டமாகும்.

மீண்டும் அணிக்கு திரும்பியிருந்த பற்றின்ஸன் அசத்த சங்கா வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த மத்திய வரிசை வீரர் திரிமன்னே, சங்கா விட்டுச் சென்ற பணியை தொடர்ந்தார். சந்திமால், திரிமன்னேயுடன் இணைந்து இணைப்பை வலுப்படுத்திக் கொண்டிருந்த வேளையில் பற்றின்ஸனின் வேகத்தில் சிக்குண்டார். இதேவேளை டினேஷ் சந்திமால் 2012 ஆம் ஆண்டில் இதுவரை அதிக ஒருநாள் ஓட்டங்களைக் குவித்த வீரராகக் காணப்படுகிறார்.

சந்திமாலின் ஆட்டமிழப்பின் பின்னர் இலங்கையின் சரிவு தொடங்கியது. சகலதுறை வீரர்கள் மூவரும் நேற்றைய தினம் சொதப்பினர். இருந்தும் திரிமன்னே 57 பந்துகளில் தனது மூன்றாவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

**9 வருடங்களின் பின்னர்**

44 ஆவது பந்து பரிமாற்றத்தை வீசிய கிறிஸ்டியன், இலங்கையின் திஸ்ஸர பெரரோ, சேனநாயக்க, குலசேகர ஆகியோரின் இலக்குகளை அடுத்தடுத்து சாய்த்து 'ஹற்றிக்' சாதனை படைத்தார். 2003 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் கென்யாவுடனான ஆட்டத்தில் லீ 'ஹற்றிக்' இலக்குகளை கைப்பற்றியிருந்தார். அதன்பின் சுமார் 9 வருடங்கள் கடந்த நிலையில் மற்றொரு ஆஸ்திரேலிய வீரர் 'ஹற்றிக்' சாதனை படைத்துள்ளார். ஒருநாள் சர்வதேச போட்டியில் 'ஹற்றிக்' சாதனை படைத்த நான்காவது ஆஸ்திரேலிய வீரர் டானியல் கிறிஸ்டியன். இதற்குமுன் புரூஸ் ரீட், அந்தனி ஸ்டுவர்ட், பிரெட் லீ ஆகியோர் இந்தச் சாதனையை படைத்திருந்தனர்.

இது இலங்கைக்கெதிராக ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் பெறப்பட்ட இரண்டாவது 'ஹற்றிக்' ஆகும். இதற்கு முன் 1991 ஆம் ஆண்டில் கபில் தேவ் 'ஹற்றிக்' ஒன்றை இலங்கைக்கெதிராகக் கைப்பற்றினார். அத்தோடு 'ஹற்றிக்' சாதனை படைத்த பின்னரும் தோல்வியடைந்த அணியில் ஒரு வீரர் காணப்பட்ட நான்காவது சம்பவமாக ஒரு நாள் போட்டியில் நேற்றைய ஆட்டம் பதிவானது. இதற்கு முன்னர் ஷகாத் ஹொசைன், ஷேன் பொன்ட் மற்றும் லசித் மலிங்க ஆகியோர் தோல்வியுற்ற அணி சார்பாக 'ஹற்றிக்' சாதனை படைத்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

**பீனிக்ஸாக மீண்ட மலிங்க**

இறுதியில் இலங்கை அணி 50 பந்து பரிமாற்றங்களில் 238 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

வெற்றிபெறக் கூடிய இலக்கை விரட்டத் தொடங்கிய ஆஸிக்கு. இலங்கை அணியும் ஆரம்பத்திலேயே அதிர்ச்சி கொடுத்தது. கடந்த ஆட்டத்தில் அடி வாங்கிய மலிங்க நேற்றைய ஆட்டத்தில் பீனிக்ஸ் பறவை போன்று மீண்டு வந்து ஆஸ்திரேலியாவுக்கு நெருக்கடி கொடுத்தார். முதல் மூன்று இலக்குகளையும் வேகமாக ஆஸி. இழந்தாலும் அணித்தலைவர் வொட்ஸன், மைக் ஹஸி இருவரும் இணைந்து ஆஸிக்கு உரமூட்டினர். இலங்கையின் பந்து வீச்சு நெடுநேரம் இவர்களது இணைப்பை பிரிப்பதற்கு முயன்ற போதும் அது கைகூடவில்லை.

**13 வீரர்களும் களத்தில்**

இலங்கை அணியின் சகலதுறை வீரர்களான பெரேரா, மத்தியூஸ் உபாதைக்கு ஆளாகியமையால் தரங்க, தம்மிக்க பிரசாத் ஆகியோர் மாற்று வீரர்களாக களமிறங்கினர். பெரேராவின் பந்து வீச்சை தொடர்ந்த திரிமன்னே தனது முதலாவது இலக்காக மைக் ஹஸியை வீழ்த்தினார். தொடர்ந்து 61 பந்துகளில் தனது 26 ஆவது அரைச் சதத்தை விளாசிய வொட்ஸன் மலிங்கவின் வேகத்தில் வெளியேறினார். தொடர்ச்சியாக இலங்கை அணி அசத்த ஆஸி.யின் ஆட்டம் நிலைகுலைந்தது. வெற்றிக்கான வாய்ப்பு இலங்கையின் பக்கம் திரும்பியிருந்தாலும் அதை தட்டிப் பறிக்கும் வகையில் டேவிட் ஹஸி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தார். 58 பந்துகளில் தனது 11 ஆவது அரைச்சதத்தை எட்டினார் அவர்.

கடைசி 3 பந்துப் பரிமாற்றங்களில் ஆஸ்திரேலிய அணி 2 இலக்குகள் கைவசமிருந்த நிலையில் 23 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ரங்கன ஹேரத் வீசிய 48 ஆவது பந்து பரிமாற்றத்தின் முதல் பந்தில் டேவிட் ஹஸி ஆறு ஓட்டம் ஒன்றை அடித்தபோது ஆட்டதின் போக்கு மீண்டும் ஆஸ்திரேலியாவுக்கு சாதமாகும் சாத்தியம் தோன்றியது.

கடைசி 12 பந்துகளில் அந்த அணிக்கு 14 ஓட்டங்கள் மாத்திரமே தேவைப்பட்டன. மலிங்க வீசிய 49 ஆவது பந்து பரிமாற்றத்தின் 2 ஆவது பந்தில் டில்ஷானிடம் பிடி கொடுத்து டொஹேர்த்தி ஆட்டமிழந்தார்.

இறுதி பந்து பரிமாற்றத்தில் ஆஸ்திரேலியாவுக்கு 10 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் குலசேகர பந்துவீச வந்தார். அந்தப் பந்து பரிமாற்றத்தின் முதல் பந்துவீச்சிலேயே டேவிட் ஹஸி 'லோங் ஓப்' திசையில் அடித்து டில்ஷானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்ததால் இலங்கை அணி 9 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. அத்தோடு நேற்றைய தினம் இந்த வருடத்தில் மூன்றாவது ஆட்டநாயகன் விருதை சந்திமால் வென்றார்.

- நேற்றைய ஆட்டத்தில் லசித் மலிங்க, டானியல் கிறிஸ்ரியன் மற்றும் ஜேம்ஸ் பற்றின்சன் ஆகியோர் தலா 4 இலக்குகளைக் கைப்பற்றினர். ஒரு நாள் சர்வதேச ஆட்டமொன்றில் 3 பேர் நான்கு இலக்குகள் அல்லது அதற்கு மேலான பெறுதியைப் பெற்ற 10 ஆவது தடவை இதுவாகும்.
- 2001, 2002 பருவகாலத்திற்குப் பின்னர் ஆஸ்திரேலிய அணி முத்தரப்பு ஒருநாள் தொடரொன்றின் குழு நிலைப் போட்டியில் நான்கு தோல்விகளைச் சந்தித்த முதற்தொடராக இந்தத் தொடர் அமைந்தது. அந்த நான்கு தோல்விகளில் மூன்று தோல்விகள் இலங்கைக்கெதிரானவை.
- இலங்கைக்கு எதிராக மூன்றாவது தடவையாக மிகக்குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆஸ்திரேலிய அணி ஆட்டமிழந்துள்ளது. இதுவரையில் 222 ஓட்டங்களுக்குள் 2008 ஆம் ஆண்டு [illegible] குறைந்த ஒட்ட எண்ணிக்கையாக இருந்தது.

**மூட்டை முடிச்சுடன் வெளியேறிய இந்திய அணி**

இந்திய ரசிகர்கள் ஒரு போதும் ஆஸ்திரேலிய அணி வெல்ல வேண்டும் என்று நினைப்பதில்லை. ஏனெனில் ஆஸ்திரேலிய அணி எப்போதும் இந்தியர்களின் பரம எதிரிகள். இருப்பினும் நேற்றைய ஆட்டத்தில் ஆஸி. வெற்றி பெற வேண்டும் என்று பல கோடி இந்திய ரசிகர்கள் பிரார்த்தனை செய்தும் பலனற்று போனது. 3 மாத காலம் ஆஸ்திரேலியாவில் விளையாடிய இந்திய அணி டெஸ்ட் தொடர், 'ரி-20' தொடர் என்பவற்றை முழுமையாகப் பறிகொடுத்து இறுதியில் ஒரு நாள் தொடரிலாவது ஏதாவது சாதிக்க முடியுமா என்று இருந்தபோதும் இறுதியாக வெறுங்கையுடன் இந்தியா திரும்ப வேண்டி ஏற்பட்டுள்ளது. (5)

## பழிவாங்கவில்லை

இந்திய அணியை ஒரு போதும் பழிவாங்க எண்ணவில்லை. உலகக் கிண்ண தோல்விக்காக பழிவாங்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. இவ்வாறு பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் அப்ரிடி தெரிவித்தார்.

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் குறித்து கேட்ட போது இந்தியாவை பழி வாங்க நினைக்கவில்லை என்று அப்ரிடி தெரிவித்தார்.

ஆசிய கிண்ண கிரிக்கெட் ஆட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை பங்களாதேஷில் நடைபெற உள்ளது. இதில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன.

18 ஆம் திகதி இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. உலகக் கிண்ண ஆட்டத்தில் அரையிறுதியில் இந்தியா பாகிஸ்தானை வெளியேற்றியது. எனவே இதற்கு பழிவாங்கும் ஆட்டமாக இது அமையுமா என்று பாகிஸ்தான் வீரர் அப்ரிடியிடம் கேட்டபோது இந்த ஆட்டத்தை இந்தியாவைப் பழிவாங்கும் ஆட்டமாக நான் கருதவில்லை.

ஆனால் எந்த ஆட்டமாக இருந்தாலும் எதிர் அணியை வீழ்த்துவதற்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்போம். அதிரடி வியூகங்களை வகுத்து ஆடுவோம். ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இன்னும் துடிப்புடன் ஆட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். எங்கள் வீரர்கள் எதிர் அணி பந்துவீச்சாளர்களுக்கு கடும் நெருக்கடி கொடுப்பார்கள்.

எங்கள் பந்து வீச்சில் சற்றுப் பலவீனம் இருக்கிறது. ஆனாலும் எங்கள் துடுப்பாட்டக்காரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்கள். அதேபோல் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரிலும் எங்கள் வெற்றி தொடரும் என்று தெரிவித்தார். (5)

## இலங்கை எதிர் ஆஸ்திரேலியா

மெல்பேர்ன் மைதானம்

இலங்கை 238/10 (50) ஆஸ்திரேலியா 229/10 (49.1)

இலங்கை 9 ஓட்டங்களால் வெற்றி பெற்றது

**இலங்கை** — ஆட்டநாயகன்: சந்திமால்

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| மஹேல | run out (டேவிட் ஹஸி) | 5 | 6 | 1 | 0 |
| டில்ஷான் | c வேட் b பற்றின்ஸன் | 9 | 16 | 2 | 0 |
| சங்ககார | c போறஸ்ர் b பற்றின்ஸன் | 64 | 93 | 3 | 0 |
| சந்திமால் | c மக்கே b பற்றின்ஸன் | 75 | 84 | 3 | 2 |
| திரிமனே | b பற்றின்ஸன் | 51 | 59 | 2 | 0 |
| மத்தியூஸ் | c டொஹேட்டி b கிறிஸ்ரெய்ன் | 5 | 8 | 0 | 0 |
| பெரேரா | c மைக்ஹஸி b கிறிஸ்ரெய்ன் | 5 | 7 | 0 | 0 |
| சேனநாயக்கா | lbw b கிறிஸ்ரெய்ன் | 0 | 1 | 0 | 0 |
| குலசேகரா | lbw b கிறிஸ்ரெய்ன் | 0 | 1 | 0 | 0 |
| ஹேரத் | ஆட்டமிழக்காமல் | 14 | 21 | 0 | 1 |
| மலிங்க | b கிறிஸ்ரெய்ன் | 2 | 4 | 0 | 0 |
| உதிரிகள் | | 8 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 238 | | | |

இலக்கு இழப்பு: 1-10, 2-17, 3-140, 4-186, 5-195, 6-206, 7-206, 8-206, 9-235, 10-238

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| பற்றின்ஸன் | 10 | 0 | 51 | 4 |
| ஹில்பென்ஹாஸ் | 7 | 0 | 29 | 0 |
| மக்கே | 8 | 0 | 39 | 0 |
| டேவிட் ஹஸி | 1 | 0 | 6 | 0 |
| கிறிஸ்ரெய்ன் | 9 | 0 | 31 | 5 |
| வொட்ஸன் | 7 | 0 | 28 | 0 |
| டொஹேட்டி | 8 | 0 | 48 | 0 |

**ஆஸ்திரேலியா**

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| வேட் | lbw b குலசேகரா | 9 | 12 | 1 | 0 |
| வோர்னர் | c பெரேரா b மலிங்க | 6 | 6 | 1 | 0 |
| வொட்ஸன் | b மலிங்க | 65 | 83 | 5 | 0 |
| போறஸ்ர் | c சங்ககார b மலிங்க | 2 | 9 | 0 | 0 |
| மைக் ஹஸி | c சங்ககார b திரிமன்னே | 29 | 56 | 3 | 0 |
| டேவிட் ஹஸி | c டில்ஷான் b குலசேரா | 74 | 74 | 4 | 1 |
| கிறிஸ்ரெய்ன் | c & b சேனநாயக்கா | 3 | 8 | 0 | 0 |
| பற்றின்ஸன் | c டில்ஷான் b ஹேரத் | 12 | 23 | 1 | 0 |
| மக்கே | run out (டில்ஷான்) | 6 | 8 | 0 | 0 |
| டொஹேட்டி | c டில்ஷான் b மலிங்க | 7 | 15 | 0 | 0 |
| ஹில்பென்ஹாஸ் | ஆட்டமிழக்காமல் | 0 | 2 | 0 | 0 |
| உதிரிகள் | | 16 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 229 | | | |

இலக்கு இழப்பு: 1-16, 2-18, 3-26, 4-113, 5-140, 6-151, 7-178, 8-187, 9-226, 10-229

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மலிங்க | 10 | 0 | 49 | 4 |
| குலசேகரா | 9.1 | 1 | 38 | 2 |
| மத்தியூஸ் | 4 | 0 | 8 | 0 |
| சேனநாயக்கா | 10 | 0 | 50 | 1 |
| பெரேரா | 0.5 | 0 | 8 | 0 |
| திரிமன்னே | 4.1 | 0 | 25 | 1 |
| ஹேரத் | 10 | 0 | 43 | 1 |
| டில்ஷான் | 1 | 0 | 8 | 0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 ஆவது

# இந்துக்களின் சமர்



“ மதியம் வரை பந்துகளைத் தடவிக் கொண்டிருந்த கொக்குவில் இந்துக் கல்லூரி வீரர்கள், உணவு இடைவேளையின் பின்னர் அதிரடியாக விளாச ஆரம்பித்தனர். ”



# இரண்டே ஓட்டங்களால் தவறியது சதம்

# வேகமாக ஓட்டக் குவிப்பில் யாழ்.இந்து

யாழ்ப்பாணம், மார்ச் 3

'இந்துக்களின் பெரும் போர்' துடுப்பாட்டப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் வீரர் பங்குஜன் இரண்டே ஓட்டங்களால் தனது சதத்தைத் தவறவிட்டதுடன் 'உதயன்' பத்திரிகையின் 25,000 ரூபா பரிசைப் பெறும் வாய்ப்பையும் தவறவிட்டார். எனினும் கொக்குவில் இந்துக் கல்லூரி தனது முதல் இன்னிங்ஸில் 275 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலளித்து ஆடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, தேநீர் இடைவேளைக்குப் பின்னரே துடுப்பாட்டத்தை ஆரம்பித்தாலும் வேகமாக ஓட்டங்களைக் குவித்தது. ஆட்டம் முடிவுக்கு வந்தபோது 28 ஓவர்கள் நிறைவில் 03 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களை அது பெற்றிருந்தது.

ஜஸ்மினன் 51 ஓட்டங்களுடனும், சிந்துஜன் 09 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

நேற்றுக் காலை நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி வீரர்கள் மிக மெதுவாகவே ஓட்டங்களைச் சேகரித்தனர். 40 ஓவர்கள் வரை அவர்கள் ஓவருக்கு இரண்டு என்ற வேகத்தில் ஓட்டங்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தனர். எனினும் மூன்றாவது நபராகக் களமிறங்கிய அணித்தலைவர் பங்குஜன் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

தொடக்க ஆட்டக்காரர்கள் தலா 05 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கத் தொடர்ந்து களமிறங்கிய பங்குஜன் நிதானமாக ஆட, 5ஆவது ஆட்டக்காரராகக் களம் இறங்கிய ராகுலன் அதிரடியை வெளிப்படுத்தினார். 2 சிக்ஸர்கள் 2 பவுண்டரிகள் அடங்கலாக 37 பந்துகளில் 37 ஓட்டங்கள் குவித்தார். இதனால் அணியின் ஓட்டவேகம் திடீரென அதிகரித்தது. 7ஆவது ஆட்டக்காரராகக் களம் இறங்கிய ஜனுதாஸ் பங்குஜனுடன் சோடி சேர்ந்த பின்னர் ஓட்ட வேகம் சூடு பிடித்தது.

சரவெடியாக வெடித்த ஜனுதாஸ் 5 சிக்ஸர்கள் 4 பவுண்டரிகள் அடங்கலாக 38 பந்துகளில் 61 ஓட்டங்கள் விளாசினார்.

126 பந்துகளில் பதின்மூன்று நான்குகளுடன் 98 ஓட்டங்களைப் பெற்ற பங்குஜன் இரண்டே ஓட்டங்களால் சதத்தைத் தவறவிட்டார். நிலாஜனனின் பந்தைத் தடுத்தாட முயல்கையில் அவரிடமே பிடிகொடுத்து வெளியேறினார்.


இந்துக் கல்லூரியின் வாமணன் மற்றும் ருஸ்மன் ஆளுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிர்ச்சியாக விரைவிலேயே முதல் விக்கெட்டை இழந்தது. மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான கல்கோபனும் கையில் பந்து தாக்கி காயமடைந்து வெளியேறினார். அடுத்து வந்த ருக்ஸ்மனும் ஓட்டம் ஏதும் எடுக்காமலேயே ''வாத்து நடையில்'' வெளியேற, மதுசனும் ஜஸ்மினனும் தொடக்க ஆட்டக்காரர்கள் போலானார்கள்.

இந்த ஜோடி கொக்குவில் பந்துவீச்சாளர்களை அனாயாசமாக எதிர்கொண்டு அடித்தாடியது. பந்துகள் அவ்வப்போது சீராக எல்லைக்குச் சீறின.

. மதுசன் 40 பந்துகளில் 7 பவுண்டரி ஒரு சிக்ஸர் அடங்கலாக 64 ஓட்டங்களை விளாசிய நிலையில் ஆட்டமிழந்தார்.

ஜாஸ்மினன் 54 பந்துகளில் அரைச் சதத்தைக் கடந்து நிதானமாகக் களத்தில் உள்ளார். (த-23-86)



## கொக்குவில் இந்து எதிர் யாழ்.இந்து

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்

கொக்குவில் இந்து 275 யாழ்.இந்து 142/3 ...

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று தொடங்கும்

### கொக்குவில் இந்துக் கல்லூரி

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கீர்த்திகன் | c சஞ்சீவன் b வாமணன் | 5 | 18 | 1 | 0 |
| சத்தியன் | c சஜீவன் b வாமணன் | 5 | 69 | 1 | 0 |
| பங்குஜன் | c / b நிலாஜனன் | 98 | 126 | 11 | 0 |
| திவாகர் | (b) b கிரிசோபன் | 09 | 36 | 1 | 0 |
| ராகுலன் | lbw b நிலாஜனன் | 37 | 37 | 2 | 2 |
| ஆதித்தன் | c -ஜஸ்மினன் b வாமணன் | 5 | 10 | 1 | 0 |
| ஜனுதாஸ் | c கல்கோவன் b ஜஸ்மினன் | 61 | 38 | 5 | 4 |
| சிலோஜன் | c -கிரிசோபன் b றுக்ஸ்மன் | 06 | 08 | 1 | 0 |
| நிசாந்தன் | (b) b றுக்ஸ்மன் | 02 | 07 | 0 | 0 |
| பிரதீபன் | (b) b றுக்ஸ்மன் | 06 | 06 | 1 | 0 |
| பபிதரன் | (ஆட்டமிழக்காமல்) | 03 | 07 | 0 | 0 |
| உதிரிகள் | | 38 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 275 | | | |

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| சிந்துஜன் | 7 | 1 | 23 | 0 |
| வாமணன் | 16 | 4 | 49 | 3 |
| ஜஸ்மினன் | 8.4 | 1 | 18 | 1 |
| மதுசன் | 13 | 1 | 46 | 0 |
| கிரிசோபன் | 6 | 2 | 13 | 1 |
| றுக்ஸ்மன் | 12 | 1 | 65 | 3 |
| நிலோஜன் | 1 | 1 | 0 | 0 |
| நிலாஜனன் | 5 | 0 | 13 | 2 |

### யாழ்.இந்துக் கல்லூரி

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சஜீகன் | (b) b ராகுலன் | 0 | 3 | 0 | 0 |
| கல்கோபன் | காயம் காரணமாக வெளியேறினார் | 6 | 19 | 1 | 0 |
| மதுசன் | (b) பங்குஜன் | 64 | 46 | 7 | 1 |
| றுக்ஸ்மன் | C பங்குஜன் b ராகுலன் | 0 | 1 | 0 | 0 |
| ஜஸ்மினன் | (ஆட்டமிழக்காமல்) | 51 | 54 | 7 | 1 |
| சிந்துஜன் | (ஆட்டமிழக்காமல்) | 9 | 35 | 0 | 0 |
| உதிரிகள் | | 12 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 142 | | | |

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| சிலோஜன் | 5 | 0 | 30 | 0 |
| ராகுலன் | 8 | 1 | 26 | 2 |
| பபிதரன் | 5 | 0 | 36 | 0 |
| பிரதீபன் | 3 | 0 | 11 | 0 |
| பங்குஜன் | 4 | 0 | 23 | 1 |
| ஜனுதாஸ் | 3 | 0 | 8 | 0 |



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களுக்காகத் தமிழகத்தில் 6ஆம் திகதி உண்ணாவிரதப் பேராட்டம்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அறிவிப்பு

"இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நாளை மறுதினம் 5 ஆம் திகதி ஆர்ப்பாட்டம்"

திருச்சி, மார்ச். 03

ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ள நிலையில், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் எதிர்வரும் 6 ஆம் திகதி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏற்பாட்டில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்வரும் 6 ஆம் திகதி தமிழகத்தில் மாவட்டத் தலைநகரங்களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அக்கட்சின் மாநிலச் செயலர் தா. பாண்டியன் தெரிவித்தார்.

திருச்சியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற கட்சியின் மாநிலக் குழுக் கூட்டத்துக் குப் பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -


தமிழர்கள் படுகொலைக்குக் காரணமான இலங்கை அரசின் குற்றத்தை மூடி மறைக்க மத்திய அரசு தொடர்ந்து முயற்சிக்கிறது. இலங்கை அரசுக்கு இராணுவ உதவி மற்றும் பண உதவி வழங்குவதை மத்திய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் - என்றும் பாண்டியன் தெரிவித்தார்.

### 5 இல் மார்க்சிஸ்ட் ஆர்ப்பாட்டம்

இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நாளைமறுதினம் 5 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் ஜி.ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் எதிரே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

# இலங்கையில் அமெரிக்க சிறப்புப் படையணிகள்!

## அந்நாட்டு அதிகாரி தெரிவிப்பு



தீவிரவாத முறியடிப்பு ஒத்துழைப்புத் திட்டத்தின் அடிப்படையிலேயே சிறப்புப் படையணிகள் நிலை கொண்டுள்ளன

வொஷிங்டன், மார்ச் 3

இலங்கையில் அமெரிக்க சிறப்புப் படை அணிகள் தற்போது நிலை கொண்டுள்ளன என அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் தளபதி அட்மிரல் றொபேட் வில்லாட் தெரிவித்துள்ளார்.

தீவிரவாத முறியடிப்பு ஒத்துழைப்புத்திட்டத்தின் அடிப்படையிலேயே தெற்காசியாவில் இலங்கை உள்ளிட்ட 5 நாடுகளில் அமெரிக்க சிறப்புப்படையணிகள் நிலைகொண்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

பசுபிக் கட்டளைப் பீடமே இந்த சிறப்புப்படைகளை இந்த நாடுகளில் நிறுத்தியுள்ளது.

நேபாளம், பங்களாதேஷ், மாலைதீவு இந்தியா, மற்றும் இலங்கை ஆகிய ஐந்து நாடுகளிலேயே அமெரிக்கச் சிறப்புப் படைகள் நிலை கொண்டுள்ளன.

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் மத்தியில் பேசும்போதே பசுபிக் கட்டளைத் தளபதி இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவுக்கு தெற்காசியா மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் கூறியுள்ளார்.

எனினும், இலங்கையில் அமெரிக்க சிறப்புப்படைகள் எங்கு நிலை கொண்டுள்ளன என்ற தகவலை அவர் வெளியிடவில்லை. இலங்கை அரசும் இந்தத் தகவலை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

# யாழ்.நகரிலுள்ள உணவகத்தில் நேற்று பெரும்பான்மை இன தாதா கலாட்டா

## 'கடையையும் ஊழியரையும் கொளுத்துவேன்' என மிரட்டல்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ்.நகரில் உள்ள 'மலாயன் கபே' உணவகத்தின் சிட்டை (பில்) எழுதுநரை, பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் கடுந்தொனியில் மிரட்டித் தாக்கினார் எனக் கடை உரிமையாளரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

நேற்று மாலை 6.30 மணியளவில் கடைக்கு 'பிக்கப்' வாகனம் ஒன்றில் வந்தவர் 5 தோசை அடங்கிய பார்சல் கட்டுவதற்காக சிட்டை பெற்றுள்ளார்.

அதனை கையில் வைத்திருந்த அவர் இரண்டாகக் கிழித்துவிட்டார். பார்சல் கட்டியவர் சிட்டை கிழிக்கப்பட்டது பற்றி கேட்டபோது சற்று முரண்பட்டுள்ளார்.

பின்னர் சிட்டை எழுதுநரிடம் புதிய சிட்டை தருமாறு கேட்க இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதன்போது பார்சல் கட்டவந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் சிட்டைப் புத்தகத்தைக் கிழிக்க முற்பட்டார். தொடர்ந்து அவரைத் தாக்கி வீதிக்கு இழுத்து வந்துள்ளார்.

இந்தக் களேபரத்தை அடுத்து அங்கு பலர் கூடிவிட்டனர். அதைத் தொடர்ந்து குறித்த நபர் வாகனத்தில் ஏறி சென்றுவிட்டார்என்றுகடை உரிமையாளர் தெரிவித்தார்.

"ரயர்போட்டுக் கடையையும் உன்னையும் கொளுத்துவேன். நான் யார் என்று தெரியுமா உனக்கு? என்று அந்த நபர் மிரட்டியதாக எழுதுநர் கூறினார். இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸில் முறைப்பாபடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-10-15)

# மூழ்கிஇறந்தோர் விவரம் திரட்டல்

இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தால் வடக்கு மாகாணத்தில் குளம் மற்றும் கடல் ஆகியவற்றில் மூழ்கி இறந்தவர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன. கடந்த 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் குளம், கடல் ஆகியவற்றில் மூழ்கி இறந்தவர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாணம் வடக்கு, வலயப் பதிவாளர் நாயக அலுவலக உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-9)

# 'தேன்நிலவு' எப்படி இறுதி இரவானது?

## கொள்ளுப்பிட்டி கொலை குறித்து அதிர்ச்சித் தகவல்கள்

கொழும்பு, மார்ச் 3

கொள்ளுப்பிட்டியில் அரங்கேறிய தமிழ்ப் பெண்ணின் கொடூரமான படுகொலைச் சம்பவம் தொடர்பில் இதுவரையில் வெளியாகாத அதிர்ச்சிகரமான திடுக்கிடும் தகவல்கள் கசிந்துள்ளன.

தேனிலவுக்காகச் சென்ற பெண்ணை யார் கொலை செய்தது? அவர் எப்படிக் கொலை செய்யப்பட்டார் என பல்வேறு கோணங்களில் எழுந்த கேள்விகளுக்கு - சந்தேகங்களுக்குப் பதில் கிடைத்துள்ளது.

மூடிய அறைக்குள் அரங்கேற்றப்பட்ட இந்தக் கொலைச் சம்பவத்தால் கொள்ளுப்பிட்டிப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டன. முதலிரவு எப்படி இறுதி இரவாக மாறியது?

நடந்ததுஇதுதான்:

சம்பவத்தில் கொல்லப்பட்ட சுதர்ஷினியும், சந்தேக நபரான ஞானச்சந்திரனும் ஆரம்பம் முதலே நட்பு ரீதியில் பழகிவந்துள்ளனர். இருசாராரின் குடும்பங்களும் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்டதால் இருவருக்கும் இடையிலான நட்பு வலுத்துள்ளது.

இந்நிலையில், உறவினர்களின் சம்மதத்துடன் சுதர்ஷினி மற்றுமொருவரை மணந்துள்ளார். பின்னர், 1981ஆம் ஆண்டில் சுதர்ஷினி பம்பலப்பிட்டியிலிருந்து தனது கணவர், பிள்ளைகள் சகிதம் பிரிட்டன் சென்றுள் ளார். அங்கு குடியுரிமையும் பெற்று அங்கேயே வாழ்ந்துவந்துள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில், கொடுமையாக அரங்கேறிய சம்பவமொன்று மீண்டும் சுதர்ஷினிக்கும் ஞானச்சந்திரனுக்குமிடையேதொடர்பை ஏற்படுத்தியுள்ளது.

திடீர் விபத்தொன்றில் ஞானச்சந்திரனின் மனைவியும், பிள்ளைகளும் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் எப்படியோ சுதர்ஷினியின் காதுகளுக்குச் சென்றடைய, அவர் உடனடியாக ஞானச்சந்திரனுடன் தொடர்பு கொண்டு விசாரித்துள்ளார். இதனையடுத்து, முறிந்திருந்த நட்பு மீண்டும் மலர ஆரம்பித்துள்ளது.

இதன் பின்னர் இருவரும் பல தடவைகள் வெளிநாடுகளில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதுடன், நட்பு காதலாக உருவெடுக்கவும் தொடங்கியது. இதனால், தனது கணவரை விவாகரத்துச் செய்துவிட்டு ஞானச்சந்திரனை மணம் முடிப்பதற்கு சுதர்ஷினி முடிவெடுத்தார்.

அவ்வாறு விவாகரத்துப் பெற்ற பின்னர், சுதர்ஷினி கடந்த 14ஆம் திகதி இங்கு வந்துள்ளார். வந்த கையோடு தனது காதலனை கரம்பிடித்துள்ளார்.

திருமணம் முடிவடைந்த கையோடு பிரிட்டன் திரும்ப வேண்டும் என்பதுதான் சுதர்ஷினியின் எதிர்பார்ப்பாக இருந்தது. இந்நிலையில், கொள்ளுப்பிட்டியிலுள்ள ஹோட்டலொன்றில் தேன்நிலவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

புதியதொரு வாழ்க்கை, புதிய எதிர்பார்ப்புகள் எனப் பல்வேறு கனவுகளோடு ஹோட்டல் அறையில் காத்திருந்தார் சுதர்ஷினி. அப்போது, ஞானச்சந்திரனும் வந்தார். இருவரும் தங்களது எதிர்காலம் குறித்து பலதும் பத்தும் பேசியுள்ளனர். அன்பான வார்த்தைகளைப் பரிமாறவேண்டிய தறுவாயில் சுதர்ஷினி, ''பிரிட்டன் சென்று வாழ்வோம், பிரிட்டன் சென்று வாழ்வோம்'' எனத் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளார். இதற்குப் பிரபல வியாபாரியான ஞானச் சந்திரன் கடும்எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இதனால், இருவருக்குமிடையில் தர்க்கம் ஏற்பட்டது. நீண்டநேரத்துக்குப் பின்னர் இருவரும் சமாதானமடைந்தனர். அதன் பின்னர் இருவரும் இணைந்து மது அருந்தியுள்ளனர். பகையை மனதிலேயே வைத்திருந்த ஞானச்சந்திரன், சுதர்ஷினிக்கு மது உச்சத்தை எட்டியதையடுத்து கத்தியால் அவரின் கழுத்தை வெட்டிக் கொலைசெய்துள்ளார்.

இந்தக் கொடூரமான சம்பவம் அரங்கேறிய பதற்றத்தால், ஹோட்டல் பின்புறத்திலுள்ள ஜன்னலின் ஊடாகப் பாய்ந்து தப்பியோடியுள்ளார் ஞானசந்திரன். மறுநாள் காலை சுதர்ஷினி சடலமாகக் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்ற ஹோட்டல் நிர்வாகத்தினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து, விசேட தேடுதல்நடவடிக்கையைமேற்கொண்ட கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் 24 மணித்தியாலங்களுக்குள் சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளனர்.


**வட இலங்கைச் சங்கீத சபை நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 165 ஆவது ஆராதனை விழா-2012**

**காலம்**
2012.03.04 ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை

**இடம்**
ஸ்ரீ வெங்கடேஸ்வரப்பெருமாள் ஆலய லக்சுமி நாராயண மண்டபம்

**தலைவர்**
திரு.வை.செல்வராஜா
வலயக்கல்விப்பணிப்பாளரும் வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்

**பிரதம விருந்தினர்கள்**
ஸ்ரீ வெங்கடாசலம் மகாலிங்கம்
இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவர்
ஸ்ரீமதி நித்தியா மகாலிங்கம்

**சிறப்பு விருந்தினர்**
லயன் E.S.P நாகரத்தினம் (P.M.J.F)
பொன்மனச்செம்மல்
மனித நேய ஈகையாளன், கல்விக் காருண்யன்

திரு.சு.கணபதிப்பிள்ளை உபதலைவர் அவர்கள்
ஜனாதிபதி விருது பெற்றமைக்காகவும்
திரு.வி.சிவஞான சேகரம் பொருளாளர் அவர்கள்
கலாபூசணம் பட்டம் பெற்றமைக்காகவும்
மேற்படி விழாவில் கௌரவிக்கப்படவுள்ளார்கள்

குறிப்பு தரம் 5, 6 இற்கு நடைபெறும் கருத்தரங்கு 08.03.2012 தொடக்கம் 11.03.2012 வரை யா/இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

வட இலங்கைச் சங்கீத சபை.
யாழ். வலயக் கல்வி அலுவலகம் நல்லூர்
யாழ்ப்பாணம்.
அ.தற்பரானந்தன்
செயலாளர்.



**தேவை**

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கணினி அறிவுடைய பெண் பிள்ளைகள் தேவை
(கணினி பழக விரும்புவர்கள் விரும்பத்தக்கது)
03.03.2012 / 04.03.2012 ஆகிய தினங்களில் நேரில் வரவும்
ARRUL GLOBAL EXPRESS
T.P : 0212226113
No. 01, பிறவுண் வீதி நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

**வங்கிகளுக்கான வேலை வாய்ப்பு விண்ணப்பம்**

Application for the Post of Trainee Staff Assistant
(BOC Sampath)
[illegible]திகதி : 04.03.2012
ARRUL GLOBAL EXPRESS
T.P : 0212226113
No. 01, பிறவுண் வீதி நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.



**பேரின்ப பெருவிழா**

இடம்: பழைய மாநகரசபை மைதானம் - யாழ்.
திகதி : 2,3,4 ஆம் திகதிகளில்
நேரம்: மாலை 4.00 மணிக்கு

சீர்காழி இயேசு பிரகாசம்
பிரபல பாடகர், இந்தியா

செய்தியாளர்: Rew. மைக்கல் புறோமன்
வியாதியஸ்தர்களிற்காக விஷேச ஜெபம் செய்யப்படும்.

பிரவேசம் இலவசம்

வாருங்கள் ஆசிர்வாதம் பெறுங்கள்
யாழ். போதகர் ஐக்கியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாவின் கருத்துக்கு எம்.எஸ்.எப். மறுப்பு

கொழும்பு, மார்ச் 3

பிரிட்டனைத் தளமாகக் கொண்ட 'எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பு' 2009ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், வன்னியில் போர் வலயப் பகுதியில் பணியில் ஈடுபட்டிருக்கவில்லை என்று தெரிவித்துள்ளது.

இந்திய மற்றும் இலங்கை ஊடகங்களில் வெளியான ஒரு நேர்காணல் தொடர்பாகத் தனது மறுப்பைத் தெரிவித்திருக்கும் அந்த அமைப்பு இலங்கை அரசிடம் போர் வலயத்தில் மக்களுக்காகப் பணியாற்ற அனுமதி கோரியபோதும் அப்போது அனுமதி ஏதும் தமக்கு வழங்கப்படவில்லை எனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

அப்போது போர் வலயத்துக்குள் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்த பொதுமக்களுக்குத் தனது சேவையை வழங்குவதற்கான அனுமதியைக் கோரிய போதிலும் அதற்கான அனுமதி வழங்காது இலங்கை அரசு இப்போது அங்கு தமது அமைப்பு கடமை புரிந்தது என்று கூறுவது தமக்கு ஆழ்ந்த அதிருப்தியைத் ஏற்படுத்தியுள்ளது- என்றுள்ளது.

இந்திய ஊடகமொன்றில் பெப்ரவரி 06 அன்று வெளியிடப்பட்டு பின்னர் இலங்கை ஊடகங்களில் மீள்பிரசுரிக்கப்பட்ட நேர்காணலில், எம்.எஸ்.எப் இலங்கையில் போர் உக்கிரம் பெற்றிருந்த காலப்பகுதியில் பணிபுரிந்ததாக பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்த கருத்தை ஏற்க மறுத்துள்ளது.

''பிரிட்டனின் எல்லைகளற்ற மருத்துவர் குழுவினர், இந்திய மருத்துவக் குழு உள்ளடங்கலாக பல அனைத்துலக அமைப்புக்கள் போர் வலயத்தில் சரணடைந்த ஆயுதக் குழுவினருக்கும், யுத்தத்திலிருந்து உயிர்தப்பிய பொதுமக்களுக்கும் சேவையை வழங்குவதற்காக அங்கு தங்கியிருந்தனர் என கோத்தபாய தெரிவித்துள்ளார்'' என ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. (10-15)

# இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு இந்தியா ஆதரவு வழங்க வேண்டும்

## மன்மோகனிடம் நேரில் சென்று கோரியது தி.மு.க.

சென்னை, மார்ச் 3

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் அமெரிக்காவால் கொண்டுவரப்படவுள்ள பிரேரணையின் மீதான வாக்கெடுப்பில் இலங்கை அரசை இந்தியா ஆதரிக்கக் கூடாது. மாறாக அந்தப் பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும் - என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளது தி.மு.க. .

டில்லியில் நேற்று பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்த தி.மு.க எம்.பி டி.ஆர்.பாலு, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்ற தி.மு.க. தலைவர் கருணாநிதியின் கருத்தை வலியுறுத்தினார்.

சுமார் 20 நிமிடங்கள் நீடித்த இந்தச் சந்திப்பின் போது இந்த தீர்மானத்தை இந்தியா ஆதரிப்பது என்பதை தவிர வேறு எந்தவிதமான நிலையையும் தி.மு.க. ஏற்காது என்றும் பிரதமரிடம் தி.மு.க. திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

இந்த விவகாரத்தில் இலங்கையை ஆதரிக்கக் கூடாது என அனைத்துத் தமிழக கட்சிகளும் கோரியிருந்தாலும், நடுநிலை வகிக்கிறோம் என்ற நிலையை இந்தியா எடுக்கக் கூடும் என்று தெரிகிறது. இதை தாம்மால் ஏற்க முடியாது என பிரதமரிடம் பாலு வலியுறுத்தியுள்ளார். (சி)

# ஈழத் தமிழருக்கு எதிராக ஐ.நாவில் வல்லரசு நாடுகளின் சதிக் கூட்டணி

குற்றவாளியே தன்னை விசாரித்து ஒரு கால வரம்புக்குள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் எனக் கோருகின்ற இலங்கைக்கு எதிரான பிரேரணை கொடியது. இதிலிருந்து உலக வல்லரசுகளின் சதி வலைக்குள் தமிழீழச் சிக்கலை சிக்கவைப்பதற்கான சூழ்ச்சிகள் நடக்கின்றனவோ என்ற ஐயம் எழுகிறது. - இவ்வாறு தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி பொதுச் செயலாளர் கி.வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஈழத்தமிழர் இனச்சிக்கல் குறித்து ஐ.நா. சபையிலிருந்து கசிந்து வரும் செய்திகள் கவலை அளிக்கின்றன. உலக வல்லரசுகளின் சதி வலைக்குள் தமிழீழச் சிக்கலை சிக்கவைப்பதற்கான சூழ்ச்சிகள் நடக்கின்றனவோ என்ற ஐயம் எழுகிறது. தமிழ்நாட்டுத் தமிழர்களும் உலகம் முழுவதும் பரவி வாழும் புலம்பெயர்த் தமிழர்களும் மஹிந்த ராஜபக்ஷ அரசு மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க வேண் டும் என ஒற்றைக்குரலில் ஐ.நாவைக் கோருகின்றனர்.

ஐ.நா. பொதுச்செயலாளர் நியமித்த வல்லுநர் குழு பரிந்துரைத்தவாறு இலங்கை ஆட்சியாளர்களை மேற்கண்ட குற்றங்களுக்காக பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.

உலகத்தமிழர்களின் இந்த அடிப்படை மனித உரிமை வேண்டுகோளைப் புறந்தள்ளிவிட்டு இலங்கை அரசே தனது ஆட்சியாளர்களும் படைத் தளபதிகளும், உலகச் சட்டங்களுக்கு எதிராக இழைத்த குற்றங்களை விசாரித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளட்டும் என்ற சொத்தைப் பிரேரணையை நிறைவேற்ற ஐ.நாவில் அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகள் சதி செய்து வருகின்றன என கசிந்து வரும் செய்திகளிலிருந்து தெரிகிறது.

நல்லிணக்க ஆணைக்குழு என்ற பெயரில் இலங்கை அரசு நியமித்த விசாரணைக்குழு அறிக்கையின் மீது குறிப்பிட்ட காலவரம்புக்குள் நடவடிக்கை எடுத்து தொடர்புடையவர்கள் மீது குற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை கேட்டுக்கொள்வதாக அத்தீர்மானம் கூறுகிறது. குற்றவாளியே தன்னை விசாரித்து ஒரு கால வரம்புக்குள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் எனக் கோருகிற கொடிய தீர்மானம் இது.- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெனிவா விவகாரம்; கூட்டமைப்பு கூடி முடிவு

01↘ நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத்தின் முன்னேற்றங்கள் அனைத்தையும் கண்காணிப்பது என்றும் தமிழ் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பது என்றும் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு ஏகமனதாகத் தீர்மானித்தது.

எம்மீதான நம்பிக்கையைத் தொடர்ந்தும் வெளிப்படுத்துமாறு நாம் கோரி நிற்கிறோம் - என்றுள்ளது. (உ-01)

## ஐ.நாவுடன் இணைந்து செயற்படுமாறு இலங்கைக்கு நவநீதம்பிள்ளை அழைப்பு

01↘ இலங்கை அரசு இணைந்து செயற்படும் என்று தாம் நம்புகிறார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

''மனித உரிமைகளின் அடிப்படையில், ஒவ்வொரு அரசுகளும் தமது குடிமக்களின் பாதுகாப்புக்கு விடப்படும் அச்சுறுத்தலில் இருந்து அவர்களைப் பாதுகாக்கும் கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றன. சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் அடிப்படையில், அரச கொள்கைகளை உருவாக்குவதற்கு (பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் உள்ளடக்கி) எனது அலுவலகம் உதவி வழங்கும்'' என்றும் அவர் தெரிவித்தார். (உ-01)

## விஜயகாந்த், சரத்குமார் கச்சதீவு வருகின்றனர்

01↘ இன்றுசனிக்கிழமை கச்சதீவுக்கு வருகை தரவுள்ளதாகவும், கச்சதீவுக்கு வருவதற்காக இராமேஸ்வரம் கரையில் பெரும் எண்ணிக்கையானோர் கூடியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

அத்துடன் ஜனாதிப தியின் பாரியார் சிராந்தி ராஜபக்ஷ, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும் கச்ச தீவு அந்தோனி யார் திருவிழாவில் கலந்து கொள்ளவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு ஆயர் தலைமையில் இந்தமுறை பெரும் எண்ணிக்கையான சிங்கள மக்களும் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக வருகை தரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. தமிழகத்தில் இருந்து 150 க்கும் மேற்பட்ட அருட் தந்தையார்களும் உற்சவத்தில் கலந்துகொள்ளவுள்ளனர். (த-7)

## இலங்கைக்கு சீனா ஆதரவு

01↘ வழங்கியுள்ளதுடன், சீனாவின் அடிப்படை நலன்களில் இலங்கையின் ஆதரவுக்கு நன்றியையும் தெரிவித்துள்ளார்.

இலங்கை - சீனா இராஜதந்திர ரீதியிலான நட்புறவு 55 வருடங்களை எட்டியுள்ளது. இரு நாட்டு இராணுவங்களுக்கும் இடையில் தொடர்புகளை அதிகரிக்கவும், நட்புறவை மேன்மேலும் சக்திமயப்படுத்தி உறுதிப்படுத்தவும் இலங்கையுடன் ஒத்துழைக்க சீனா விரும்புகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு வலுப்பெற்று வருகிறது என இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு சீன அரசு வழங்கிய ஒத்துழைப்பிற்கும், அபிவிருத்தி மற்றும் புனர்நிர்மாணப் பணிகளுக்கு வழங்கிய ஒத்துழைப்பிற்கும் பாதுகாப்புச் செயலாளர் நன்றி கூறியுள்ளார்.

மேலும், இரு நாடுகளுக்குமிடையிலான உறவு சக்திமிக்கதாக அமைவதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார் என அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ஒ-சி)

## புலம்பெயர் தமிழர்-அரச தரப்பு ஜெனிவாவில் சூடான விவாதம்

01↘ இப்போது தான் நாம் வேளியே வந்துள்ளோம். புலம்பெயர் தமிழர்களுடன் நாம் இணங்கிச் செயற்பட விரும்புகிறோம் என்று கூறினார்.

அத்துடன் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை வலியுறுத்தி அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானம் நியாயமற்றது என்றும் இலங்கை அரச பிரதிநிதிகள் வலியுறுத்திக் கூறினர்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற தமிழர்களை இலங்கை அரசு அங்கீகாரம் பெற்ற ஒருவர் ஒளிப்படம் பிடித்தார். இதுகுறித்து தாம் ஐ.நா பாதுகாப்பு அதிகாரிகளிடம் முறையிடப் போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்குலக அரசசார்பற்ற நிறுவனங்களை தாக்கி இலங்கை அரச பிரதிநிதி ஒருவர் பேசினார்.

அவரது கருத்துகளை நிராகரித்த தமிழர்கள், சமரசப்படுத்தும் வாக்குறுதிகளை வழங்கும் இலங்கை அரசு அதனை ஒருபோதும் பாதுகாப்பதில்லை என்று குற்றஞ்சாட்டினர்.

இந்தக் கூட்டத்தில் கொலைகள் மற்றும் ஆள்கள் காணாமற்போனமை தொடர்பாக இலங்கை அரசு தமது கண்டறிவுகளை பகிரங்கமாக முன்வைக்க முடியுமா என்று அனைத்துலக மன்னிப்புச் சபையின் பிரதிநிதி சவால் விடுத்தார். வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொண்டு இலங்கை அரசு சுத்தமான கைகளுடன் ஜெனிவாவுக்கு வரவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (த)

## ஜெனிவா தீர்மானங்கள் இந்தியா ஆழ்ந்த கவலை

01↘ ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தியப் பிரதிநிதி வெளியிட்டுள்ள கருத்து, இலங்கை விவகாரத்தில் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்காது என்பதை வெளிப்படுத்துவதாகவே கருதப்படுகிறது.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா எதிர்க்கலாம் அல்லது நடுநிலை வகிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த)

## வடக்கு, கிழக்கில் படைகள் குறைக்கப்படும்

01↘ படையினர் மத்தியில் உரையாற்றும் போதே இந்தத் தகவலை அவர் வெளியிட்டுள்ளார்.

வடக்கில் போர் முடிவுக்கு வந்த நிலையிலும், அங்கு பெருமளவில் படைகள் குவிக்கப்பட்டுள்ளன என்று கடுமையான விமர்சனங்கள் வந்த நிலையிலேயே இலங்கை அரசு இந்த முடிவை எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக இராணுவத் தளபதி தகவல் வெளியிடுகையில்,

வடக்கு,கிழக்கில் உள்ள பல்வேறு றெஜிமென்ட்களின் எண்ணிக்கையும், பிரதேச படைத் தலைமையகங்களினதும், படையினரதும் எண்ணிக்கையும் குறைக்கப்படவுள்ளன. மிகவும் தேவையான தலைமையகங்களில் மேலதிகமான பற்றாலியன்களை ஒன்றிணைக்கவும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுபோன்ற இடங்களில் திருமணத்துக்குப் பின்னர் அதிகாரிகளும் படையினரும் குடும்பங்களுடன் தங்கியிருக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

போர்முனையில் போரிட்ட சிறப்புத் தேர்ச்சி பெற்ற படையினர் தனியான பாதுகாப்பு கட்டமைப்புகளில் நிறுத்தப்படவுள்ளனர். ஏனைய உதவிப் படையினர் இலங்கை முழுவதிலும் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்று கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (த)

# நேரம் கடந்துகொண்டிருக்கிறது இலங்கைக்கு அமெ.எச்சரிக்கை

01↘ தினம் அவர் உரையாற்றுவார் என்றிருந்தபோதும் அது ஒருநாள் பிற்போடப்பட்டது.


தனது நேற்றைய உரையில் ஒரேரோ, சிரியா மற்றும் ஈரான் நாடுகளின் மனித உரிமைகள் விடயங்கள் குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தினார்.

இலங்கை விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், இலங்கை அரசின் நடவடிக்கைக்காக உலக நாடுகள் கிட்டத்தட்ட மூன்று ஆண்டு காலம் காத்திருந்தன என்றார். இலங்கை ஜனாதிபதியின் "நல்லிணக்க ஆணைக் குழு வெளியிட்ட அறிக்கையை நாம் வரவேற்கும் அதேவேளையில், அதிலுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம். இந்த விடயங்கள் குறித்து இலங்கை அரசுடன் போர் முடிந்ததிலிருந்து நாம் இணைந்து பணியாற்றி வருகிறோம். அதனைத் தொடர் [illegible] என்றார் ஒரேரோ.

ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கை தொடர்பில் எடுக்கும் நடவடிக்கை களத்தில் நீடித்த அமைதியை ஏற்படுத்துவதற்கான விதையாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். மனித உரிமைகள் சபை உலகின் மத்தியில் குறிப்பிடத் தகுந்த [illegible] வேண் [illegible] தனது உரையில் முக்கியமாக வலியுறுத்தினார் ஒரேரோ. (உ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் நீதியின் குரல் வெல்லட்டும்! தமிழர் விடியலில் பூபாளம் ஒலிக்கட்டும்!!



## வாழ்த்தி முழங்குகிறார் வைகோ

சென்னை, மார்ச் 3

எட்டுத் திசைகளிலே இருந்தும் ஈழத்திற்குக் கட்டியம் கூற ஜெனிவாவுக்குச் செல்லுங்கள். சிங்களவர் பூட்டிய அடிமை விலங்குகளை உடைத்தெறிய சம்மட்டி ஏந்துங்கள்.

தாயக விடுதலைக்காக மாவீரர்கள் கொட்டிய குருதியும், சிந்திய உயிர்களும் விடுதலைப் போருக்கு பூபாளம் இசைக்கட்டும்.

தமிழர்கள் அங்கு எழுப்பும் உரிமைப்போர் ஒலியின் உரத்த சத்தம் கேட்டு, இலங்கை அரசு நடுங்கட்டும்.

- இவ்வாறு தமிழகத்தின் பழுத்த அரசியல்வாதியும், மறுமலர்ச்சி திராவிடர் முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலருமான வைகோ முழங்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இனப்படுகொலையால் தமிழீழ விடுதலையை எவராலும் அழிக்க முடியாது. புதைகுழிகள் வீறுகொண்டு எழும். தமிழர் சிந்திய இரத்தத் துளிகள் ஆவேசங்கொண்டு சுதந்திர ஆலோலம் எழுப்பும். அடிபட்ட வேங்கை சீறிப்பாய்தல் போல், தமிழ் மக்கள் ஜெனிவாவில் அலைகடலாய் பிரவேசிக்கும் நாள்தான் எதிர்வரும் 5 ஆம் திகதி.

மனித குலத்தின் மனச்சாட்சியின் கதவை ஈழத்தமிழினம் தட்டுகிறது. ஐ.நா. சபையின் மனித உரிமைப் பேரவையில் 'நீதியின் குரல் வெல்லட்டும்' எனக் கேட்கிறது. பெப்ரவரி 5 ஆம் திகதி பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் இருந்து ஈழத் தமிழர்கள் வேலுப்பிள்ளை மகேந்திரராஜா, லோகநாதன் மருதையா, யாகோமுத்து கிரேசியன் ஆகிய மூவர் தியாகப்பயணம் தொடங்கினர்.

ஆம்... ஈழத்தமிழரின் விடிவுக்கான நடைபயணம், ஜெனிவாவை நோக்கி. 1000 கிலோ மீற்றர் தூரம் இப் பயணம். வீசியடிக்கும் காற்றுக்கும், குளிருக்கும் கலங்காது வீரநடை போட்டனர் இந்த வேங்கைகள்.

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு திட்டமிட்டு வகுத்ததுதான் இந்தப் பயணமும் அதன் நிறைவாக மார்ச் 5 ஆம் திகதி ஆல்ப்ஸ் மலைகளின் அழகிய தேசத்தில் ஜெனிவா நகரில் பொங்கு மா கடலாய் தமிழர் திரண்டு அகிலத்தின் செவியெல்லாம் கேட்க எழுப்ப இருக்கும் விடியலின் சங்கநாதம். ஐரோப்பா கண்டத்தின் அனைத்து தேசங்களில் இருந்தும் புலம் பெயர்ந்த ஈழத் தமிழ் மக்கள் ஜெனிவாவில் குவிகின்றனர். பஸ்கள் ஏராளம் ஏராளம் தயாராகிவிட்டன.

> ''புது யுகத்தின் வெளிச்சம் பரவுகிறது. விடியலின் ஆலோலம் கேட்கிறது. ஜெனிவாவில் எழும் முழக்கம் மனித குலத்தின் மனச்சாட்சியின் கதவை ஓங்கித் தட்டப்போகிறது. துடிக்கத் துடிக்கத் தமிழினத்தைப் படுகொலை செய்த கொடியோரை குற்றக்கூண்டில் நிறுத்துவோம்''

பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் பட்டணத்தில் இருந்து மட்டும் நான்கு அரச ரயில்கள் தமிழர்கள் பயணிக்க ஜெனிவா விரைகின்றன. அந்தத் தொடர் ரயில்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடிகள், ரயிலின் முகப்பில் தமிழீழ வரைபடம். மாவீரர் திலகம் பிரபாகரனின் வீரம் செறிந்த படம். இந்தச் செய்தியை அறியும்போதே மேனியெல்லாம் சிலிர்க்கிறது. நெஞ்சம் களிப்பில் துள்ளுகிறது. தியாக நடைபயணத்தின் கோரிக்கைகள் முக்கியமானவை ஐந்து.

✱தமிழினப் படுகொலை செய்த சிங்கள இனவாத அரசை சர்வதேச நீதிமன்றக்கூண்டில் நிறுத்தித் தண்டிக்க ஐ.நா. சபை தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

✱இலங்கைச் சிறைகளில் அடைபட்டுக் கிடக்கும் தமிழர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும்.

✱தமிழர்தாயகத்தில் இருந்து இலங்கை இராணுவமும், பொலிஸும் உடனடியாக வெளியேற்றப்படவேண்டும்.

✱சுதந்திர தமிழீழத்திற்கான பொது வாக்கெடுப்பை ஐ.நா. சபை முன்னின்று நடத்தவேண்டும். இந்த வாக்கெடுப்பில் உலகெங்கும் அந்தந்த நாடுகளில் வாழுகின்ற ஈழத்தமிழர்கள் வாக்குப்பதிவில் பங்கேற்க வகைசெய்யவேண்டும்.

✱தமிழீழ மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குவதுடன், தங்கள் சுதந்திர ஈழ தேசத்தை நிர்மாணிக்கும் உரிமையை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரிக்க வேண்டும்.

கடந்த ஆண்டு ஜூன் முதலாம் திகதி பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸ் நகரில் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற மாநாட்டில் இந்தக் கோரிக்கைகளையே வலியுறுத்தி நான் உரையாற்றியது நினைவில் எழுகிறது.

அடிபட்ட வேங்கை என ஈழத்தமிழினமும் அதன் இளைஞர் கூட்டமும் கோபாவேசத்தோடு உரிமைப்போர் நடத்தப் புறப்பட்டுவிட்டது.

ஐரோப்பிய நாடுகளிலும், புவியின் பல்வேறு தேசங்களிலும் இதயம் வடிக்கும் இரத்தத்தோடு தமிழீழ விடியலுக்கு ஏங்குகின்ற தமிழர்கள் ஜெனிவாவுக்குப் புறப்படுங்கள்.

தாயக விடுதலைக்காக மாவீரர்கள் கொட்டிய குருதியும், சிந்திய உயிர்களும் விடுதலைப் போருக்கு பூபாளம் இசைக்கட்டும்.

ஜெனிவாவில் ஐ.நா. சபைக் கட்டடத்திற்கு எதிரே நெருப்பின் நாக்குகளைத் தழுவி தீக்குளித்து மடிந்த மாவீரன் முருகதாசனின் பெயரால் அழைக்கப்படும் களத்தில் தமிழ்க்குலம் பிரளயமாய்த் திரளட்டும்.

தமிழர்கள் அங்கு எழுப்பும் உரிமைப்போர் ஒலியின் உரத்த சத்தம் கேட்டு, சிங்கள அரசு நடுங்கட்டும்.

இதோ, புது யுகத்தின் வெளிச்சம் பரவுகிறது. விடியலின் ஆலோலம் கேட்கிறது. ஜெனிவாவில் எழும் முழக்கம் மனித குலத்தின் மனச்சாட்சியின் கதவை ஓங்கித் தட்டப்போகிறது. துடிக்கத் துடிக்கத் தமிழினத்தைப் படுகொலை செய்த கொடியோரை குற்றக்கூண்டில் நிறுத்துவோம். சுதந்திர தமிழீழ விடுதலைக் கொடியை ஏற்றுவோம் என மார்ச் 5 ஜெனிவாப் பிரகடனம் தமிழகத்தில் முத்துக்குமார் வைத்த தியாக நெருப்பின் தாக்கத்தை அணைத்துத் தமிழர்களுக்கும் உணர்த்தட்டும். என்றுள்ளது.

(ஒ-சி)

# விமல், சம்பிக்க வாயை அடைத்தால்தான் இலங்கைக்கு நல்லது நடக்கும்

## ஜெனிவாவில் பிரேரணை வ்ராமலும் கூட விடலாம்

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எதிராக அரசு உள்நாட்டில் நடத்திய ஆர்ப்பாட்டங்களே தற்போது அரசுக்கு வினையாக மாறிவிட்டன. அரசின் இந்த நடவடிக்கையால் சர்வதேசம் கொதிப்படைந்துள்ளது - என்று நவசமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான பிரேரணையைத் தடுப்பதற்கு அரசு இராஜதந்திர வழிமுறைகளைக் கையாளாவிட்டாலும் பரவாயில்லை. அமைச்சர்களான விமல், சம்பிக்க ஆகியோரின் வாயை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தால் அது நாட்டுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத்தொடர் குறித்துக் கருத்து வெளியிடும்போதே விக்கிரமபாகு கருணாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாகஅவர்மேலும் கூறியவை வருமாறு:-

ஜெனிவாவில் இலங்கை விவகாரம் பெரியளவில் பேசப்படுகின்றது. அநேகமாக, மேற்குலகம் இலங்கைக்கு எதிரான பிரேரணையை இன்னும் ஓரிரு வாரங்களில் முன்வைக்கலாம்.

இது நாட்டுக்கு எதிரான பிரேரணை அல்ல. ஊழல் தலை விரித்தாடும் அரசுக்கு எதிரான பிரேரணையாகும். அதனால், இது தொடர்பில் நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

இலங்கை அரசு, உள்நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் எனக் கருதி மேற்குலக நாடுகள் இலங்கைக்கு இம்முறையும் சந்தர்ப்பமொன்றை வழங்கவிருந்தன. இருப்பினும், அந்நாடுகளுக்கு எதிராக அரசு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்ததால், இலங்கை மீதுள்ள நம்பிக்கையை அந்த நாடுகள் இழந்து கொதிப்படைந்துள்ளன.

நாட்டு மக்களைத் தூண்டி விடுவதன் பின்னணியில் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க ஆகியோர் செயற்படுகின்றனர்.

இவர்களின் வாயை மூடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமானால், சிலவேளை இலங்கைக்கு எதிரான பிரேரணை வராமல் இருப்பதற்கான சாத்தியம் கூட உண்டு என்பதை ஜனாதிபதி மஹிந்த புரிந்து கொள்ளவேண்டும் - என்றார்.

(ஒ-சி)

பணிப்பெண் தேவை

சுன்னாகத்தை அண்மித்த பகுதியில் உள்ள வீட்டில் நின்று குழந்தையைப் பராமரிக்கக்கூடிய பணிப் பெண் தேவை. (தங்கிநிற்பதும் விரும்பத்தக்கது.)
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்
தொடர்பு:-0770559313

கணினி மலிவு விற்பனை

Dual CORE IBM FULL SET - 31,750/=
FREE- WEBCAM / 4GB PENDRIVE / HEAD PHONE
ஒரு வருட உத்தரவாதம்
LAPTOP, DIGITAL CAMERA, PHONE
அனைத்துவகையான பொருள்களும் எம்மால் திருத்திக்கொடுக்கப்படும்.
ST. ANTONY'S.COM
187, KKS ROAD, JAFFNA.
(மின்சார நிலையவீதி எதிர்)
021-222-4865, 0754980027.

செங்கல் விற்பனைக்கு

அத்திவார கற்கள், 1 ½ அங்குல கருங்கல் சல்லி, 1 அங்குல கருங்கல் சல்லி, 3/4 அங்குல கருங்கல் சல்லி, ½ அங்குல கருங்கல் சல்லி,
சல்லி கற்கள்
நிலப்பதிப்புக் கற்கள்
பல வடிவங்களில் பல்வேறு அளவுகளில் நிலப்பதிப்புக் கற்கள் மற்றும் பூகற்கள் (Grill) விற்பனைக்கு உண்டு,
யாழ் மற்றும் வன்னி பிரதேசங்களுக்கு விநியோகம் செய்யப்படும்
பிரணவன் என்ரபிறைசஸ்
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
077 3818799 (சங்கிலியன் சிலைக்கு முன்)

CHEMISTRY S.VASU
NIGHT CLASSES
புதிய பிரிவு
ஆரம்பம் : 03.03.2012 Sat 7.00 pm.
Inorganic Sat, Sun - 7 - 8 pm
Organic Mon, Wed - 7 - 8 pm
Physical Tue, Thur - 7.00 - 8.00 pm.
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

''திசைகாட்டியின்'' கொழும்புக்கிளை திறப்புவிழா அழைப்பு

''விசா'' ஆலோசனைத்துறையில் யாழ் மக்களின் அபிமானத்தை வென்ற முன்மாதிரி ஆலோசனை நிறுவனமான
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV82703)
இன்று தனது சேவையைக் கொழும்பிற்கு விஸ்தரிக்கின்றது.
இடம் 23,1/3 மகேஸ்வரி ஒழுங்கை கொழும்பு 06
காலம்: மு.ப 10 மணி
பிரதமவிருந்தினர் உயர் திரு.சி.செல்வராஜா
(பட்டயக் கணக்காளர், திசைகாட்டி இயக்குனர் சபை உறுப்பினர்)
தங்கள் நல்வரவை நாடும் திசைகாட்டி குழுமம்.
தலைமைக்காரியாலயம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண்வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 0212219016
115 A இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.
தொலைபேசி 0212285544
மெல்பேர்ண் ஆஸ்திரேலியா
0061412479209

ஆங்கிலம் SPOKEN ENGLISH
இலவச பயிற்சிப்பட்டறை FREE WORKSHOP
பயிற்சிக்கான அனுமதி, பயிற்சி புத்தகம், CD, மற்றும் சான்றிதழ் இலவசம்
182, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணத்தில்
ஒரு மணிநேரத்தில் முழுமையான ஆங்கிலம்
பிரிவு 1 : காலை 8.00 – 9.00 பிரிவு 2 : காலை 10.00 – 11.00
பிரிவு 3 : மாலை 1.00 – 2.00 பிரிவு 4 : மாலை 3.00 – 4.00
03.03.2012 சனிக்கிழமை
பாடசாலை மாணவர் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 2229505
கிளைகள் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நெல்லியடி சங்கானை, மற்றும் அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஒருவன் எப்போதும்
வீரனாக வாழ
முடியாது. ஆனால்
என்றென்றைக்கும்
மனிதனாக வாழ
முடியும்.
-விவேகானந்தர்



வார வசந்தம் 01

உதயன் 03 மார்ச் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

# ஆளுமை விருத்திக்கு சுய பிரதிமை

**" ஆளுமையினூடு சுய பிரதிமையைச் சாதிப்பதுதான் இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய உளவியல் கண்டுபிடிப்பாகும்" உளவியல் ஆய்வாளர் Dr.மேக்ஸ் வெல் மால்ட்ஸ்**

இன்றைய கால மனிதவள மேம்பாட்டு ஊக்கல் சக்தியாக உளவியல் கல்விப் பிரயோகங்கள் நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கின்றன.

இவற்றில் மனிதத்துவ ஆளுமையை விருத்தியாக்கும் நவீன கூறுகள் எடுத்தாளப்படுகின்றன; ஒரு சமூக நிலைமைக்கு ஒருவனுடைய அகம் கொண்ட உடல் - உளத் தூண்டல் பேறுகளின் ஒருமைப்பாடான அமைப்பு ஆளுமை எனப்படுகின்றது.

இது ஒருவர் பெற்றுள்ள உயர் பண்புகள், உளப்பண்புகள், மனப்பாங்குகள், சமயோசித புத்தி, நடத்தைப் பாங்குகள், தீர்மானம் எடுத்தல், விழுமியங்கள் என்பவற்றின் ஒருங்கிணைந்த தன்மையாகவுள்ளது. உடல், தோற்றம், அனுபவங்கள், நினைவுகள், கற்பனைகள், பழக்க வழக்கங்கள், கவர்ச்சிகள், நடை, உடை, பாவனை ஆகியவை மனிதத்துவ ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

## ஆளுமை

ஒருவன் தனது சூழலுடன் கொண்ட தனியான பொருத்தப்பாடுகளை அவனுடைய அகத்தினுள் தீர்மானிக்கும் உளவியல் பிரயோக முறைகளின் அமைப்பாகவும், ஆளுமை உள்ளது. இது உடல், உள ஆரோக்கியத்தில் பெரும் பங்கு வகிக்கின்றது. குறிப்பாக இங்கு உள ஆரோக்கியம் என்பது ஒருவர் தனது வயதுக்கேற்ப மாறுபாடில்லாது உடல், உள நிலைமைகளில் மனநிறைவும் மகிழ்ச்சியும் பெற்றிருத்தல் என்பதாகும்.

இவ்வாறான ஆளுமையின் பிரதிபலிப்பான உள ஆரோக்கியமுடையவர்களிடம் சுறுசுறுப்பு, மகிழ்வுடனிருக்கல், நட்புடன் பழகுதல், ஒழுங்குமுறைப்படி நடத்தல், உண்மையாக இருத்தல், உரிமைகளை மதித்தல், சமாதானமாக நடத்தல், மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்துதல், தளம்பல் நிலையைச் சமாளித்தல், வேலையினூடு திருப்தியடைதல், வேலை முடியும்வரை ஆர்வம் குன்றாது செயற்படல், ஒத்துழைத்தல், கருணை காட்டுதல், குழுவாக செயலாற்றல், பிறருடன் பகிர்ந்து கொள்ளல் ஆகிய பண்புகள் மிளிர வேண்டும்.

ஆனாலும் இன்றைய சம காலத்தில் இந்தப் பண்புகளையுடையவர்கள் குறைவாக வுள்ளனர். இந்த நிலையை நீக்கப் பல்வேறு புதிய செயற்றிட்டங்கள் முன்வைத்து நடை முறைப்படுத்தப்படுகின்றன. உன்னதமான ஆளுமையுடையோர் பிரச்சினைகளில் இருந்து மனிதர்களைப் பிரித்துப் பார்க்கக் கூடியவர்களாக இருப்பர். தம்மிலுள்ள குறை, நிறைகளை விளங்கி அவற்றை ஒரே தளத்தில் நின்று மனம் திறந்து பேசக் கூடியவர்களாக இருப்பர். இவர்கள் மனிதத்துவத்தை நிறைவாக அனுபவிப்பர். உலகம் முழுவதும் பரந்து காணப்படும் அன்பை அவர்களால் உணரமுடியும். மகிழ்வு - சந்தோசம் ஆகியவற்றுடன் மட்டும் தம் வாழ்வைச்சுருக்காது மறை உணர்வுகளையும் ஏற்றுக்கொள்வர். சரி-பிழை, நல்லது - கெட்டது எனத் தீர்ப்பிடுவதில் காலத்தைச் செலவு செய்யாது ஆக்க ரீதியாக என்ன செய்யலாம் என்பதிலேயே கவனம் செலுத்துவர். தமது அக வாழ்வைத் திருத்தமாக நோக்கக் கூடியவர்களாக இருப்பதால் தம் குறைகளைத் தொடர்ந்து திருத்திக் கொண்டே இருப்பர். தம்மை யதார்த்தமாக வெளிப்படுத் தத் தயங்கமாட்டார்கள். தமது செயல்களுக்குத் தாமே பொறுப்பேற்றுக்கொள்வர். மற்றவர்களைக் குறை கூறுவதை இவர்கள் தவிர்த்துக் கொள்வார்.

தமக்கு ஏற்படுகின்ற துன்பங்களையும் கஷ்டங்களையும் கூட எப்படிப் பயனுள்ளதாக மாற்றலாம் எனச் சிந்தித்துச் செயலாற்றுவர். மற்றவர்களில் ஏற்படுகின்ற புண்படுத்தல், உதாசீனம் செய்தல் போன்ற வலைகளில் இவர்கள் விழ மாட்டார்கள்.

இதனால் உன்னத ஆளுமையையுடைய உள ஆரோக்கியமானவர்களின் வாழ்வு அவர்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். இவர்கள் இன்னொருவர் போல் ஆக வேண்டும் என்ற விருப்பின்றித் தாம் தாமாகவே இருக்க விரும்புவர். இவர்கள் மற்றவர்களின் வளர்ச்சியிலும் சமூகத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியிலும் அக்கறை கொண்டவர்களாக இருப்பர். இவ்வாறான உன்னத ஆளுமையை நோக்கி நீங்கள் பயணிப்பது சிறந்தது.



## ஆளுமையைப் பாதிக்கும் காரணி

மனிதர்களுடைய - மாணவர்களுடைய ஆளுமையைப் பல்வேறு காரணிகள் பாதிக்கின்றன. அன்பு கிடைக்காமை, பாதுகாப்புணர்வின்மை, கவனிப்புக்கிடைக்காமை, தனிமை, சமூக இசைவாக்கத்துக்குச் சந்தர்ப்பமின்மை, தவறான வழிநடத்தல், தவறான முன்னுதாரணங்கள், வறுமை, பெற்றாரைப் பிரிந்திருத்தல், கொடும் தண்டனைகள், தேவைகள் நிறைவேறாமை, நோய்ப் பாதிப்பு, போர்ச் சூழல் தாக்கங்கள், வாய்ப்புக்கள் மறுக்கப்படுதல் ஆகிய பல்வேறு காரணிகளால் ஆளுமை ஆற்றல் தாக்கங்களுக்கும் பாதிப்புக்களுக்கும் சிதைவுகளுக்கும் உள்ளாகின்றது. குறிப்பாகப் பாடசாலைகளில் ஆசிரியரின் அன்பு கிடைக்காமை, புறக்கணிப்பு, சமூக ஏற்றத்தாழ்வுகள், தாய், தந்தை இன்மை, பாரபட்சம் காட்டல், தவறான தீர்ப்புக்களுக்கு ஆளாகுதல், சுரண்டல் போன்ற பல காரணங்களால் மாணவர்களின் ஆளுமையில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.

இதனால் பாடசாலை வரும் சிறார்கள் அசாதாரண நடத்தைகளை மேற்கொள்கின்றமை, அமைதியின்றிக் காணப்படல், மனவெழுச்சிச் சமநிலை இன்மை, சமூக இசைவாக்கமின்மை, கற்றலில் கவனம் செலுத்த சுய கட்டுப்பாடுகள் இன்மை போன்ற மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர்.

இவற்றிலிருந்து மாணவர்களை விடுவிக்கவும் மேலும் எல்லோருக்கும் ஆளுமை தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொள்ளவும் விரைவான செயலாற்றுகைகள் தேவைப்படுகின்றன. இதற்கு முதலில் இவ்வாறானவர்களுக்கு ஆதரவு வழங்கி விசேடமான செயற்பாடுகளையும் வெற்றிகளையும் பெறக் கூடிய பின்வரும் சந்தர்ப்பங்களைத் தேடிக் கொடுக்க வேண்டியுள்ளது.

* முக்கிய தேவைகளை நிறைவடையச் செய்தல், ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தல்.
* தன்னைப் பற்றிய திருப்தியான உணர்வைக் கொடுத்தல்.
* பிறருடைய அங்கீகாரத்தையும் ஊக்கத்தையும் வழங்குதல்.
* அவர் வழியைத்தானாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளச் சந்தர்ப்பமளித்தல்.
* நல்ல [illegible] வழிகாட்டல்.
* மகிழ்ச்சியான [illegible] பெற்றுக்கொடுத்தல்.
*பொருளாதாரப் பாதுகாப்பு வழங்குதல்.
* சிறந்த நல்வாழ்வு வாழ வழிகாட்டல் ஆலோசனை வழங்கல்.

இவையனைத்தையும் சேர்த்து நம்பிக்கையை இவர்களுக்குக் கொடுத்தால் மன வலிமையைக்கூட்டிப் பூட்டும் ஆளுமையை ஏற்படுத்தலாம். பயமும் சந்தேகமும் நம்பிக்கையைப் பாதிக்கின்றன. தன்னம்பிக்கையுடையவர்களைச் சுற்றி அந்த நம்பிக்கையைத் தமதாக்கிக் கொள்ள ஒரு கூட்டமே இருக்கும். புத்திசாலித்தனம், திறமை ஆகியவற்றைவிட, விடாமுயற்சி அதிக முக்கியமானது. தற்காலிக சறுக்கல்களைத் தோல்வி என்று எடுக்காது ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் சரியாகப் பயன்படுத்தித் தம் வாழ்க்கைக்கான பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்கும் போது ஆளுமை அர்த்தம் பெறுகின்றது. இதற்கு சுயமதிப்பீடும், சுயபிரதிமையும் முக்கியம் பெறுகின்றன.

## சுயமதிப்பீடும் சுயபிரதிமையும்

நம்மை நாம் மதிப்பீடு செய்வது சுய மதிப்பீடு; நம்மை நாம் எப்படி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் சுய பிரதிமை. ஒவ்வொருவரும் சுயபிரதிமையை பின்வரும் இரு மூலங்களில் இருந்து பெற்றுத் தம் ஆளுமையை விருத்தியாக்கிக் கொள்கின்றார்கள்.

* பிறர் அவரைப்பற்றிச் சொல்வது.
* அவரவர் தத்தமது திறமைகள் - திறன்கள் பற்றி நினைத்துக் கொண்டிருப்பது.

ஒருவர் அனுபவிக்கும் ஒவ்வொரு நிகழ்வும் தான் எப்படிப்பட்டவர் என்ற சுயபிரதிமை ஏற்படச் சந்தர்ப்பமாகின்றது. ஆளுமையின் விருத்திக்கும் வெற்றிக்கும் மையமாக அமைவது யதார்த்தமான சுய பிரதிமையே ஆகும். ஒருவருடைய சுய பிரதிமை சரியான தளத்தில் அமைந்திருக்க வேண்டும். குறைகளை ஏற்று அதே சமயம் நிறைகளை எவ்வளவுக்கு உயர்த்த முடியுமோ அவ்வளவுக்குஉயர்ந்துநிறைவு காண்பதாக அது இருக்க வேண்டும்.

இதனை அன்றே 'நட்சத்திரத்தைத் தொடும் அளவுக்கு உயர வேண்டும் தான் என்றாலும் கால்கள் நிலத்தில் உறுதியாகப் பதிந்திருக்க வேண்டும்'' எனக் கூறியுள்ளார். எமது எண்ணங்கள் எதிர்மறையானவையாகும் போது பயன்களும் எதிர்மறையாகவே அமையும். எண்ணங்கள் ஆக்கபூர்வமானவையாக அமையும் போது மேலும் மேலும் ஆளுமை விருத்தி [illegible] சூழ் நிலைகள் ஏற்படும். எதிர் மறையானவை ஆக்கபூர்வமான வற்றைவிட அதிகமாக இருக்குமேயானால் நம் சுயபிரதிமை எதிர்மறையானதாகிப் போய்விடும். சுயபிரதிமை என்று வரும்போது பலர் அபாயக் கட்டத்தில் தான் இருக்கின்றார்கள். இந்தக் கட்டுரையை நீங்கள் வாசிக்கும் போது இதை உணர்ந்து உங்களை சீரமைக்க நேரம் வந்து விட்டதாக செயலில் ஈடுபடுங்கள். சுயபிரதிமை மனிதர்களுக்கு ஒரு கவசம் போன்றது. வாழ்க்கைப் பயணத்தில் தவிர்க்க முடியாத இடியும் அடியும் படும்போது நம்மை ஒரு கவசமாக இருந்து காப்பது நம்மைப் பற்றி நாமே வரைந்து வைத்திருக்கும் இந்த 'சுயபிரதிமை' என்ற ஓவியம்தான்.

சிறந்த ஆக்கபூர்வமான ஆளுமைக் கண்ணோட்டமுடைய சுய பிரதிமையாளர்கள் எதையும் சற்று வித்தியாசமாகவே பார்க்கின்றார்கள். செய்கின்றார்கள். தம்மைப் பற்றிய உயர்வான கணிப்பைச் சரி என்று காட்டி அதற்கு மேலும் வலுவூட்டுவதாகவே அவர்களுடைய செயல்கள் இருக்கின்றன. சாதனைகளையும் வெற்றிகளையும் அவர்கள் துல்லியமாக நினைவில் வைத்திருக்கிறார்கள். சுயபிரதிமையூடு திரும்பிப் பார்க்கையில் வெற்றிகளே அவர்கள் கண்களுக்குத் தெரியும். தோல்விகள் இல்லை என்பதல்ல. அவற்றை அவற்றின் யதார்த்தத்தில் வைத்துவிடுகின்றார்கள்.

தோல்விகள் கற்கும் அனுபவங்களாகின்றன. கடந்த காலத்தை எப்படிப் பார்க்கின்றோம் என்பது நமது எதிர்காலத்தின் நிர்ணயிப்பாகின்றது. சுய பிரதிமையை எதிர் மறையானதிலிருந்து ஆக்கபூர்வமானதாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

வெற்றிகரமான வாழ்வுக்கும் ஆளுமை விருத்திக்கும் சுயபிரதிமை மிக அவசியம். நாம் நம்மை எப்படிப் பார்த்துக் கொள்கின்றோம் என்பதே சுயபிரதிமையாகும். அடிக்கடி எம் சுய பிரதிமை ஆரோக்கியமானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் இருக்கின்றது என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். இதற்குப் பின்வரும் ஏழு வழிகள் உதவுகின்றன.

*தன்னை ஒரு அற்புத சாதனையாளர் என்று நினைத்துப் பார்க்க ஆரம்பித்தல்.
* பிறரோடு ஒப்பிட்டுப் பார்க்காதிருத்தல் -பிறரோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது மிஞ்சுவதெல்லாம் தாழ்வு மனப்பான்மையும் பொறாமையுமாகும்.
* உற்சாகம் தரும் நேரான செய்திகளை மனதினுள் செலுத்துதல்.
* உங்கள் மதிப்பை நீங்களே நிர்ணயம் செய்து கொள்ளுங்கள். இவற்றை உங்களுக்காக மற்றவர்களைச் செய்ய விட வேண்டாம்.
*சரியான சூழலையும் பொருத்தமான சந்தர்ப்பத்தையும் உருவாக்கிக் கொள்ளல்.
* நீங்கள் செய்த சாதனைகளை அடிக்கோடிட்டு வையுங்கள்.
*ஆரோக்கியமாக உங்களோடு நீங் களே பேசிக்கொள்ளுங்கள். இவ்வாறு உறுதியுடன் பேச ஆரம்பித்தால் சுயபிரதிமை பொருத்தமாக ஏற்படும்.

இந்த வகையில் இன்றைய சமகால உளவியல் பிரயோகத்தில் மனிதர்களின் ஆளுமை விருத்திக்கான அத்திபாரமாக 'சுயபிரதிமை' என்ற எண்ணக்கரு வளர்ந்திருக்கிறது. அதனை நாம் முறையாக நம் வாழ்வின் கனவுகள் மெய்ப்படவும் சில லட்சியங்கள் நிறைவேறவும் ஆளுமைகளை விருத்தியாக்கவும் சுயபிரதிமையை முறையாக வளர்த்துக் கொள்ள வேண்டும். எமது மனம் என்பது நாம் அதற்குள் எதைச் செலுத்துகிறோமோ அவற்றின் மொத்தம்தானே. இதனை மனதில் நிறுத்திக் கொண்டால் ஆரோக்கியமான சுயபிரதிமையை நாம் அனைவரும் ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

■ பா.தனபாலன்
இணைப்பாளர், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (32)

**எண் (8) சனி ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் பலன்கள் குறித்த விவரங்கள் இவ்வாரமும் தொடர்கின்றன**

**பெயர் எண் 80**

சூட்சுமான சக்திகளை உள்ளடக்கியது. வாழ்க்கையைப் பெரிய ஆபத்துக்கள் சூழ்ந்து கொள்ளும். போட்டி பந்தயங்களில் வெற்றிகள் கிடைக்கும். பயம் நிறைந்த சூழலில் சுகமாக வாழச் செய்யும். ஆபத்துக்களால் பரிதவிப்பார்கள். ஓரளவு நன்மை செய்யும் எண்ணாகும்.

**பெயர் எண் 89**

வாழ்க்கையின் ஆரம்பம் சிரமமாக இருக்கும் மிகுந்த சுறுசுறுப்புடன் செயல்படுவார்கள். சாமர்த்தியசாலிகள். பெண்களால் பொருள் சேரும். பெண்கள் மற்றும் தன்னுடைய இனத்தவரால் பெரிதும் விரும்பப்படுவார்கள். ஆண்களுக்குப் பெண்களையும், பெண்களுக்கு ஆண்களையும் கவர்ந்திழுக்கும் சக்தியுண்டு. பேச்சிலும், செயலிலும் தீவிர வாதத்தன்மை நிறைந்திருக்கும்.

**பெயர் எண் 98**

சிறந்த அறிவாளிகள். தனது வாழ்க்கையை ஸ்திரப்படுத்த முடியாமல் தத்தளிப்பார்கள். குடும்பத்தால் தொல்லை, பல்வேறு பிரச்சினைகள், தீராத நோய்கள் வந்து சேரும். அறிவிருந்தும் பிரகாசமிருக்காது.

**சனி ஆதிக்க எழுத்துக்களின் குணாதிசயங்கள்**

F.... எதையும் சீர்தூக்கிப் பார்க்கும் குணமிருக்கும். காரியம் சாதிப்பதில் சமர்த்தர்கள். பிடிவாத குணமிருக்கும். எளிமையான வாழ்க்கையும், அமைதி மிக்க சூழ்நிலையையும் பெரிதும் விரும்புவார்கள். நிதானத்தை இழக்க மாட்டார்கள். கடவுள் பக்தி அதிகம். சோம்பல் என்பதையே அறியாதவர்கள். பிறரை வசீகரப்படுத்தும் சக்தியிருக்கும். தொழிலில் கண்ணும் கருத்துமாக இருந்து வெற்றி பெற்று பெரும் பணம் சம்பாதிப்பார்கள்.

P.... சொல்வன்மை மிக்கவர்கள். பேச்சாற்றல் மிக்கவர்கள். பணமும், புகழும் பேச்சால் கிடைக்கும். கலை காவிய புகழ் பெற்று, பணமும் சம்பாதிக்கச் செய்யும். எதிலும் தலைமைப் பதவி வகிப்பார்கள். இவர்களின் வாக்கில் காந்த சக்தியிருக்கும். சந்தர்ப்பச் சூழ்நிலைகளைச் சரியாக கணக்கிட்டு வெற்றி பெறுவார்கள்.

**பிறப்பு எண் 8 விதி எண் 1**

சனி சூரியன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் பார்ப்பதற்கு குறுகுறுப்பான தோற்றமுடையவர்கள். சிந்தனை வளமிக்கவர்கள்.கடின உழைப்பாளிகள். நல்ல பொறுப்புள்ள மனிதர்களாகத் திகழ்வார்கள். சுதந்திரமாக வாழவே ஆசைப்படுவார்கள். சுகம், துக்கம் இரண்டையும் சமமாகப் பாவிப்பார்கள். கடுமையாக உழைத்துப் போராடி வெற்றி பெறுவார்கள். இல்



வாழ்க்கையில் சோதனைகளைத் தாண்டிச் சாதனைகள் செய்வார்கள். எப்போதும் மகிழ்ச்சியாகவே இருக்க விரும்புவார்கள்.எதையும் சாதிக்கும் குணமுடையவர்கள். பெரும் பணக்காரர்கள் ஆவதே இவர்களின் லட்சியமாக இருக்கும். அதிஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிஷ்டமான வாழ்க்கை நிச்சியம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதி**

1,10,19,28,6,15,24,5,14,23

**அதிர்ஷ்ட நிறங்கள்**

மஞ்சள், வெளிர்நீலம், சந்தனம், பொன்னிறம், நீலம், வெள்ளை

**'அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

நீலக்கல், மாணிக்கம், சூரியகாந்தக்கல், இந்திர நீலம், அக்கோமரின்

**பிறப்பு எண் 8 விதி எண் 2**

சனி, சந்திரன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் இரட்டை மனமுடையவர்கள். சில நேரங்களில் தன்னம்பிக்கை இழந்து கலங்குவார்கள். 2 ம் 8ம் சேர்ந்து புத்தியை மிகவும் குழப்பிவிடும். ஒரு செயலில் இறங்கினால் அதைப் பூரணமாக முடித்தே தீருவார்கள். தீய எண்ணங்கள் இவர்களைப் பெரிதும் கவரும். திறமைக்கேற்ற பலன் கிடைக்காது. தனது சுயநலத்திற்காக எப்பேர்ப்பட்ட நடிப்பையும் நடிக்கத் தயங்க மாட்டார்கள். நிரந்தரமான நல்ல நண்பர்கள் அமைவது கடினம். மனதில் என்றும் ஒருவித வரட்டுப் பிடிவாதம் இருக்கும். எதிலும் ஆதிக்கம் செய்ய முற்படுவார்கள். எதிலும் குழப்பும் இவர்கள் மற்றவர்களைக் குழப்புவதில் கெட்டிக்காரர்கள்.

**அதிர்ஷ்ட திகதி**

5,14,23,6,15,24,1,10,19,28,7,16,25

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர்நீலம், மஞ்சள், பச்சை, வெளிர்பச்சை, வெள்ளை.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

முத்து, நீலக்கல், வைடூரியம், சந்திரகாந்தக்கல், டைகர்ஸ் ஐ, ஜேட், இந்திர நீலம், அக்கோமரின்.

**பிறப்பு எண் 8 விதி எண் 3**

சனி ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கலை உணர்வு கொண்ட தோற்றமுடையவர்கள். இளமையிலேயே பல்வேறு சோதனைகளைச் சந்தித்து எதிர்நீச்சல் போட்டு வெற்றி பெறுவார்கள். நல்ல பெயரெடுப்பார்கள். இவர்களின் குடும்ப வாழ்க்கை குழப்பங்கள் நிறைந்ததாகவே இருக்கும். தன்னைச் சார்ந்த நாட்டிற்கும், சமூகத்திற்கும் நல்லது செய்ய வேண்டுமென்று எண்ணுவார்கள். ஒளிவு மறைவு இன்றித் தனது மனதில் பட்டதைக் கூறுவார்கள். இதனால் பலரது பகையும் உருவாகும். வாழ்க்கைத் துணையைத் தொல்லை என்றே எண்ணுவார்கள்.. பணத்தைச் சிலநேரங்களில் சம்பந்தமில்லா வழிகளில் செலவழிப்பார்கள். புகழ்மிக்க வாழ்க்கையே இவர்களைப் பெரிதும் கவரும். ஆன்மீகம், இல்லறம் என்று வாழ்க்கை இருபுறமும் இழுக்கும். பிடிவாத குணமுடையவர்கள். ஏதோ ஒரு ஏக்கத்திலேயே எப்போதும் இருப்பார்கள். ஆண், பெண் இருபாலருக்கும் அடிக்கடி இடையூறுகள் வந்து நீங்கும். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சியம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதி**

3,12,21,30,1,10,19,28,5,14,23

**அதிர்ஷ்ட நிறங்கள்**


மஞ்சள், வெளிர்நீலம், ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நிறம், வெள்ளை

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

கனகபுஷ்பராகம், மஞ்சள்புஷ்பராகம், தங்க புஷ்பராகம், நீலக்கல், இந்திரநீலம், அக்கோமரின்

*(தொடரும்)*

# பாம்புக் கடி



**யாழ்.** மாவட்டத்தில் கடந்த ஒரு மாதமாக பாம்புகளின் கடிக்கு இலக்காவோரின் எண்ணிக்கை என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்து வருகிறது. யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் தினமும் குறைந்தது பத்துக்கு மேற்பட்டோர் பாம்புகளால் கடியுண்ட நிலையில் அனுமதிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

பாம்புகளால் கடியுண்டோரில் பெரும்பாலானோர் நெல்வயல்களில் இடம்பெறும் அறுவடையின் போது பாதிக்கப்படுபவர்களாகவே உள்ளனர். நெல் அறுவடையின் போதும் வெட்டப்பட்டு நிலத்தில் போடப்பட்டிருக்கும் உப்பட்டி எனப்படும் நெற் குவியல்களுக்குள்ளிருந்தும் வயல்களில் வைக்கப்பட்டுள்ள சூடுகளுக்குள்ளிருந்தும் பாம்புகள் கடித்ததாகக் கூறப்படுகிறது. உரிய பாதுகாப்பு அணிகலன்கள் எதுவும் அணியாமல் வயல்களில் வேலை செய்வதும் பாம்புகள் கடிப்பதற்கு ஏதுவாக அமைகிறது. பாம்புக்கடி அநேகமாக கால் பாதங்களிலும் கை மணிக்கட்டுப் பகுதியிலுமே இடம்பெற்றுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தினமும் பெரும் எண்ணிக்கையானோர் பாம்புகளால் கடிபடுவது தொடர்பாக வைத்தியசாலையொன்றின் வைத்திய நிபுணரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது;

பாம்புகள் ஒருபோதும் எம்மைத் தேடி வந்து கடிப்பதில்லை. மனிதர்களால் தவறுதலாக மிதிபடும் போது அல்லது மனிதர்களால் தனக்கு ஆபத்து ஏற்படப் போகிறது என நினைத்து கடிப்பதே அதிகம். அண்மைக் காலமாக பாம்புகளால் கடிபடுவோர் நெல்வயல்களில் வேலை செய்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

வயல்களில் பாம்புகள் படுத்திருப்பதை எவரும் அறிந்திருக்கமாட்டார்கள். அங்கு வேலை செய்பவர்கள் நிச்சயம் பாதுகாப்பு அணிகலன்கள் அணிந்திருக்கவேண்டும். காலுக்கு இறப்பரிலான காலுறைகளும் கைகளுக்கு கையுறைகளும் போட்டுக் கொண்டே வயல்களில் வேலை செய்ய வேண்டும்.

மேலும் நீளக்காற்சட்டை, சேலை போன்றவை கூட பாம்புக்கடியிலிருந்து பாதுகாக்கும் அணிகலன்களாகும். வயல்களில் வருடாவருடம் பாம்புகள் அதிகரிப்பு உள்ளது அனைவரும் அறிந்த விடயம். இந்த நிலையில் விவசாய திணைக்களத்தினர் அந்தந்தக் கமநல சேவைகள் நிலையத்தினர் போன்றோர் தமது எல்லைப் பரப்பில் காலபோக நெற்செய்கை காலத்தில் பாதுகாப்பு அணிகலன்களை கொள்வனவு செய்து தத்தமது பகுதி கமக்கார அமைப்புகள் ஊடாக நெற்செய்கையாளர்களுக்கு விலையாகவோ அல்லது வாடகைக்கோ வழங்க வேண்டும். அவ்வாறு செய்வதால் நிச்சயமாக அறுவடை காலத்தில் இடம்பெறும் பாம்புக் கடிகளைக் குறைக்கமுடியும். பாம்புக்கடிக்கு இலக்கானோரில் பெரும்பான்மையானோர் புடையன் பாம்புகளினால் கடியுண்டதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்த நிலையில் பாம்பினால் கடிபடுவோரை கை வைத்தியமோ அல்லது பார்வை பார்க்கும் இடங்களுக்கு கொண்டு செல்லாமல் அருகில் உள்ள அரச வைத்திய சாலைகளுக்கு கொண்டு செல்வதை அனைவரும் உறுதி செய்யவேண்டும்.

பாம்பு கடித்தவரை பய முறுத்தும் வார்த்தைகளைப் பிரயோகிக்காமல் முடிந்தால் பாம்பு கடித்த இடத்தை சவர்க்காரத்தால் கழுவி, அந்தப் பகுதியை ஆட்டாமல் அசைக்காமல் வைத்திருக்க வேண்டும். உயிராபத்து ஏற்படக்கூடிய மருந்துகள் எதுவும் கொடுக்காமல் குடிப்பதற்கு சுட்டாறிய தண்ணீரைத் தவிர இளநீரோ பழச்சாறோ எதுவும் கொடுக்காமல் வைத்தியசாலைக்கு கொண்டு வரப் படல் வேண்டும். பாம்பு கடித்தவுடன் உடனடியாகச் செயற்பட்டால் ஒருவரின் உயிராபத்தைத் தடுக்கமுடியும். நெல் அறுவடை காலத்தில் ஏற்படும் இந்த அனர்த்தங்களைத் தடுக்க நாட்டில் உள்ள பொது அமைப்புகள் கூட முன்வரலாம்

அவை தமது பகுதியில் உள்ள வைத்தியசாலைகளில் உள்ள வைத்திய நிபுணரை அணுகி என்னென்ன பாதுகாப்பு அணிகலன் தேவை என்பதை விசாரித்து அவற்றைக் கொள்வனவு செய்து நெல் அறுவடை மற்றும் சூடு மிதிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் ஏழை மக்களுக்கு வழங்கி அவர்களுக்கு உயிர்ப் பாதுகாப்பு வழங்க முடியும்.- என்றார்.

சுகாதாரத் திணைக்களத்தினர் பாம்புக்கடி அதிகமாக உள்ள பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு பாம்புக்கடி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்த முன்வரவேண்டும். பாம்புக்கடி சம்பந்தமான போதிய அக்கறை இல்லாததால் சாவகச்சேரியில் அண்மையில் ஒரு உயிர் அநியாயமாக பலியானது குறித்துக் கவலை தெரிவித்தார்.

தென்னவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அறிவுரைகளை ஆராய்ந்து செயல்படுத்த வேண்டும்

ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஒரு கொடிய விஷமுள்ள பாம்பு வாழ்ந்து வந்தது. ஊர் மக்கள் யாராவது அதன் புற்றின் பக்கம் போனால் சீறி வந்து கொத்தி விடும். பாம்புப் புற்று இருந்த பாதை அந்த ஊருக்கும் பக்கத்து சந்தைக்கும் குறுக்கு வழி. பாம்புக்கு பயந்தே ஊர் மக்கள் தொலைவு சுற்றி அந்த சந்தைக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள். வேறு வழியில்லாததால் சலிப்புடனேயே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு யோகி வந்தார். அவர் மிருகங்களிடம் பேசக் கூடிய வரம் பெற்றவர். ஊர் மக்கள் தங்கள் குறையை அவரிடம் முறையிட்டனர். அவர் பாம்பிடம் பேசி அதற்கு ஊர் மக்களை கடிக்கக் கூடாது என்று கட்டளை இட்டு விட்டு பக்கத்து ஊருக்குச் சென்று விட்டார். பாம்பும் அவர் கட்டளைக்குக் கட்டுப் பட்டு நடந்தது.

ஆனால் ஊர் மக்கள் சும்மாயில்லை. வழியே போகும் சிறுவனுக்குக் கூட பாம்பிடம் இருந்த பயம் போய் விட்டது. பாம்பைக் கண்டால் அதைக் கல்லால் அடிப்பது, துன்புறுத்துவது, விரட்டியடிப்பது என்று அதன் வாழ்க்கையை நிம்மதியில்லாமல் செய்து கொண்டிருந்தனர். உடம்பில் பல காயங்களுடன் குற்றுயிரும் குலையுயிருமாகி விட்டது பாம்பு.

யோகி ஒரு நாள் பாம்புப் புற்று இருந்த வழியாக ஊருக்குள் திரும்ப வரும் போது பாம்பின் பரிதாபமான நிலையைக் கண்டு அதனை விசாரித்தார். பாம்பும் நடந்த கதையையெல்லாம் கூறி அழுதது.



யோகி பாம்பைப் பார்த்து ''அட முட்டாள் பாம்பே! உன்னை மக்களைக் கடிக்கவேண்டாம் என்றுதானே கூறிச் சென்றேன். பக்கத்தில் வருபவனைப் பார்த்து சீறாதே என்று ஒரு போதும் சொல்லவில்லையே'' என்று கேட்டார். இதற்குப் பின் பாம்பும் பிழைத்துக் கொண்டது.

நிலா

# கழுகு





கழுகு ஒரு வலுவான பெரிய பறவைஆகும். இந்தப் பறவைகளுக்கு பெரிய கண்களும் கூரிய நுனியுடைய வளைந்த அலகும், வலுவான நகங்களைக் கொண்ட கால்களும், அகண்டு நீண்ட இறக்கைகளும் உள்ளன. இவைகளின் கண் பார்வை மிகவும் கூர்மையானது. மிக உயரத்திலே பறந்தாலும், தரையில் நகரும் எலி, கோழிக் குஞ்சு போன்ற சிறு விலங்குகளைக் கண்டால், சடார் என்று கீழே பாய்ந்து தம் வல்லுகிரால் கவ்விக் கொண்டு போய் கொன்று உண்ணும். சிறு விலங்குகளை இவ்வாறு கொன்று தின்பதால், இப் பறவைகளைக் கொன்றுண்ணிப் பறவைகள் என்றும் சொல்வதுண்டு. நீண்ட இறக்கைகளை விரித்து கழுகு பறக்கத் தொடங்கும்.

கழுகுகளில் பற்பல வகைகள் உண்டு. இவ்வினத்தைச் சேர்ந்த பறவைகளைத் தமிழில் எழால், கழுகு, கங்கு, கங்கம், கூளி, பருந்து, பணவை, பாறு, பூகம், வல்லூறு என்று அழைக்கப்படுகின்றன.

கழுகு இனங்கள் பெரும்பாலும் பழைய உலகம் என்று சொல்லப் படும் ஆசியா-ஆபிரிக்க- ஐரோப்பாவில்தான் அதிகம் காணப்படுகின்றன. அமெரிக்கக் கண்டத்தில் பெரும் கழுகுகள் மிகவும் குறைவே. வட அமெரிக்காவில் இரண்டே இரண்டு இனங்கள்தான் உண்டு. அவை வெண்டலைக் கழுகும், பொன்னாங் கழுகும் ஆகும். கழுகுகளில் பெட்டைக் கழுகு சேவற்கழுகை விட சற்று பெரிதாக இருக்கும்.

விதுசன்

## தென்னாசியா நாடுகளும்

### அவற்றின் தலைநகரங்களும்

| | |
|---|---|
| இந்தியா | புதுடில்லி |
| பங்களாதேஷ் | டாக்கா |
| இலங்கை | கொழும்பு |
| பாகிஸ்தான் | இஸ்லாமாபாத் |
| பூட்டான் | திம்பு |
| மாலைதீவு | மாலே |
| நேபாளம் | காத்மண்டு |
| ஆப்கானிஸ்தான் | காபூல் |

ரா.உஷாந்தினி, தரம்-8, புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி.

# பூனைக்குட்டி

எங்கள் வீட்டு பூனைக்குட்டி

தங்கமான பூனைக்குட்டி

அங்கும் இங்கும் ஓடும்

ஆடிப் பாடி மகிழும்

தங்கை தூக்கிக் கொஞ்சுவாள்

வெள்ளி போல வெள்ளைப் பூனை

கொள்ளையான அழகுப் பூனை

செ.ரிஷிதரன்
தரம்-7, யா/ மத்திய கல்லூரி

## பொது அறிவு

இதயத்தை மூடியுள்ள உறையின் பெயர் என்ன?

பெரிகார்டியம்

மனிதனால் முதல் முதலில் கண்டு பிடிக்கப்பட்ட உலோகம்?

தாமிரம்

உப்பினால் ஆன நகரம் எங்குள்ளது?

போலந்து

கறுப்புக் கோயில் எங்கு கட்டப்பட்டது?

கோனார்க்

செயற்கைக் கண்கள் அதிகம் தயாரிக்கும் நாடு எது?

ரஷ்யா

பா.சுதாங்கன்,
தரம்-4கே, புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை.




நவாலி சென். பீற்றர்ஸ் றோ.க.த.க.பாடசாலையில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியின் போது இடைவேளை நிகழ்வில் மாணவி ஒருவர் 'பெருங்குடி மக்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்' என்னும் தலைப்பில் காட்சி ஒன்றை நிகழ்த்தினார். (100)

# அறிவின் பயன்

கண்ணால் கண்டு அறிகிறோம், காதால் கேட்டு அறிகிறோம், மூக்கால் முகர்ந்து அறிகிறோம், நாவால் சுவைத்து அறிகிறோம், உடலால் உற்று அல்லது தொட்டு அறிகிறோம், இவை ஐந்தறிவு எனப்படும். இவற்றின் விஞ்சிய ஓர் அறிவே ஆறாம் அறிவு எனப்படும் பகுத்தறிவாகும். அதை மன அறிவு என்றும் கூறுவர். மாந்தர் ஆறாம் அறிவாம் பகுத்தறிவு உடையவர் என்பது தனிப் பெரும் சிறப்பாகும். அதனால் தான் ''அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது'' என்பர்.

நல்லது கெட்டது, இனியது இன்னாதது, செய்யத்தக்கது தகாதது என்பவற்றைப் பகுத்தறிய வேண்டும். அவ்வறிவு பெறாதவர் மனிதராக இருந்தாலும் மனிதராகக் கருதப்பெறார். அவரை அறிவுக் குறையராக இகழ்வர்.

வி.கார்த்திகா,
ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்.

# வானொலி

வானொலி கிராமப்புற மக்களுக்கு இன்றியமையாத ஒன்றாகிப்போனது. ஒவ்வொரு உள்ளங்களுக்கும் ஆறுதல் அளித்துக்கொண்டு இருக்கின்றது.

எல்லா வீடுகளிலும் இசையை வாரி வழங்கிக் கொண்டு இருக்கிறது.

அறிவு வளர்ச்சிக்கும் பொழுது போக்குக்கும் பெரிதும் உதவியாக உள்ள வானொலியைக் கண்டுபிடித்தவர் மார்க்கோனி எனும் விஞ்ஞானியாவார்.

இதனால் பல நாட்டு நிலைமைகளை செய்திகள் என்ற தலைப்பில் கேட்டு அறிந்து கொள்ள முடியும்.

சிறுகதைகள், நாடகம், கவிதைகள், இசைகள் என கேட்டு மகிழ்வடையலாம். ஒவ்வொரு நாட்டு மொழிகளிலும் ஒவ்வொரு விதமாக இந்த வானொலி உலா வருகின்றது.

இதில் கல்வி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை அதிகமாக சிறுவர்கள் உள்வாங்கிப் பயன் அடைவது அவசியம்



பொது அறிவு கொண்ட நிகழ்ச்சிகள் வழங்கப்படும் போது நமக்குத் தெரியாத விடயங்களை கற்றுக்கொள்வது அவசியம்.

வானொலியை சிறுவர் முதல் வயோதிபர் வரை கேட்டு மகிழ்வடைகின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் வானொலி முக்கிய ஒன்றாக இருக்கின்றது.

சுபோ,
புலோலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோப்பாக்க வாருங்கள்

எங்கள் நிலத்தின் மங்காச் செல்வம்
பொங்கி வழியும் எங்கள் வளம்
சங்ககால சரிதம் பகரும் தங்கம்
பனையின் பாகம் முழுதும் அமுதம்

பாதுகாத்து தந்து நிதம் பாதுகாத்து
பாதியில் எரிந்தும் முறிந்தும் சரிந்தும்
தன்னுயிர் ஈந்து கருகி அழிந்து
மேதினியில் வாழ்வளித்த மேன்மைமிகு தாலம்

போதுமினி போர்! புதுவாழ்வு தொடங்கு!
பாதுகாப்பும், படையும், வேண்டாம் மீண்டும்
மீளக்குடியமர்ந்து மீளவும் இழந்தவற்றை
ஆளவழி செய்வோம் அனைவரும் திரண்டு!

சூழ உள்ள காணிகளில் சுற்றிவர பத்தடிக்கு
தாலவிதை ஒன்றொன்றாய் தளிர்க்க வழியூட்டி
பாலம் அமைப்போம் பசுமைப் புரட்சிக்கு
பனைப் பயனை பாரறிய பகருவோம் வாரீர்

ஊர்கூடி நட்ட பனை, இட்டமுடன் வளர்வதற்கு
பாடுபட்டு நாம் உழைப்போம் முயற்சியுடன்
தேடும் பெருஞ்செல்வம் இதுதான் எமக்கென்று
ஓங்கிவளரும் பனந்தோப்பை உருவாக்க வாருங்கள்.....



த.பவானி,
கரவைகிழக்கு.

# உயிரினங்களுக்கு சாவு மணி அடிக்க வல்ல நச்சுத் தாவரங்கள்



அருணா

நாம் எதேச்சையாக உலங்கு வானூர்தியில் (Helicopter ) பயணிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் ஜன்னல் கண்ணாடி ஊடாக கீழே பார்த்தோமானால் சமுத்திரம் நீலமாகவும் தரை பச்சையாகவும் தென்படுவதை உணரலாம் . நீல வானத்தைப் பிரதிபலிப்பதினாலேயே கடல் நீலமாகத் தென்படுகின்றது. அதேவேளை நிலமெங்கும் பச்சைக் கம்பளம் விரித்தாற் போல் பரந்து காணப்படுவது தாவரங்களேயாகும். இவற்றை புல் , பூண்டு , மரம் ,செடி கொடி விருட்ஷம் என வகைப்படுத்தலாம்.

தாவரங்களின் இலைகளில் பச்சயம் (Chlorophyll) நிறைந் திருப்பதே இதற்கு முக்கிய காரணியாகும் என்பது நிதர்சனம்.

தாவரங்கள் உலக உயிரினங்கள் அனைத்துக்குமே பெரும் நன்மையளிக்கின்றமை கண்கூடு. விரல்விட்டு எண்ணக்கூடிய தாவரங்களே மனிதனுக்கும் கால்நடைகளுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் தீங்கு விளைவிக்கின்றன எனவும் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் மானிடர்க்கு கேடுவிளை விக்கும் தன்மை வாய்ந்த சில நச்சுப் பொருள் (Poison material ) பரிணமித்திருப்பதனால் இவற்றை நச்சுத்தாவரங்கள் என அழைக்கின்றோம் . இந்த நச்சு தாவரங்களினால் பூச்சியினங்கள் அவ்வப்போது பாதிப்புக்குள்ளாகின்றமை வெள்ளிடைமலை .பூச்சி யினங்களைப் பொறுத்தவரை அவற்றுக்கு பேராபத்தை விளைவிப் பவை புலால் உண்ணும் தாவரங்களேயாகும். இவைகள் விரித்த வலையில் சிக்கி எண்ணற்ற பூச்சிகள் உயிரை மாய்த்துக் கொள்கின் றன. சில பூக்ககள் பசைத் தன்மை பொருந்திய திரவத்தை சுரக்கச் செய்து (Secrete) லாபகரமாக அவற்றைக் கொன்று உணவாக்கிக் கொள்கின்றன.

எனவே நாம் நச்சுத்தாவரங்களில் தென்படுகின்ற நச்சின் அளவு, உண்டாக்குகின்ற தீமை, ஏற்படுகின்ற நோய் என்பவற்றை மனிதன் எவ்வாறு எதிர்கொள்கின்றான் என்பது பற்றி விரிவாக ஆராய்வது இங்கு உசிதமாகும். இதில் விலங்குகள் பூச்சியினங்கள் (Insects) என்பவற்றையும் உள்ளடக்கலாம் .

தாவரங்களில் சில அவை வளரும் இடம், காலம் இவற்றுக்கு அமைவாக தம் நச்சுத்தன்மையில் மாறுபடுகின்றன . இவற்றுள் உள்ள நச்சுப்பொருள்களின் தன்மைக்கேற்ப இவற்றின் தீமை தரும் விளைவுகளும் உண்டாகின்றன எனலாம்.

பொதுவாக நச்சுத்தாவரங்கள் இரண்டு வகைப்படுகின்றன. முதல் வகை தொட்டால் ஒட்டிக்கொள்ளும். இத்தகைய செடிகளைத் தொட்டாலே தொட்ட இடமெல்லாம் அரிப்பெடுக்கும். உடலில் பட்ட இடமெல்லாம் வீக்கம் ஏற்பட்டு சிறுசிறு கொப் பளங்கள் உண்டாகி அதிக வலியைக் கொடுக்கும்.



(தொடரும்)

“ தாவரங்களில் சில அவை வளரும் இடம், காலம் இவற்றுக்கு அமைவாக தம் நச்சுத்தன்மையில் மாறுபடுகின்றன

## கற்றுக் கொண்ட பாடங்கள்

# அவனருள் இன்றி அவனடி தாழ்தல் அரிது

மணி

வட பாரதத்தில் டில்லியில் மட்டுமே கலியுக வரதனாம் முருகப் பெருமானின் ஆலயமொன்றுக்கு பயணம் செய்து செந்திலாண்டவனை உளமாரத் தரிசிக்கும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. இந்த ஆலயத்தின் நித்திய நைமித்தியக் கடமைகளைத் தமிழகத்தைச் சேர்ந்த அந்தண சிவாச்சாரியார்களே நிறைவேற்றி வருகின்றார்கள்.

தந்தையிடமிருந்து தனக்கு மாம்பழம் கிடைக்காததனால் கோபம் கொண்டு முருகப்பெருமான் தென்பாரதம் நோக்கி வந்ததனாலேயே வட பாரத்தில் அவருக்கு ஆலயங்கள் மிகவும் குறைவாக இருப்பதாக அங்குள்ளோர் எமக்குக் கூறினார்கள். இது எவ்வளவு தூரம் உண்மையோ நாமறியோம்.

டில்லியில் செங்கோட்டை, இந்திய நுழைவாயில் (INDIA GATE), நாடாளுமன்றம், பிர்லா ஆலயம், குதுப்மினர் மந்திர் (QUTAB MINAR), ராஷ்ரபதிபவன், தாமரைக்கோவில் (LOTUS TEMPLE) கியூமாயுன் ரொம் (HUMAYUN TOMB), காந்தி நினைவு மண்டபம் ஆகியவை இந்திரா ஞாபகார்த்த மண்டபம் ஆகியவை நாம் பார்வையிட்ட இடங்களுக்குள் சிலவாகும்.

இவற்றுள் அடிமையாக விற்கப்பட்டு பின்னர் அரசனாக உயர்ந்தவரான குதுப்மினார் அவர்களால் கட்டப்பட்ட கட்டடக் கலைக்கு ஒரு எடுத்துக்காட்டாக முழுவதுமே செங்கற்களினால் உருவாக்கப்பட்ட 239 அடிகள் உயரமானதும் ஐந்து மாடிகளைக் கொண்டதும், 379 படிக்கட்டுக்களை உடையதுமான இந்தக் கோபுரம் நாம் பார்வையிட்டவைகளுள் மிகவும் உயரமானதாகும். இதனை உள்ளே சென்று பார்வையிடுவதற்கு எமக்கு அனுமதி கிடைக்கவில்லை,

பிர்லா ஆலயம் 1938 இல் பல்தேவ் தாஸ் பிர்லா என்பவரால் கட்டப்பட்டதாகக் கூறினார்கள், இங்கு சிவன், லட்சுமி, நாராயணர், விநாயகர், துர்க்கை, கண்ணாபிரான் ஆகியோரை நாம் தரிசித்து வணங்கினோம். பாரதக் கதைகள் சித்திரங்களாக வரையப்பட்டிருந்தன. மற்றும் ஹரேராமா ஹரே கிருஷ்ண கோவில், கௌரி சங்கர்கோவில் , கீதாமந்திர், யமுனை ஆற்றங்கரையில் பழைய பாண்டவர் கோட்டைக்கு அருகே அமைந்துள்ள கண்ணபிரான், ருக்மணி கோவில், ஆகியவற்றையும் தரிசித்த பின்னர் எமது ஒரு மாத கால இமாலய யாத்திரையை நிறைவு செய்து அங்கு எம்மால் சேகரிக்கப்பட்ட இருபத்தியொன்றுக்கும் மேற்பட்ட புண்ணிய தீர்த்தங்களையும் இராமேஸ்வரம் இராமநாதசுவாமிக்கு ஆனி மாத அமாவாசைத் தினத்தில் அபிஷேகம் செய்யும் நோக்கத்துடனும் தென் பாரதத்திலுள்ள சில ஆலயங்களைத் தரிசித்து வணங்க வேண்டுமென்ற ஆவலுடனும் 28.06.2011 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 6.40 மணிக்கு இல 12616 கொண்ட டெல்லி சென்னை ரயில் மூலம் சென்னையை நோக்கிப் புறப்பட்டோம். 30.06.2011 வியாழக் கிழமை காலை 6.25 மணிக்கு சென்னையை அடைந்து அங்கிருந்து எம்மால் முன்னதாகவே ஒழுங்கு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் மூலம் இராமேஸ்வரம் நோக்கிப் புறப்பட்டு இரவு 10.30 மணிக்கு இராமேஸ்வரம் சென்றடைந்து விடுதியில் தங்கினோம்.

மறுநாள் அமாவாசை விரதம். நானும் அன்பர் குமாரசிங்கமும் அதிகாலையிலேயே சங்கல்பம் செய்து சேது, தீர்த்தத்தில் நீராடிய பின்னர் இராமேஸ்வரத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களான மகாலட்சுமி தீர்த்தம், சாவித்திரி தீர்த்தம் நள தீர்த்தம், நீல தீர்த்தம், காவயா தீர்த்தம், கவாஷ தீர்த்தம், கந்தமாதன தீர்த்தம் பிரமஹார்த்தி விமோசன தீர்த்தம், சக்கரத் தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், சங்க தீர்த்தம்,



கங்கா தீர்த்தம், யமுனா தீர்த்தம் காஜா தீர்த்தம், சிவதீர்த்தம், சத்தியாமிர்த தீர்த்தம், சர்வ தீர்த்தம், கோடி தீர்த்தம் ஆகிய 22 தீர்த்தங்களில் நீராடிய பின்னர், இராமநாத சுவாமியைத் தரிசனம் செய்ததுடன், எம்மால் இமாலயப் பகுதியிலிருந்து சேகரித்து எடுத்து வரப்பட்ட நேபாளம் புத் நீல் கண்ட தீர்த்தம், பாக்மதி நதி தீர்த்தம், திரிசூலி ராப்த்தி, பாஹ்மதி நாராயணி ஆகிய ஏழு நாத்தில் சேகரிக்கப்பட்ட காளி கண்டகி நதி பல்குனி நதி தீர்த்தம் (கயா) திருவேணி சங் ஹரித்துவார் கங்கா ஜலம், மனைவி கங்கை தீர் (நைமி சாரண்யம்) பாகீரதி கங்கை தீர்த்தம் நதி தீர்த்தம் (யமுனோத்ததரி) மன்னி கங்கா ஜமுனா தீர்த்தம் (தாஜ்மஹால்) சரயுநதி தீ நாரயாணி தீர்த்தம் ஆகியவற்றை எமது உ சுவாமிக்கு அபிஷேகம் நிறை வேற்றி வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ தொல்புரம் சி.கதிர்காமநாதன்

"ஐயா, மாங்காய் குடுக்குறதோ?" வெளியே குரல் கேட்டது. இரண்டு துவிச்சக்கரவண்டியில் உருளைக் கிழங்குப் பெட்டிகளுடன் நின்றிருந்தார்கள். நேரமோ காலை 10 மணிதான். எனக்கு பல விடயங்களில் உடனே பதில் சொல்லிப் பழக்கமில்லை. சற்று யோசிக்க வேண்டியிருக்கும். வந்தவர்கள் வீதிக்கு அருகே காய்த்துக் குலுங்கிக் கொண்டிருந்த "அம்பலவி" மரத்தைக் கண்டு விட்டார்கள். காய்த்த மரத்தை மூடி மறைத்து வைக்க முடியுமா? சரி அவர்களை உள்ளே அனுமதிப்பதா? தடைசெய்வதா? முன்பின் தெரியாதவர்கள். காலம் இப்போது எப்படி இருக்கிறது? யாரை நம்புவது?

மாங்காய் "பிடுங்கும்" சாக்கில் வளவை நோட்டமிடலாம், எமது பாதுகாப்பு வலயக் குறைபாடுகளை கண்டு பிடிக்கலாம், பெறுமதியான பொருள்களில் "கண்" வைக்கலாம்.மறுபடி உட்புகுந்து பொருள்களைக் களவாட எத்தனிக்கலாம். வீடுகளில் களவுகளுக்கு வேவு பார்த்து, திட்டமிட்ட பின்னர் தான் நடக்கின்றன. ஏற்கனவே வீட்டில் திருட்டுப்போன அனுபவம் வேறு. எழுத்தாளர் வீட்டில் திருட்டு என செய்தி வெளியாகியது. இலக்கிய விருது கிடைத்தமை போன்ற பெருமை. யோசி, யோசி... மாங்காய்களைப் பறிக்க விட்டால் உடன் வேலை முடிந்துவிடும். ஒரு விலைக்குப் பேசி முடித்த பிறகு கொஞ்ச மாங்காய்களை எமது தேவைக்கு வாங்கிக் கொள்ளலாம். விடயம் முடிந்துவிடும். அலுப்பில்லை.

"ஏனப்பா யோசிக்கிறியள் பிடுங்க விடுங்கோவன். நாங்களும் இப்போதைக்கு பிடுங்க மாட்டம். அருமந்த பழங்களை அணில் அரிச்சுக் கொட்டிப்போடும் குடுங்கோ."

"ஐயா மாங்காய் குடுக்கிறதோ?, மறுபடியும் குரல் கொடுத்தார்கள். உள்ளே வரச் சொன்னேன். அம்பலவி மாமரத்தை இருவரும் "கிடா ஆட்டைப் பார்ப்பது போல்" மேலும் கீழுமாய்ப் பார்த்தார்கள். ஒரு வழியாக விலையைப் பேசி முடித்து, அவர்கள் மாங்காய் பறிக்க ஆயத்தம் செய்ய நான் வெளியேறினேன். சற்று நேரத்தில் இருவரும் ஓடி வந்தார்கள். ஒருவர் தரையில் உட்கார்ந்து தலையைக் கைகளினால் அழுத்தியபடி கத்தினார்.

"என்ன நடந்தது? குளவி கொட்டிப் போட்டுது" எனக்கு ஆச்சரியமாக இருந்தது. மா மரத்தில் குளவிக் கூடா?" பெரிய குளவி தான் பனை மரத்தில் கட்டும். அந்தக் குளவி தான் சரி நான் புளி கொண்டு வாறன், உடனே புளி கொண்டு வந்து கொடுத்தேன் . புளி பூசியும் அவர் வேதனையில் இருந்தார். "ஐயா வாங்கோ கூட்டை காட்டுறன்" இந்த மரத்துக்கு எத்தனை தடவை வந்திருப்பேன், ஒரு தடவையேனும் என் கண்ணில் தென்பட வில்லையே. வந்தவர் மரக்கொப்புகளுக்கிடையில் மறைந்து இருந்த கூட்டை காட்டினார். மலைப்பாக இருந்தது.

கலைந்த குளவி தன் கூட்டை சுற்றிக் கொண்டிருந்தது. கால்ப்பந்து, அளவை விட குறைவாக இருந்தது. "ஐயா நல்ல காலம் இப்ப பார்த்தோம். விட்டிருந்தால் பெருத்து இருக்கும்" நான் அவர்கள் மேல் கவலை கொண்டேன். பிழைப்புக்கு வந்து, உயிர் ஆபத்தைத் தேடிக் கொண்டார்கள். "இந்தக் குளவி இனம் வழமையாக பனை மர ஓலையில் தானே கூடு கட்டும், ஏன் இப்போது மாமரத்துக்கு மாறியது? விளங்கவில்லை. கொட்டு வாங்கியவர் வேதனையில் இருந்தபடியால், அவரை மற்றவர் வைத்தியசாலைக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டார்.

மறுபடியும் நான் யோசனையில் ஆழ்ந்தேன். "பனை மரங்களில் இந்த கூடுகளை, கூடுதலாகப் பார்த்து இருக்கிறோம், காற்று வீசும் காலத்தில் "கூடு கட்டிய ஓலைப் பாரத்தினால் கீழே விழுந்து, குளவிகள் கலைந்து, வழியில் போவோரை 'கொட்டிக் கலைக்கும். ஆனால் மாமரத்தில் இந்த கூட்டைக் கண்டது பல எண்ணங்களைத் தோற்றுவிக்கிறது? சட்டென பழைய ஞாபகம் வந்தது. எமக்குச் சொந்த வீடு கட்டிக் கொண்டிருந்த காலத்தில், வேப்ப மரத்தில் குளவிக் கூட்டைக் கண்டு சொன்னார்கள். அது எனக்கு முதலாவது ஆச்சரியம் இதே அளவில் தான் அந்தக் கூடு இருந்தது. முன்பு வேம்பு, இப்போது மாமரம். அது சரி குளவிக்கு பனைமரத்தில் தான் கூடு கட்ட வேணுமென்டு எழுதியா வைத்துள்ளார்கள்? அப்படி சட்டம் உள்ளதா?

நாங்கள் பார்த்த காலத்தில் அவைகள் பனை மரத்தில் கூடு கட்டி இருக்கலாம். இப்போது தனக்கு வசதியாக இடங்களை மாற்றி இருக்கலாம். ஏன் அதற்கு தலையை போட்டு உடைப்பான் தலைமுறை மாறிக் கொண்டு வருகிறது. குளவிகளின் "இளைய சந்ததி புதிய மாற்றத்தை கொண்டு வந்து இருக்கலாம். "ஏனம்மா காலம் முழுவதும் நாங்கள் உயரத்திலே வீடு கட்டி வாழவேண்டும்? மேலே இருந்து என்ன பயன்? எவ்வளவு காலம் வானத்தை பார்த்துக் கொண்டிருப்பது? எப்போ கீழே விழுவோம் என்ற பயம் வேறு. இந்த உயர்ந்த மரங்களை நம்பி நாம் எத்தனை காலம் வாழ்வது. இந்த மர இனத்தை மனிதர்கள் அழித்துக் கொண்டு வருகிறார்கள். எனவே நாங்கள் எமது இனம் காப்பாற்றப்பட வேண்டுமானால் நம் இடங்களை இப்போதே மாற்றியமைத்துக் கொண்டு வாழப்பழகிக் கொள்ள வேண்டும்"

குளவி மட்டுமா? எமக்குத் தெரிந்தவகையில் மாமரங்களில் தான் "குருவிச்சையை அதிகமாக கண்டுள்ளோம்" ஆனால் இப்போது பூவரசு, வேப்பில் கூட குருவிச்சை சந்தோஷமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறது. எல்லாமே தமது விதிமுறைகளை மாற்றியமைத்துக் கொண்டுவிட்டன. வாழ்க்கைச் சக்கரத்தில் இடர்கள் வரலாம், இடம் பெயர்வுகள் வரலாம், சூழல் மாறலாம், நாம் எல்லாச் சூழலிலும் வாழப் பழகிக் கொண்டால் பிரச்சினை இல்லை. இயற்கையானது கற்றுக்கொண்டு விட்டது. தனது இனத்தைக் காப்பாற்ற வேண்டும். அதற்காக மாற்று வழிமுறைகளைத் தேடிக் கொள்கின்றது. "முள் முருங்கை இனத்துக்கு என்ன நடந்தது? வேலிகளில் காவலாக இருந்த மரங்கள் எங்கே? இலைகளில் ஏற்பட்ட நோயால் அவை அழிவுக்குச் சென்றுவிட்டன? அந்த நோயைக் குணமாக்க யாராவது மருந்தை கண்டுபிடித்தார்களா? கல்யாண வீடுகளில் கன்னிக்காலில் இப்போது முள்முருங்கைக்குப் பதிலாக கல்யாண முருங்கை கம்பீரமாக நிற்கின்றது? என்ன செய்வது? முள்முருங்கைதான் தேவை எண்டால்.... கல்யாணங்கள் என்னாவது? மாற்று வழிகள் எப்படி உருவானது? நாளை "கல்யாண முருங்கை இனம் அழிந்தால் எல்லாமே நடந்து கொண்டு தான் இருக்கும். பூமி தொடர்ந்தும் சுற்றிக் கொண்டுதான் இருக்கும்.

# ஸ்நான முறைமைகள் 3

■ அருணா தருமலிங்கம், வந்தாறுமூலை.

அறுபது வயது அமெரிக்கப் பெண் ஒருவரது கூற்றின் பிரகாரம் சேற்றுக் குளியலினால் முன்கோபம், மன இறுக்கம் ஆகியன அற்றுப்போய் விடுமாம்.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பல நூற்றாண்டு காலத்திற்குமுன் வெளியான மருத்துவ நூலில் சேற்றுக் குளியல் என்ற ஸ்நான முறையை ஒத்த குளியல் தொடர்பான விடயங்களைக் காணமுடிகின்றது. அதில் உடல் முழுவதும் மண் பூசுவதும் பாதிக்கப்பட்ட அங்கத்திற்கு களிமண் வைப்பதும் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

அண்ணல் காந்தியடிகள் கூட வயிற்றுவலி மற்றும் வயிற்றுப் போக்கு போன்ற தொல்லைகளிலிருந்து குணம் பெறுவதற்கு வயிற்றில் மண்பற்று போடுவதையிட்டு பத்திரிகைகளில் வெளியான பேட்டிகளில் குறிப்பிட்டுள்ளார். சேற்றுக் குளியலுக்கு பயன்படுத்தப்படுகின்ற களிமண்ணில் உப்பு, உவர், சுண்ணாம்பு, கந்தகம் (SULPHUR), மைக்கா என்பன கலந்திருத்தல் கூடாது. மைக்கா கலந்த மண்ணாக இருந்தால் உடலுக்குத் தீங்கு ஏற்படலாம். இரத்தோட்டத் தடை, தூக்கமின்மை, நரம்பு முறுக்கேறுதல், தோல் நோய்கள் என்பவற்றிற்கு சேற்றுக் குளியல் உகந்ததாகும்.

இறுதியாக முத்துக் குளியல், பொன் குளியல், வெள்ளிக் குளியல், புகைக் குளியல், கறிவேப்பிலைக் குளியல், கொத்தமல்லிக் குளியல், நன்னாரிவேர் குளியல், சீரகக் குளியல், சூரியக் குளியல், நிர்வாணக் குளியல் பற்றியும், பூப்பு நீராட்டுதல் தொடர்பாகவும் சற்று ஆராய்வோம். முதலில் முத்துக் குளியலைப் பார்ப்போம். குளிப்பதற்கு முதல்நாள் இரவு தண்ணீர்த் தொட்டியில் நீரை நிரப்பிய பின்னர் ஐந்து அல்லது ஆறு முத்துக்களைப் போட வேண்டும். அடுத்தநாள் தொட்டி நீரில் இறங்கி குளித்தால் தோஷங்கள், வாயுத் தொல்லை என்பன பறந்துபோகும். அதேவேளை இனம் தெரியாத இன்பம் உண்டாகும்.

இனி பொன் குளியலை நோக்குவோம். இதற்கும் முதல் நாளே தொட்டியில் தண்ணீரை நிரப்பி வைக்க வேண்டும். பின்னர் பத்து சவரண்கள் தங்கத்தை அல்லது பத்து அல்லது பதினைந்து சவரண் மதிப்புள்ள தங்கச்சங்கிலியை நீரினுள் அமிழ்ந்து விடும்படி போட்டு வைக்க வேண்டும். அடுத்த நாள் விடிகாலை அந்த நீரில் உடலை மூழ்கி முப்பது நிமிடங்கள் வரை குளித்தால் வாதம் நீங்கும். பித்தம், மயக்கம் என்பன மறையும். அதேவேளை ஆண்மை பலம் விருத்தியடையும்.

அடுத்து புகைக் குளியலின் போது பெண்கள் தலை குளித்த பின்னர் ஈரக் கூந்தலை ஒரு துணியோடு சுற்றி அள்ளி முடிந்து கொள்ள வேண்டும். கூந்தலின் ஈரலிப்பு ஓரளவு நீங்கும். இருப்பினும் குளியலினால் ஏற்படுகின்ற சுகத்தை முழுமையாகப் பெறுவதற்கு கூந்தல் நெருப்புத்தணலில் படாதவாறு சாம்பிராணிப் புகையை முகர வேண்டும். உடனே தலைப்பாரம் நீங்குவதோடு செவிமந்தம் பறந்து போகும்.

செண்பகப் பாண்டியரின் மனைவி புகைக் குளியல் மேற்கொண்டார் என்பதை திருவிளையாடல் புராணம் எடுத்தியம்புகின்றது. ஏலவே புகைக் குளியலானது தென் இந்தியாவில் தொன்று தொட்டு நடைமுறையில் உள்ளமை நிரூபணமாகின்றது.

கறிவேப்பிலை, கொத்தமல்லி, நன்னாரி, சீரகம் போன்ற குளியலில் ஈடுபட்டால் சூடு தணிவதுடன் மருத்துவ ரீதியில் பூரண சுகத்தைப் பெறலாம்.

சூரியக் குளியலை எடுத்துக் கொள்வோமானால் இது ஆஸ்மா நோயாளிகளுக்கு மிகவும் அவசியமான குளியலாகும் என்பது யதார்த்தமாகும். காலையில் ஒன்பது மணிக்கும், பத்து மணிக்கும், பின்னேரங்களில் மூன்று மணிக்கும், நான்கு மணிக்கும் இடையில் இதனை வெற்றிகரமாக மேற்கொள்ளலாம். வியர்வை அதிக அளவு வெளியேறினால் குளியலை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

உடலின் உள்ளேயுள்ள வேண்டாத நச்சுப் பொருள்களை தோலின் வழியே வியர்வையாக வெளியேற்றி ஆஸ்மா நோய் குணமடைவதற்கு சூரியக் குளியல் ஒரு நல்ல இயற்கை மருந்தாகும் எனவும் கொள்ளலாம்.


கீழைத்தேச நாடுகளில் நிர்வாணக் குளியல் மேற்கொள்ள முடியாது. கலாசார சீரழிவை ஏற்படுத்திவிடும் என்று சமூகம் இதனை முற்றாகப் புறக்கணிக்கின்றது. இருப்பினும் குளியல் அறையின் கதவைப் பூட்டிவிட்டு சிலர் நிர்வாணமாகக் குளிக்கின்றனர். இது தவறில்லை என்பது புத்திஜீவிகளது கூற்றாகும்.

பூப்பு நீராடுதலானது சிறுமிகளுக்கு பன்னிரண்டு வயதிலிருந்து பதினான்கு வயதிற்குள் நடைபெறும் மங்கள நிகழ்வாகும். பூப்பெய்துதல் என்பது இயற்கையாக பெண்களுக்கு ஏற்படும் மாறுதல் என்பதை நாமறிவோம். பொதுவாக ஆண்களைவிடப் பெண்கள்தான் தினமும் ஸ்நானம் செய்து பரிசுத்தம் பேண வேண்டும். ஏனெனில் திருமணத்திற்குப் பின் இன்னொரு உயிரை இப் பூவுலகில் தோற்றுவிக்கும் வல்லமை அவளிடம் உண்டு.

நம் நாட்டிலுள்ள சில புனித வழிபாட்டுத் தலங்களில் சுவாமி கடல் நீரில் தீர்த்தமாடுவதைக் காண்கின்றோம். ஆகவே பக்த அடியார்களும் சமுத்திரத்தில் நீராட வேண்டிய நிலை உண்டாகின்றது.

கடல் நீரில் உப்பு நிறைந்திருப்பதனால் தலைமயிரில் பிசுபிசுப்புத் தன்மை உண்டாகிவிடுகின்றது. உடலில் உள்ள சருமத் துவாரங்கள் உப்புகளினால் அடைக்கப்படுகின்றன. இதனால் நமக்குத் தெரியாமலே உடலில் சிறு பாதிப்பு உண்டாகின்றது. ஆகவே கடலில் குளித்தவுடன் தாமதியாது நன்னீரிலும் ஒருதரம் ஸ்நானம் செய்தல் அவசியம் ஆகும். தண்ணீர் என்பது பஞ்ச பூதங்களில் ஒன்று. ஏலவே சர்வதேச ஸ்நான முறைமைகளில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து தினமும் குளியலை மேற்கொள்ள வேண்டும். இதனால் நல்லாரோக்கியம் கிட்டுவதுடன் நீண்ட ஆயுளுக்கும் வழி பிறக்கின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

[முற்றும்]






ம், திரிசூலி, தூளி, கண்டகி, கோசி,
கிய ஏழு நதிகள் சேர்ந்த முக்தி
ண்டகி நதியின் 108 தீர்த்தங்கள்
வணி சங்கம தீர்த்தம் (பிரயாகை)
கங்கை தீர்த்தம், குமுத நதி தீர்த்தம்
க தீர்த்தம் (கங்கோத்தரி) யமுனா
ி கங்கா தீர்த்தம் (கோவர்த்தனம்)
சரயுநதி தீர்த்தம் (அயோத்தி) ஸ்ரீ
மது உளம் குளிர இராம நாத
வற்றி வழிபட்டதுடன் இராமேஸ்

வரம் கடற்கரையில் பிதிர்க் கடன்களையும் நிறைவேற்றினோம்.

சுவாமிதரிசனம் நிறைவேறிய பின் இராமர் பாதம் பதித்த கந்த மாதனம் என்ற இடத்திற்குச் சென்றோம். அங்கிருந்து பார்த்த பொழுது இராமேஸ்வரமும் கடலும் அழகாகக் காட்சி தந்தன. பின்னர் இலட்சுமண சுவாமி கோவிலுக்குச் சென்றோம்.

இராமேஸ்வரம் புனித தீர்த்தங்களில் நீராடிய பின்னர் அன்று இரவு அங்கு தங்கக் கூடாது என்ற விதி இருப்பதாகக் கூறினார்கள்.

இதன் காரணமாக நாம் நண்பகலிலேயே அங்கிருந்து புறப்பட்டு பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர், திருமறைக்காடு வேதாரணியேஸ் வரர், கோடிக்கரைச் சிவன் திருச்செந்தூர் செந்திலாண்டவர், மதுரை மீனாட்சி சோமசுந்தரேஸ்வரர் கன்னியாகுமரி, சுசீந்திரம், நவக்கிரக திருப்பதிகளான சூரியனார் கோவில் (சூரியன்) திருமங்கலக்குடி), திங்களூர் (சந்திரன் ) திரு ஆலங்குடி (குரு) திருநாகேஸ்வரம் (இராகு) கஞ்சனூர் (சுக்கிரன் ) திருநள்ளாறு (சனீஸ்வரர் ) திருவெண்காடு (புதன்) கீழ்ப்பெரும்பள்ளம் (கேது) திருப்புள்ளிருக்குவேளூர் (வைத்தீஸ்வரன் கோவில் - செவ்வாய்) மற்றும் திருக்கடையூர் கொல்லிமலை- அறப்பள்ளீஸ்வரர் எட்டுக்கை துர்க்கை அம்பாள் மூலிகைத் தோட்டம் ஞானாஸ்ரமம் ஆகியவற்றுக்குச் சென்று தரிசித்து வணங்கினோம்.

பின்னர் சென்னை திரும்பி மீண்டும் மயிலாப்பூர் கபாலீஸ்வரர், வடபழனி முருகன், பார்த்தசாரதி கோவில் ஆகியவற்றைத் தரிசித்து நாடு திரும்பி திருமுருகண்டி விநாயகரை வழிபட்டதுடன் யாத்திரையை நிறைவு செய்தோம்.

[யாத்திரை தொடரும்]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## நூல்: தாமோதரன்




சாவகச்சேரி இந்து தேசிய பாடசாலையின் தாமோதரன் சஞ்சிகை வெளி வந்துள்ளது. 108 ஆண்டுக் கல்விப் பாரம்பரியத்தை உடைய இந்து அன்னையின் கடந்த ஆண்டுக்கான பதிவுகளின் தொகுப்பாக 324 பக்கங்களில் சஞ்சிகை மலர்ந்துள்ளது.

சஞ்சிகையைத் தொகுத்தல், வடிவமைத்தல் ஆகிய பணிகளை கல்லூரி ஆசிரியர்களே மேற்கொண்டுள்ளனர். கல்லூரியின் தூரநோக்கு, பணிக்கூற்று, கல்லூரி பற்றிய அடிப்படைத் தகவல்கள், கல்லூரிச் சின்னம், கொடி, பா பற்றிய விளக்கங்கள் அழகான முறையில் நியாயிக்கப்பட்டுள்ளன. தாமோதரன் சஞ்சிகைகளை தொடர்ச்சியாக அவதானிப்பவர்கள் அவற்றை நியாயப்படுத்தலாகக் காண முடிகிறது. விடயத்தின் கனதி காரணமாக இதனை ஒவ்வொரு இதழிலும் இடம்பெறச் செய்கின்றனர் எனலாம்.

சிறப்புப் பகுதி, மாணவர் பகுதி என இரு பிரிவுகளைக் கொண்டு தமிழ், ஆங்கில மொழிகளில் அமைந்துள்ள நூலில் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து தரமான ஆக்கங்களைப் படைத்துள்ளனர். வளம் பலவும் மிக்கது இப் பாடசாலை என்பதை மலர் நிரூபித்துள்ளது. மறைந்த பேராசிரியர் கா. சிவத்தம்பியை நினைவு கூர்வதான ஆசிரியர் கருத்துப் பகுதியில் பேராசிரியர் குறித்த அடிப்படைத் தகவல்களை மலர் ஆசிரியர் க.முத்துலிங்கம் பதிவு செய்துள்ளார்.

108 வருட வரலாற்றையுடைய இச் சஞ்சிகையின் 16 ஆவது மலர் என்ற தகவலைத் தரும் அவரது கட்டுரை சிறப்பானது. ஆங்கிலப் பகுதியின் ஆசிரியர் திருமதி தே.கமலேஸ்வரன், கல்லூரியின் ஆங்கில பாடச் சித்திகளின் அதிகரிப்புக்கு மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார். ஆங்கிலக் கவிதையியல் குறித்த சில தகவல்களையும் தந்துள்ளார். இம்மலரை வாசிப்பதோடு நின்றுவிடாது ஆவணப்படுத்த வேண்டியதும் அவசியமாகும் நூலின் சிறப்புப் பகுதியில் பாடசாலை ஆசிரியர்களால் எழுதப்பட்ட 13 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலும் அவை ஆசிரியத்துவத்தைப் பற்றியதாகவுள்ளன. மாணவர்களுக்குரியதான தமிழ் மொழி சார்ந்து 13 கட்டுரைகள், 14 கவிதைகள், 03 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. ஆங்கில மொழி சார்ந்த 18 கட்டுரைகள், 4 கவிதைகள்,2 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்குச் சமமான இடமளிக்கப்பட்டிருக்கிறது.

2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற நிகழ்வுகளின் நிழலுருவ வண்ணப்படங்கள் நூலுக்கு அழகு சேர்க்கின்றன. கல்லூரி விழாக்களில் விருந்தினர் ஆற்றிய உரையிலிருந்து பல பகுதிகள் இந்த நூலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நூலின் அட்டைப்படம் கடந்த வருடத்தில் பதிவான நிகழ்வுகளின் அழகொளிரும் காட்சிகளாகத் தெரிகின்றன. ஆயினும் அவை நெருக்கமாக உள்ளடங்கியமையால் சஞ்சிகையின் அட்டை தெளிவுறவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

இன்று பிரபல எழுத்தாளர்களாகத் திகழும் பலர் ஆரம்ப காலங்களில் கல்லூரிச் சஞ்சிகைகளிலே எழுதிப் பழகியவர்கள் தான். இந்த வகைளில் சஞ்சிகையில் வாழ்த்துச் செய்திகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதை விட மாணவர் ஆக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என உணர்ந்து தாமோதரன் குழுவினர் செயற்பட்டுள்ளனர் எனலாம். இது பாடசாலைச் சஞ்சிகைகளுக்கு ஒரு முன்மாதிரி என்றால் மிகைப்படாது.

ச.லலீசன்,
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை




பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கத்தில் 40 வருடங்களாக சேவையாற்றி ஓய்வு பெற்ற கணக்காளர் திருமதி பரமானந்தத்துக்கு யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் பொன்னாடை போர்த்தி பதக்கம் அணிவித்து கௌரவிக்கிறார். (ம-13)



அல்வாய் குமிழடி அதிசய விநாயகர் ஆலயத்தில் தொடர் சொற்பொழிவாற்றியமைக்காக சைவப்புலவர் பொன்.சுகந்தனுக்கு இளைப்பாறிய அதிபர் கி.நடராசா கலைமாமணிப் பட்டம் வழ்ங்கிக் கௌரவிக்கிறார். (ம-8)

## நூல்: சங்க இலக்கிய பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள்



நன்னூலார் தந்த சூத்திரத்தில் உரைத்தபடி விளம்பி நாகனார் எனும் புலவரால் இயற்றப் பெற்றதென அறியப்படும் ''நான்மணிக் கடிகை''யும் மதுரைப் பூதஞ்சேந்தனார் இயற்றிய ''இனியவை நாற்பது''வும் கதிர் சரவணபவன் எழுதிய உரைசேர வெளிவந்திருக்கிறது.

சங்க இலக்கிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இரண்டு இவ்வாறு நூலுருப் பெற்றுள்ளமை இலக்கிய ஆர்வலர்களால் வரவேற்கப்படத்தக்க விடயமாகும்.

அறநெறி வாழ்வுக்கு வழிகாட்டும் நூல்களான இனியவை நாற்பதும், நான்மணிக் கடிகையும் இன்றைய தலைமுறைத் தமிழர்கள் கற்றுணர்ந்து வாழ்தல் வேண்டும் எனும் நோக்கிலேயே வெளியிடப்பட்டுள்ளது.

அதில் எடுத்துக் கூறப்பட்டுள்ள தமிழ் மக்களின் விழுமியங்களை இழக்காது பேண வேண்டும் என்ற விருப்பை ஆசியுடன் அணிந்துரை வழங்கியுள்ள பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் கருத்துக்களும் கவனத்தில் கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளன.

உரை எழுதியுள்ள கவிஞர் சரவணபவன் மாணவர் நன்கு கற்றுணரத் தகுந்த தெளிந்த தமிழில் விளக்கம் தந்துள்ளார் சிறந்த சமயத் தொண்டரும் வட்டுக்கோட்டை சித்த மருத்துவ பரம்பரையில் பிறந்தவரும் ஆலய திருவூஞ்சல் பாடல்களை யாத்து இசைக்கும் திறன்மிக்கவருமான உரையாசிரியர் வில்லிசைத் திறமையும், நாட்டார் பாடல், பட்டிமன்றம் போன்ற நிகழ்வுகளில் விருப்போடு ஈடுபடும் ஆற்றலுள்ளவருமாவார்.

அவரது உரையால் மேன்மையுறும் இந்த இலக்கியத் தொகுப்பு நூலின் வரவு தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் யாவரையும் பெருமைப்படுத்துவதாகும்.

தமிழ் இலக்கியச் சிறப்புக்களைப் பேணும் வகையில் வெளியிடப்பட்ட இந்த நூலைத் தமிழுலகம் வரவேற்கும் என நம்புவோம். இத்தகைய சங்க இலக்கிய நூல்களை வெளியிட்டு அழியாது காக்கும் பணிக்கு உதவுதல் நலமானதாகும்.

- மகேஷ்.

## நீங்களும் கவனியுங்கள்

இன்று டெங்கு பரவுதலை கட்டுப்படுத்துங்கள் என்ற செய்தி ஏதாவது ஒரு பத்திரிகையில் வந்து கொண்டு தான் இருக்கிறது. அதனால் வீடுகளை வீதிகளை நிறுவனங்களை சுத்தமாக வைத்திருங்கள் என்ற அறிவுறுத்தல்களை சுகாதாரப் பகுதியினர் விடுக்கிறார்கள். அண்மையில் மானிப்பாய் பகுதியில் சுகாதாரப் பகுதியினர் தாம் என சொல்லி எதுவித அடையாளங்களையும் உறுதி செய்யாது வீடுகளுக்கு வந்து உங்கள் வீட்டில் உள்ள கழிவுப் பொருள்களை ஏற்றிச் செல்ல வந்துள்ளோம் என்று வீட்டு உரிமையாளர்களிடம் கூறியிருக்கிறார்கள்.

வீட்டு உரிமையாளர்களும் டிரக்டரில் வந்தபடியால் உண்மையாக இருக்குமோ என்று சிந்தித்தாலும் அவ்வாறு பொருள்கள் இல்லை என்றதையும் சட்டை செய்யாது அவர்கள் வீடுகளில் இருந்த கழிவுப் பொருள்களை ஏற்றுகிறோம் என்று ஏற்றியிருகிறார்கள்.

சரி வாகனத்தில் வந்தபடியால் ஏற்றிச் செல்லட்டும் என்று உரிமையாளர்களும் விட்டு விட்டார்கள். அவர்கள் அதனை ஏற்றிச் சிறிது தூரம் சென்று அவற்றை பிரித்து அதனுள் இருந்த இரும்புப் பொருள்களை எடுத்துவிட்டு ஏனைய பொருள்களை ஒழுங்கையின் நடுவிலே சிந்திவிட்டு சென்றிருக்கிறார்கள்.

அதனுள் இருக்கும் போத்தல் ஓடுகள் அந்த வீதியில் செல்லும் எத்தனை சிறுவர்களின் கால்களைப் பதம் பார்க்குமோ தெரியவில்லை.

தற்போது பழைய இரும்புப் பொருள்களுக்கு விலை அதிகரித்திருக்கிறது. எங்கெல்லாம் இரும்பு இருக்கிறதோ அவை திடீர் திடீரென காணாமல் போய்விடுகிறன. அது ஒருபுறமிருக்க இது எவ்வாறான உத்தி என்று பார்த்தீர்களா....? நாளை உங்கள் வீடுகளுக்கும் இவ்வாறான சுகாதாரப் பிரிவினர் வாகனங்களில் வருவார்கள்...அவதானமாக இருங்கள்.

நிகழ்யா, மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்கும் மனமும்

நானா? நீயா? என்ற போட்டி இன்று எல்லா மட்டத்திலும் எழுந்திருக்கின்ற ஒரு கேள்வி. ஒரு சமயம் மனதுக்கும் வாக்குக்கும் இடையில் கூட இந்தப் பிரச்சினை வந்துவிட்டதாம். அதாவது இரண்டுக்குள்ளும் யார் பெரியவர் என்ற சண்டை. மனம் நினைக்கிறது, வாக்கு பேசுகிறது.

வாக்கு தேவதைதான் முதலில் சண்டைக்கு வந்தது. அதாவது எந்தத் தேவதையின் உதவியால் வாக்கு பேசுகின்றதோ அதுதான் வாக்கு தேவதை.

வாக்கு தேவதை மனதைப் பார்த்து ''ஏ மனமே! நீ எவ்வளவோ விடயங்களை நினைக்கிறாய்; உண்மைதான். நீ நினைப்பதை வெளியில் சொல்வது நான் தானே. நான் பேசாமல் இருந்துவிட்டால் நீ நினைப்பது என்பது வெளியே யாருக்குத் தெரியப் போகிறது? அதாவது உன்னைப் பற்றி வெளியில் தெரிவதற்கு நான்தான் காரணம். அதனால் தான் பெரியவன்'' இது வாக்கு தேவதையின் வாதம்.


இதற்கு மனம் பதில் கூறியது; ''இதோ பார் நீ பேசுவதற்கு விடயம் கொடுப்பதே நான் தானே. நான் நினைக்கவில்லை என்றால் நீ எப்படி பேச முடியும். முதலில் நான் சிந்திக்கிறேன். அதன்பின் அதை நீ வார்த்தையில் வெளிப்படுத்துகிறாய். அதனால் நான் தான் பெரியவன்'' என்று கூறியது மனம். இப்போது மனது பெரிதா? வாக்குப் பெரிதா? இதுதான் அவர்களுக்குள்ளே போட்டி. எண்ணினால் தானே பேச்சு என்கிறது மனம். பேசினால் தானே எண்ணமே வெளியில் தெரியும் என்கிறது வாக்கு. இப்போது என்ன செய்யலாம். ''சரி, நமக்குள் சண்டை வேண்டாம். நேராகப் பிரம்மாவிடம் போவோம், அவர்தானே எல்லாவற்றையும் படைத்தவர்; உண்டாக்கியவர். அவர் என்ன சொல் கிறார் என்று கேட்போம்'' என்று முடிவு செய்து விட்டு இரண்டு பேரும் பிரம்மாவிடம் போனார்கள்.

''பிரம்மா சிறிது நேரம் யோசித்துப் பார்த்துவிட்டு படைப்பு ரீதியில் பார்த்தால் நான் முதலில் மனதைத் தான் படைத்தேன். அதனால் மனம் தான் பெரிது" என்று சொல்லி விட்டார். இதைக் கேட்டதும் வாக்கு தேவதைக்கு மிகவும் வருத்தம். ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டு அழ ஆரம்பித்துவிட்டது. அப்போது மனது அங்கே வந்து ஆறுதல் சொல்லியது. ''அழாதே தேவி; நமக்குள் யார் பெரியவர் என்பதை நாமே ஒரு பரீட்சை வைத்துத் தீர்மானித்துக் கொள்வோம். அதற்கு நீ தயாரா?'' என்றது.

வாக்கும் சரி என்றது.''அதாவது இப்போது நாங்கள் இரண்டுபேரும் என்ன செய்வோம் என்றால் வேகமாக ஓடிப்போய் பிரம்மத்தைப் பார்த்துவிட்டு இதே இடத்துக்குத் திரும்பிவந்துவிட வேண்டும். எம்மில் யார் முதலில் திரும்பி வருகிறார்களோ அவர்தான் பெரியவர் என்றது மனம். உடனே போட்டி ஆரம்பமாகியது. இரண்டும் பிரம் மத்தை நோக்கி ஓட ஆரம்பித்தன. மனம் மனோ வேகத்தில் போனது. மனோ வேகம் என்றால் அது எவ்வளவு வேகம் தெரியுமா?

இப்போது நீங்கள் மனதாலேயே அமெரிக்காவுக்குப் போக வேண்டும் என்றால் எவ்வளவு நேரம் ஆகும். நினைத்தாலே போனது போன்று அவ்வளவு வேகம்.

இந்த வேகத்தில் மனம் பிரமத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. வாக்கால் அவ்வளவு வேகமாகப் போக முடியவில்லை. வாக்கு தேவதையால் ஓட முடியவில்லை. கொஞ்சத் தூரம் போய்ப் பார்த்தது. அதற்கு மேல் போக முடியவில்லை. நின்றுவிட்டது. முன்னால் ஓடிய மனம் நீண்டகாலம் கழித்து திரும்பி வந்தது. வரும் வழியில் நின்று கொண்டிருந்த வாக்கு தேவதை அதைப்பார்த்தது. ''பிரம்மத்தைப் பார்த்துவிட்டாயா?'' என்று கேட்டது. ''எங்கே பார்ப்பது, பிரம்மம் என்பது எனக்கு எட்டாத ஒரு விடயம் என்பதைத் தெரிந்து கொண்டு திரும்பி வந்துவிட்டேன்'' என்றது மனம். ''அது எனக்கும் எட்டாத விடயமாகத்தான் இருக்கிறது. அதனால் எமக்குள் போட்டி வேண்டாம். இரண்டு பேரும் நண்பர்களாக இருப்போம்'' என்றது வாக்கு. அன்றிலிருந்து மனமும் வாக்கும் நெருக்கமாகி விட்டார்கள்.



எல்லோருக்கும் மனதும் வாக்கும் எவ்வளவுக்கு நெருக்கமாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கு உலகத்தில் மரியாதை கூடும். மனம்- வாக்கு-செயல் மூன்றும் ஒன்றாக இருக்க வேண்டும். என்ன சொல்கிறோமோ அதைச் செய்ய வேண்டும்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## பொதுப் பாதையைத் தடுக்க எவருக்கும் உரிமை கிடையாது

இப்போ சில நாள்களாக நல்லூர் சந்தையைச் சுற்றி தடி நட்டுக் கயிறு கட்டி மக்கள் நடை பாதையை தடுத்து யாழ். மாநகர சபை ஆணை என விளம்பரம் ஒட்டியுள்ளனர். தம்பி பிரபாகரன் கோலோச்சியக் காலத்தில் தமிழில் ஈருளி, உந்துருளி நிறுத்தத் தடை என புதுக் கோலத்தை கண்ணுற்றேன். மாநகர சபை அடுத்த வீட்டு வேலியையும் தாண்டி நல்லூர் பிரதேச சபைக்குரிய ஆடிய பாத வீதி தெற்கு எல்லையையும் ஆக் கிரமித்து மாநகர சபையின் பெயரையும் கெடுத்து சந்தைக்குச் செல்லும் சைக்கிள்களுக்கு வரி அறவிடலாம். ஆனால் ஆடியபாதம் வீதியில் உள்ள நல்லூர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் ஏனைய கடைகளுக்கும் வரும் சைக்கிள் செலுத்துவோர் மாநகர சபைக்கு வரி இறுக்கவேண்டுமா? அடாவடித்தனமாக சைக்கிள்களை எடுத்துச் சென்று கூடிய பணம் அறவிடுகிறார்கள். இது விடயம் யாழ். மாநகர சபைக்குத் தெரியுமா? மக்கள் நட மாடும் நடைபாதையைத் தடுக்க யாருக்கும் உரிமை கிடையாது வாகன நெரிசல் கூடிய ஆடியபாத வீதியில் தற்போது கனரக வாகனங்கள் அதிகமாகப் பயணிக்கின்றன. நடைபாதையில்லாமல் விடுமேயானால் மக்கள் அடிபட்டு சாக வேண்டிவரும். சந்தையைக் குத்தகைக்கு எடுத்தவர்கள் பணம் சேர்ப்பது ஒன்றே குறியாக இல்லாமல் பொதுஜன போக்குவரத்துக்கு அவர்கள் நடைபாதையின்றி விபத்துக்குள்ளாவதையும் கருத்திற் கொண்டு செயற்பட்டால் நல்லது. இது பல பொது மக்களின் நன்மை கருதியே எழுதுகின்றேன்.

**எம்.எஸ். மயில்வாகனன் .**

## கொக்குவில் மயானத்தை கவனிப்பார்களா?

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குள் இருக்கும் கொக்குவில் பொது மயானம் நான்கு பக்கமும் உயர்ந்த சுற்று மதிலும் இரும்புக் கேற்றும் கொண்டதாகும். இதன் அமைவிடம் யாழ். பல்கலைக்கழகத்தை மேற்கு எல்லையாகக் கொண்ட சூழலில் அமைந்துள்ளது. இதற்கெனக் கடமையில் காவலாளியும் உள்ளார். பிரதேச சபையின் உபஅலுவலகத்தில் பணம் செலுத்தி அனுமதி பெற்றுத்தான் தகனம் செய்வதற்கு பூதவுடலை கொண்டு செல்ல முடியும். இவ்வாறு இருக்கும்போது மயானத்துக்குள் பூதவுடலை வைத்து எரிக்கும் சிறு சதுரத்தை விட ஏனைய பகுதி பற்றைக்காடாகவும் இறந்த கோழி மற்றும் கழிவுகள் கொட்டும் இடமாகவும் இருப்பதனால் பூதவுடலை இந்து முறைப்படி கிரியைகள் செய்து கொள்ளி வைத்து வெளியேறும் வரைக்கும் மூக்கைப் பொத்திக் கொண்டு வெளியேற வேண்டியுள்ளது. தகனக் கிரியைக்காக செல்பவர்கள் இந்தச் சுற்று வட்டத்தில் சாதாரண ஒரு பொது மயானத்தின் நிலை இவ்வாறு இருப்பதையிட்டு கவலை தெரிவிக்கின்றனர் உரியவர்கள் இதை கவனத்தில் கொள்வது சூழலுக்கும், பொதுச் சுகாதாரத்துக்கும் நன்மை தரும்.

**ஆறுமுகம், கொக்குவில்**

## கொழும்பு – யாழ்.பயணத்தில் நடு இரவில் நடு வீதியில் பயணிகள்

நீண்ட நாள் விடுமுறையை மேற்கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வருகின்ற தனியார்/அரச பஸ்களில் ஆசனங்கள் அனைத்தும் நிரம்பி இருந் தன. நானும் எனது பயணம் குறித்த (நாள்/நேரம்) நிச்சம் இன்மை காரணமாக முற்பதிவு செய்யவில்லை. பஸ்தரிப்பிடத்துக்குச் சென்றேன். பஸ் கிடைக்கும் என்ற 20-30 நிமிட எதிர் பார்ப்பில் ஒரு பஸ் நடத்துநர் வந்தார். அவரிடம் ஆசனம் இருக்கா? என்று கேட்டேன். ஆம் என்றார். என்னுடன் இன்னும் 5 பேர். அழைத்து வந்து தரிப்பிட நிலைய நுழைவாயிலுடன் நின்ற பஸ்ஸில் ஏற்றினார். இதில் ஏற்கனவே 4 பேர் மாத்திரம் இருந்தனர். ஒரு ஆசனத்துக்கு 600 ரூபா என்றார் கொடுத்தேன். பற்றுச்சீட்டுத் தந்தார் பற்றுச்சீட்டில் இருந்த பெயர் முகவரி எல்லாம் யாழ்ப்பாணத்துக்குரியன. அந்த பற்றுச் சீட்டுத் தரும் போது அருகில் நின்றவர் யாழ்- கொழும்பு பஸ் சேவையில் ஈடுபடும் 3-4 பஸ்களின் உரிமையாளர் என்பதனை அறிந்து கொண்டேன். 8.20 மணியளவில் தரிப்பிடத்திலிருந்து பஸ் புறப்பட்டது. மேலே குறித்த இரண்டு நபர்களும் பஸ் சாரதி, இரண்டு நடத்துநர்கள் ஏறக்குறைய 15-20 பயணிகளுடன் பஸ் புறப்பட்டது. புறக்கோட்டை ரயில் நிலையத்தை அண்மித்த பகுதியில் ஒரு நபர் பஸ்ஸில் ஏறினார் அவர் இந்த 40 ஆசனங்கள் எனது பதிவு நிலைய பயணிகளுக்கு உரியது. ஆகவே பஸ்ஸுக்குள் உள்ளவர்கள் அனைவரும் 40 ஆம் இலக்க ஆசனத்திற்கு பின் போய் அமருமாறு கட்டாய வேண்டுகோள் விடுத்தார். நான் மறுத்து வாக்குவாதம் செய்தேன்.

நான் என் ஆசனத்தில் இருந்து நகரவில்லை. நானும் மற்றும் சில பயணிகளுமாக அவருடன் வாக்குவாதம் செய்தவாறு நீர்கொழும்பு வரை சென்றோம். நீர்கொழும்பு தான் அவருடைய ஆசனப் பதிவகம். அங்குதான் அந்த 40 பயணிகளும் ஏறுவதற்காக காத்துக் கொண்டு இருந்தனர். என்னால் பஸ் பயணம் தாமதிக்கின்றது என்பதற்காக நான் இறுதி ஆசன வரிசையில் சென்று அமர்ந்தேன்.

சிறிது நேரத்தில் அவ் இடத்துக்கு வந்த நபர் கடைசி வரிசை ஆசனங்களில் உங்களுக்கு உரியது அல்ல. நீங்கள் பணம் செலுத்தவில்லை இறங்குங்கள் என்றார். நான் பற்றுச் சீட்டு காட்டியும் ஏற்கவில்லை. என்னையும் ஏனைய சில பயணிகளையும் இறக்குவதில் குறியாக இருந்தார் அதிகாலை 1.30 மணி வரை இதே போராட்டம். இறுதிவரை நாம் மசியவில்லை. சில நிமிட நேரத்தில் சில நபர்களுடன் அவர் வந்தார். தகாத வார்த்தை பிரயோகத்தை மேற்கொண்டபடி எங்களை தாக்க முற்பட்டனர் . அதற்கும் நாம் இடம் கொடுக்கவில்லை. இறுதியில் பஸ்ஸை சிறிது தூரம் நகர்த்தினர். அது கொழும்பு - புத்தளம் பிரதான வீதி போல் தென் பட்டது எங்களுக்கு இடம் வலம் தெரியவில்லை அங்கு மீண்டும் இதே பாணியில் காட்டு மிராண்டித்தனம் தொடர்ந்தது எமக்கு வேறு வழியேதும் தெரியவில்லை அதனால் பஸ்ஸை விட்டு இறங்கினோம். அவ்வளவு தான் நடு வீதியில் நாங்கள். மீதிப்பணமும் இன்றி கட்டிய பணமும் இன்றி நடு வீதியில் நாங்கள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பஸ்களில் இப்படியும் நடக்கிறது.

**வி.கோபி**

## ஆட்டம் பாட்டம்தான் கொண்டாட்டம் இல்லை

குடாநாட்டைப் பொறுத்தவரையில் சொகுசு வாழ்க்கையைத்தான் மக்கள் அதிகம் விரும்புகின்றனர் என்றாலும் இதற்கு விதிவிலக்கானோரும் இருக்கத் தான் செய்கின்றனர்.

சொகுசுப் பயணங்களே வேண்டாம் சாதாரணமாகப் பயணித்தாலே போதும் என்ற மக்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இவர்களைக் குறி வைத்தே பார்த்து நிற்கின்றனவாம் அரைச் சொகுசுப் பஸ்கள். ஆங்காங்கே பெட்டிக் கடைகளில் பதிவுகளைச் செய்து மக்களை அள்ளிக் கட்டிக் கொண்டு பயணத்தைத் தொடரும். அப்பாடா இடங்கிடைத்து விட்டது. ஒருவறாகப் பயணிக்க வேண்டியதுதான் என்று நிம்மதிப் பெருமூச்சுவிட்டால் எங்கே கிடைக்கும் நிம்மதி?

வானைப் பிளக்கும் அளவுக்கு பாட்டுக் காதைப் பிளக்க வைக்குமாம். அப்படிப் பாட்டுப் போடுகிறார்கள் என்றார் பயணி ஒருவர் ஆதங்கத்துடன். அதுமட்டுமன்றி 'இது அரை சொகுசுப் பஸ் அல்ல. இதுதான் முழுச் சொகுசுபஸ்' என்று கூறினார் நக்கலாக. இரவுப் பயணம் செய்யும் பயணிகள் தாம் ஓரளவாவது ஓய்வு எடுக்கத்தான் எண்ணுவார்கள். இரவுமுழுவதும் நித்திரை கொள்ளாது இருக்க எவரால்தான் முடியும்.

அதுமட்டுமா? இந்தப் பயணங்களின் போது சிறுவர், வயோதிபர்கள் , நோயாளர்களும் பயணிக்கத்தான் செய்வார்கள். இவர்களது நிலைமைகளை ஏன் எண்ணிப் பார்க்கத் தயங்குகின்றனர் பஸ் உரிமையாளர்கள்.

அதுமட்டுமா இவர்களது பாட்டுக்கு வலுச்சேர்க்கின்றன வீதிகள். இருக்கைகளில் இருந்து போகக் கூட முடியாத அளவுக்கு எழும்பி நின்று ஆட்டம் போடக் கூடியளவுக்கு செய்கின்றன வீதிகள். பாட்டோடு ஆட்டமும் சேர்த்து பயணம் தொடர்கின்றது. எங்கே நிம்மதி என்று கேட்கின்றனர் பயணிகள்.

தூரப் பயணங்களின் போது சலிப்பேற்படாமல் இருக்க பாடல்கள் ஒலிக்க விடப்படுவது தேவை தான். ஆனால் காதைப் பிளக்கும் வகையில் ஒலிக்க விடப்படுவது தேவைதானா என்பதுதான் கேள்வி. இனியாவது உணர்வார்களா, உணர்ந்து செயற்படுவர்களா என்று கேட்கின்றனர் பயணிகள்.

**பாதிக்கப்பட்ட பயணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடைகால அழகுப் பராமரிப்பு

நமது நாட்டுத் சீதோஷ்ண நிலை பெரும்பாலும் வெப்பமாகவே இருக்கும். கடும் கோடைக் காலத்தில் அழகு, ஆரோக்கியம் என்பவற்றைப் பாதுகாக்க சில வழிமுறைகள்.

நமது சருமத்தில் நிறத்தைத் தீர்மானிக்கும் நிறமிகள் (Melanin pigments) உள்ளது. அதிக நிறத்தை உடையவர்களுக்கு இது குறைவாகவும் தோலின் அடிப் பகுதியிலும் இருக்கிறது. அதனாலேயே அவர்கள் வெயிலில் சென்றவுடனேயே சருமம் சீக்கிரம் சிவந்து விடுகிறது. அதிகமாகவும் அவர்கள் சருமப் பாதிப்பை அடைகிறார்கள். ஆனால் நிறம் குறைந்தவர்களுக்கு இந்த நிறத்தைத் தீர்மானிக்கும் நிறமிகள் அதிகமாக இருக்கின்றன. மேலும் தோலுக்கு மிக அருகில் இருப்பதால் சூரிய ஒளியினால் அதிக பாதிப்பை அடைவதில்லை. வெயிலினால் சருமப் பாதிப்பை அடைபவர்கள் அவ்வப்போது அழகு நிலையம் சென்று ஃபேஷியல், ப்ளீச் செய்யும்போது முகம் பளிச்சென இருக்கும்.

கோடைக்காலத்தில் சருமம் அதிகமாக வியர்க்கும். வியர்வை அதிகமாகும் பொழுது நாற்றம் எடுக்கும். இதைப் போக்க இருவேளை குளித்து உடைமாற்ற வேண்டும். இறுக்கமான ஆடை அணியக் கூடாது. மெல்லிய பருத்தி ஆடையும், இள நிறமான ஆடையும் அணிவது நல்லது.

வெயில் காலத்தில் நமது தலைமுடிக்கும், குறிப்பாக சருமத்திற்கும் பாதுகாப்பு மிகவும் அவசியம். வியர்வையால் தலையில் அதிகமாக அரிப்பு எடுக்கும். பேன் தொல்லை அதிகமாகும்; முடி உதிரும். ஒருவித பக்ரீறியா சருமத்தை அரிக்க ஆரம்பிப்பதால் பொடுகுத் தொல்லையும் அதிகமாகும். பொடுகுத் தொல்லையைப் போக்க தற்பொழுது பொடுகு நீக்கி ஷாம்புகள் (Anti bacterial shampoo) வந்துள்ளன. அவற்றையோ அல்லது மூலிகைகள் கலந்த ஷாம்புவையோ உபயோகப்படுத்தலாம்.



சீயாக்காயிலுள்ள காரத்தன்மையினால், அதை உபயோகப்படுத்தினாலும், பொடுகுத் தொல்லை இராது. முட்டையின் வெண் கருவைத் தலையில் தேய்த்து, சிறிது நேரத்தில் அலசலாம். எதை உபயோகப் படுத்தினாலும் தலையை நீர் கொண்டு சரியாக அலசவில்லையெனில் பொடுகு அதிகரித்துவிடும்.

மிளகைப் பாலில் ஊறவைத்து அரைக்கவும். தலையில் எண்ணெய் தடவி லேசாக மசாஜ் செய்தால் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். தலையை ஒரு ஒரு பாகமாகப் பிரித்து அந்த இடத்தில் அரைத்த கலவையைத் தடவி பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் ஊறவைக்க வேண்டும். (லேசாக எரிச்சல் கொடுக்கும்) பின்பு தரமான சீயாக்காய்ப் பொடி, அல்லது ஷாம்பு கொண்டு தலையை அலசவும்.

சீயாக்காயை அரைக்கும் பொழுது அத்துடன் வேப்பிலை, வெள்ளை மிளகு, வசம்பு போன்றவைகளைச் சேர்த்து அரைத்தால், பொடுகுத் தொல்லையிலிருந்து தப்பிக்கலாம். (வசம்பிற்கு தொற்றைத் தடுக்கும் ஆற்றல் உண்டு)

**கண்களுக்கு...**

உடல் அதிக உஷ்ணமாவதால், கண் எரிச்சல் அதிகமாகும். வெள்ளரிக்காயை வட்டமாக வெட்டி, கண் மேலே வைத்துச் சிறிது நேரம் படுத்தால் கண்களுக்குக் குளிர்ச்சி கிடைக்கும். கண்களுக்கு அடியிலுள்ள கரு வளையமும் நீங்கும்.

**சருமப் பராமரிப்பு**

எண்ணெய் சருமம் உடையவர்களுக்கு தலைமுடிக்கு அருகிலேயே எண்ணெய் சுரப்பி உள்ளது. எண்ணெய் சுரப்பிகளிலிருந்து அதிகம் எண்ணெய் வெளிவரும். வியர்வைச் சுரப்பிகளிலிருந்தும் வியர்வை அதிகமாக வரும். இது குறிப்பாக இளவயதினரை அதிகமாகப் பாதிக்கும். பருத்தொல்லை கோடை காலத்தில் எண்ணெய் சருமத்தில் அதிகமாகிவிடும். அவர்கள் சாதாரண சோப்பை உபயோகப்படுத்தினால் அதிலுள்ள கொழுப்பு அமிலம் (fatty acid) எண்ணெய் சருமத்தில் சேரும் பொழுது பிரச்சினையாகி விடும். அவர்கள் எண்ணெய் விலக்கப்பட்ட சோப் வகைகளைப் (Oil free soap) பயன்படுத்த வேண்டும். இதே போல் Soap free face wash உண்டு. அதைப் பயன்படுத்தினால் ஃப்ரெஷ் ஆக உணரலாம். எண்ணெய் சருமம் உடையவர்களுக்கென்றே பிரத்யேகமாக எண்ணெய் விலக்கப்பட்ட க்ளென்சர், டோனர், மாய்சரைசர் உண்டு. அவற்றை உபயோகப்படுத்தி எண்ணெய் சருமத்தை உடையவர்கள் நல்லவிதமாகப் பாதுகாக்கலாம்.

**சருமப் பாதுகாப்புக்கான டிப்ஸ்**

வெள்ளரிக்காய், தர்பூசணி சாற்றைச் சம அளவு எடுத்துக் கொண்டு (1 தேக்கரண்டி சாறு) அதனுடன் ஒரு தேக்கரண்டி கடலை மா கலந்து முகத்தில் பூசி 10 நிமிடங்கள் கழித்துக் கழுவலாம்.

இரண்டு தேக்கரண்டி இளநீருடன் தேன் கலந்து முகம், கழுத்து, கைகள் என எங்கெல்லாம் சூரியஒளி அதிகமாகப்படுகிறதோ, அந்த இடத்தில் 10 முதல் 30 நிமிடங்கள் வரை ஊற வைத்துக் கழுவவேண்டும். இதனால் கருமை நீங்கி சருமம் பளிச்சென்று இருக்கும்.

வடிகட்டிய தேயிலைச் சாயத்தை எடுத்துக்கொள்ளவும். (இரண்டாம் முறை உபயோகப்படுத்தியதாக இருக்கலாம். அல்லது லைட்டான சாயமாக இருக்கலாம்.) முல்தானி மெட்டி பவுடர் ஒரு தேக்கரண்டி இரண்டு தேக்கரண்டி தேயிலைச் சாயம் கலந்து அரைமணி நேரம் ஊற வைத்துக் கழுவலாம். இந்தக் கலவையை வெயிலில் செல்வதற்கு முன்னும், சென்று வந்த பிறகும் உபயோகிக்கலாம்.

**குளிக்கும் பொழுது...**

வியர்வை நாற்றம் போக, குளிக்கும்பொழுது வெதுவெதுப்பான நீரில் சிறிது வேப்பிலையைப் போடவும். அதன் சாறு இறங்கிய பிறகு அதை எடுத்துவிட்டுக் குளிக்கும் நீரில் கலந்து குளிக்கலாம்.

ஒரு வாளி தண்ணீரில் 2 சிட்டிகை கற்பூரத் தூளைப் போட்டுக் குளித்தால் வியர்வை நாற்றம் அகலும்.

முகத்துக்கு கோடைக் காலத்துக்கென்று பிரத்யேகமாக பழவகை ஃபேஷியல் செய்வது நல்லது. அப்பிள், வாழைப்பழம், தர்பூசணி, தக்காளி, வெள்ளரிக்காய், இளநீர் இவைகளைக் கொண்டு முகத்திற்குப் பூசலாம். (சைனஸ் தொந்தரவு உள்ளவர்களைத் தவிர அனைவரும் இந்த முறையைப் பின்பற்றலாம்).

கோடைக்காலங்களில் வெளியில் அலைய நேரிடும்பொழுது இளநீர், தோடம்பழம், எலுமிச்சைப் பழ ஜூஸ் அருந்துவது நல்லது.

# இளமையுடன் திகழ மது, புகையைத் தவிருங்கள்




ஐம்பது வயதிற்கு மேல் ஆனாலும் ஆண்களில் சிலர் ஜம்மென்று அழகாக காட்சியளிப்பர். அதைப் பார்த்து பலரும் ஏக்கப் பெருமூச்சு விடுவதுண்டு. இளமையை தக்கவைத்துக்கொள்ள என்னதான் சாப்பிடுகிறாரோ? என்று நினைப்பதும் உண்டு. பெண்களுக்கு மட்டும்தான் அழகு குறிப்பா? எங்களுக்கெல்லாம் கிடையாதா என்று ஏங்கும் ஆண்களுக்கு இளமையை தக்கவைக்க எளிய டிப்ஸ்.

நமது வயதை முதலில் வெளிப்படுத்துவது சருமம்தான், அதனை ஒழுங்காக, சீராகப் பராமரித்தாலே நமது இளமை நீடித்திருக்கும். பெண்களின் சருமத்தை காட்டிலும் ஆண்களின் சருமம் 20 சதவிகிதம் கூடுதல் கடினத்தன்மையுடன் இருக்கும். ஆயினும் வயது கூடும்போது கொலாஜின் எனும் புரதம் குறைவதால் சருமத்தில் சுருக்கம் ஏற்படுகிறது. உடல் கூறுவியலின்படி பெண்களை காட்டிலும் ஆண்களுக்கு முதிர்ச்சி சில காலத்திற்கு பிறகுதான் தோன்றும், ஆனால் ஒரு சில பழக்கவழக்கங்களினால் ஆண்களுக்கு இயல்பான வயதை காட்டிலும் முதுமையான தோற்றம் காணப்படுகிறது.

ஆண்கள் அதிக அளவில் சூரிய வெளிச்சத்தில் பயணிப்பதாலும், மாசுள்ள காற்றைச் சுவாசிப்பதாலும் சருமம் பாதிக்கப்படுகிறது. எண்ணெய் அதிகமுள்ள உணவுகளை உட்கொள்வதாலும், சருமத்தில் முதுமை தோற்றம் தெரிகிறது. இதனை தடுக்க, முகத்தை பாதுகாக்கும் வகையில் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**தண்ணீர் மருத்துவம்**

இளமையை தக்கவைப்பதில் தண்ணீருக்கு முக்கிய பங்குண்டு. சருமத்தை மென்மையாக்குவதற்கும், பாதுகாப்பதற்கும் தினம் 6 டம்ளர் தண்ணீர் பருகுவது அவசியம் என்கின்றனர் அழகியல் நிபுணர்கள்.

தொடர்ந்து ஷேவிங் செய்வதன் காரணமாக முகத்தில் முதிர்ச்சி தோன்றும், அதனால் ஈரப்பதத்துடன் கூடிய ஷேவிங் கிரீமை பயன்படுத்துவது நல்லது. மேலும் ஷேவிங் செய்யும்போது முடிகள் வளர்ந்திருக்கும் திசையில் ஷேவ் செய்து, வெதுவெதுப்பான தண்ணீரால் முகத்தை கழுவ வேண்டும். அவ்வாறு செய்தால் முகம் வாடாமல் புத்துணர்ச்சியுடன் தோன்றும்.

**அன்டி ஆக்ஸிஜன் உணவுகள்**

ஆண்கள் என்றும் இளமையுடன் இருக்க தொடர்ந்த உடற்பயிற்சியும் பழங்கள், காய்கறிகள், பருப்பு வகைகள், உடலுக்கு குளிர்ச்சி தரும் இறைச்சிகள் மற்றும் மீன் போன்ற ஆரோக்கிய உணவுகளை உட்கொள்ள வேண்டும். உடல் திசுக்களை புதுப்பிக்கும் திறனுடைய ஆன்டி ஆக்ஸிஜன் குணம் நிறைந்த உணவுகளை உட்கொள்வதால், முகம் சுருக்கம் இல்லாமலும் மென்மையாகவும் காணப்படும். பசளிக் கீரை, அரிநெல்லிகள், கரட், தக்காளி, பச்சை தேநீர் போன்றவற்றையும் சேர்த்துகொள்வது மிகவும் நல்லது.

**புகை, மது தவிருங்கள்**

சருமத்தை இளமையுடன் வைத்திருக்க மது மற்றும் புகைப்பிடித்தலைத் தவிர்க்கவும். சிகரெட்டுகளில் உள்ள நிக்கொட்டின் உடலின் இரத்த ஓட்டத்தை குறைப்பதால் சருமத்திற்குத் தேவையான சத்துகள் கிடைக்காமல் சுருக்கம் ஏற்படுகிறது. இதனால் வயதான தோற்றம் எளிதில் வருகிறது.

**ஆழ்ந்த உறக்கம்**

சரியான உறக்கம் இல்லாமல் இருப்பதால் உடல் நிலை பாதிக்கப்படும் என்பதை அநேகமானோர் அறிவதில்லை. அது சோர்வையும், இளமையையும் பாதிக்கும். இரவில் குறைந்தது 6-7 மணி நேர ஆழ்ந்த உறக்கம் அவசியம் என்பதும் இதைத் தொடர்ந்து கடைபிடித்து வந்தால் மனதில் புத்துணர்ச்சி மட்டுமின்றி, உடல் ஆரோக்கியத்திலும், சருமத்திலும் பொலிவு ஏற்படும்.

**மகிழ்ச்சியே இளமைக்கு வழி**

இது தவிர, உடல் ஆரோக்கியத்திற்கும், தாம்பத்ய உறவுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஆரோக்கியமான உறவு இளமையை அதிகரிக்கும் என்றும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். அனைத்துக்கும் மேலாக, ஆண்கள் தமது கவலைகளை மறந்து மகிழ்ச்சியுடன் இருந்தாலே, முகத்தில் பொலிவும் இளமையும் கூடும். அதன்பின் பாருங்கள் நீங்களும் ஆணழகன்தான்.

# அப்பிளின் அழகு மகத்துவம்



தினமும் ஒரு அப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுக வேண்டிய அவசியமில்லை என்கிறது ஆங்கிலப் பழமொழி. ஆனால் அப்பிள் ஒரு அழகுக்கலை நிபுணரையே உள்ளே அடக்கியிருக்கிறது என்பது தான் லேட்டஸ்ட் அழகுமொழி!

* சருமத்தின் பளபளப்பை அதிகரிக்க, 2 மேசைக் கரண்டி அப்பிள் விழுது, 1/2 ஸ்பூன் பால் பவுடர், 1/2 ஸ்பூன் பார்லிபவுடர் பால் கலந்து முகத்தில் தேய்க்கவும்.
* அப்பிள் விழுது, தக்காளி விழுது, தர்பூசணி விழுது மூன்றையும் சம அளவு எடுத்து, பஞ்சில் முக்கி முகத்தில் ஒற்றி எடுத்தால் முகம் நல்ல பிரகாசமாகவும் குளுமையாகவும் இருக்கும்.
* அப்பிள்சாறு, வெந்தயத்தூள், சீயாக்காய்த்தூள் ஆகியவற்றை வெந்நீரில் கலந்து தலைக்குத் தேய்த்து அலசினால் முடி பிசுபிசுப்பு நீங்கிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org